
# பாரதமணி


தாரண ௵ ஐப்பசி மீ

விலை அணா 4

OCTOBER 1944


JL
N138BM
N44·12·4
210096


THE BHARATA MANI, MADRAS.




ஸன்லைட் சோப் காய்ச்சும் மற்றொருவன் சொல்லுகிறான் . . .

"'சுயசக்தி'யே சுயமாக் வெளுக்கும் நுரையின் இரகசியம். இந்த சக்திதான் ஆடைகளிலிருந்து தானாகவே அழுக்கைப் போக்க உதவுகிறது. சுய சக்தி வாய்ந்த சோப்பானது அழுக்கைத் தொட்டவுடன் அதைப் பற்றிக் கொள்ளுகிறது. ஆடைகளை ஸன்லைட் சோப்பின் நுரையில் நனைத்துப் பிறகு தண்ணீரில் அலசினவுடன் நுரையோடு அழுக்கும் போய்விடுகிறது."




# ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

S. 66-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு





மாத வெளியீடு

ஆசிரியர் : காரியாலயம் :

கா. சி. வேங்கடரமணி 34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

| மாலை 12 | OCTOBER 1944 : தாரண ஹு ஐப்பசி மீ | முத்து 4 |
|---|---|---|


## பொருளடக்கம்


| | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| | 'அட்டைப் படம்'—பஸ்சிம வாகினி, ஸ்ரீரங்கபட்டணம் | ... | |
| 1. | மினுக்கரிசி மோகம்—இராவ்பகதூர் - டி. எஸ். திருமூர்த்தி | ... | 259 |
| 2. | மாரியப்பனின் மனோரதம்—கே. வேங்கடாசலம் | ... | 263 |
| 3. | நாகரிகம் எது?—சிறுவை. மோகனசுந்தரன் | ... | 267 |
| 4. | மாத்ரு பூஜை—எஸ். வி. துரைசாமி | ... | 269 |
| 5. | மாயனூர்—ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் | ... | 272 |
| 6. | இந்தியாவின் துறைமுகங்கள்—ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி | ... | 274 |
| 7. | நக்ஷத்திரங்கள்—டி. பி. நவநீதகிருஷ்ணன், எம். ஏ. | ... | 278 |
| 8. | ஸஹஸ்ராரா அல்லது யோகாலய மித்ரபீடம்—கி. எஸ். ராமானுஜம், எம். ஏ., எல். எல். பி. லண்டன் | ... | 283 |
| 9. | ஸம்ஸ்கிருத கீர்த்தனை—ஸ்ரீ. யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் | ... | 290 |
| 10. | வசனக் காவியங்கள் | ... | 293 |
| 11. | போகிற போக்கில்—மணி | ... | 298 |
| 12. | இல்லறம்—வே. நாராயணன் | ... | 301 |
| 13. | விசாரதன்—ல. ரா. விசுவநாத சர்மா—(சிறுவர் பகுதி) | ... | 304 |
| 14. | விமர்சனம் | ... | 306 |



"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# க்ளூகோனேட் - D.

கால்ஸியம் க்ளூகோனேட் மாத்திரைகள் -

விடமின் D சேர்ந்தது

*

உட்கொள்ளக் கூடிய சாக்லட் வடிவில்

கர்ப்ப காலத்தில் கால்ஸியம் குறைவு, பலஹீனம்,
குழந்தைகளுக்கு எலும்பு ஏற்படுவது போன்ற
எல்லா சந்தர்ப்பங்களுக்கும் சிபார்சு செய்யப்படுவது

*

**I. T. L. தயாரிப்பு**

---

கவர்ன்மெண்ட் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங்
லாபரடரி

மல்லேச்வரம் P. O. :: பெங்களூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ் : **பெஸ்ட் & கம்பெனி லிமிடெட்.**

தபாற் பெட்டி நே. **63,** — மதராஸ்.

# ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸோஸைடி
லிமிடெட்.

**மிக்க முன்னேற்றமடையும் லைப் ஆபீஸ்**
**இதில் இன்ஷ்யூர் செய்யுங்கள்**

**1943 டிஸம்பர் 31-ந்தேதி முடிய வருடத்தின்**
**புதிய பாலிசிகள் ரூ. 5 கோடிக்கதிகம்**

ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி ....ரூ. **5,39,00,000**
அமுலிலுள்ள மொத்த வியாபாரம் ....ரூ. **24,82,00,000**

இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்

**ஏஜண்டுகள் தேவை**

வீபரங்களுக்கு எழுதவும் :—

மதராஸ் பிராஞ்சு :

**ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்**
**இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி,**
**லிமிடெட்.,**

107, அரண்மனைக்காரத் தெரு,
ஜி. டி. மதராஸ்.

திருவாங்கூர்

# ஆயுர்வேத டிபார்ட்மெண்ட்

## கவர்ன்மெண்ட் ஆயுர்வேத பார்மஸி

**மெயின் ரோட், திருவனந்தபுரம்**

ஆயுர்வேத கௌரவ டைரெக்டரின் திறமான மேற்பார்வையில் சாஸ்திரீய முறைப்படியே தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகள் யாவும் இந்தப் பார்மஸியில் கிடைக்கும்.

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக:

**கௌரவ டைரெக்டர்,**

**கவர்ன்மெண்ட் ஆயுர்வேத பார்மஸி,**

**திருவனந்தபுரம்.**

# 'பூஜா மலர்' பற்றி
# பத்திரிகை மதிப்புரைகள்

தாங்கள் அன்புடன் அனுப்பிய "பாரதமணி ஸரஸ்வதி பூஜா மலர்" எய்தப் பெற்றேன். மதிநுட்பம் நூலோ டுடைய நல்லறிவாளர் பலரால் வரையப் பட்ட அரிய கட்டுரைகளுட் சிலவற்றைப் படித்து மகிழ்ந்தேன். "கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட், டென் னாற்றுங் கொல்லோ வுலகு" என்ற பொய்யா மொழிக் கிலக்காகத் தாங்கள் பல்லாற்றானும் இத்தமிழ் உலகிற்குப் பெரு நன்மை புரிந்து வருகிறீர்கள். தங் கள் மலரின் நறுமணத்தை இத்தமிழ்க் கூறு நல்லுலகம் நுகர்ந்தின்புறுவதாகுக. தாங்கள் அன்புடன் மலர் அனுப்பிய தற்கு நன்றி பாராட்டுகின்றேன்.

—மஹாவித்வான்-ரா. இராகவையங்கார்

* * *

"இலக்கியப் பெருக்கும், கல்விப் பெருக்கும், வாழ்வை ஊட்டி வளர்க்கும் கருத்துக்களின் பெருக்கும் இல்லாமல், அரசியல், பொருளாதாரம் ஆகிய துறை களில் உண்மையான பெருக்கு எப்படி உண்டாகும் ?" என நாட்டின் மருமலர்ச் சிக்கு இன்றியமையாத இந்த உன்னத லக்ஷியத்தை உவகையுடன் வெளியிடு யிடுகிறார் ஆசிரியர் ஸ்ரீ கா. சி. வேங்கட ரமணி. அவர் வெறுமனே 'போகிற போக்கில்' பெரும் போக்காகச் சொல்லி விட்டு நின்றுவிடவில்லை. அவர் இந்த லக்ஷியத்தைத் தம்மாலான அளவு நிறை வேற்ற மனப்பூர்வமாக முயற்சித்திருப் பது "பாரத மணி" ஸரஸ்வதி பூஜா மலரின் ஒவ்வொரு பக்கத்திலும் மிளிர் கிறது. சன்மார்க்கம், விஞ்ஞானம், சரித் திரம், சிறு கதைகள், சங்கீதம், பொரு ளாதாரம், கல்வி, ரேடியோ, அரசியல், சட்டம், காவிய ரசனை முதலிய பல அம்சங்களும் இம்மலரில் இடம்பெற்று நிகண்டுமாதிரி விளங்குகிறது. ரஸிகர் "ஊருக்குப் பெரிய மனுஷர்" என்ற தமது 30 பக்க சிறு நாவலில் நமது சமூக வாழ்க்கையின் பல்வேறு அம்சங் களை வெகு அழகாகச் சித்திரித்திருக் கிறார். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் ஆசியையும் "பாரத மணி" பெற்று விட்டது.

—தினமணி

* * *

சுமார் 200 பக்கங்கள் கொண்ட இந்த மலரில் படிப்பதற்கு விஷயங்கள் நிறைய இருக்கின்றன. ரஸிகன் என்பவர் "ஊருக் குப் பெரிய மனுஷர்" என்று ஒரு ஸ்வா ரஸ்யமான 'கதை' எழுதி யிருக்கிறார். "கச்சேரி பிளான்" என்ற பெயரில் ய. மஹாலிங்க சாஸ்திரிகள் எழுதியுள்ள கட்டுரை புதிதாகக் கச்சேரித் தொழி லுக்கு வந்திருக்கும் இளம் பாடகர் பாடகிகளுக்கும், ரேடியோ புரோகிராம் அமைப்பவர்களுக்கும் மிகவும் உபயோக மாயிருக்கக்கூடும். இன்னும் பி. ஸ்ரீ. கி. சாவித்திரி அம்மாள், ந. பிச்சமூர்த்தி, வே. நாராயணன் முதலியவர்களின் எழுத்துக்கள் மலரை நன்றாகச் சோபிக் கச் செய்கின்றன.

—ஆனந்த விகடன்

* * *

ஸ்ரீ வேங்கடரமணி நியாய மன்றங் களில் வாதாடிக் கொண்டிருக்கையி லேயே கலைமகளின் நிழலில் ஒதுங்க ஆரம்பித்தார். பின்பு, கலைமகள் தவிர வேறு தெய்வமில்லை என்கிற கருத்து டன் பத்திரிகை யுலகில் 'பாரத மணி' யுடன் பிரவேசித்தார். மணியின் ஒலி 6 வருஷங்களாகக் கேட்டுக் கொண்டு வந்தது. இப்போது கலைமகள் தினத் தன்று இம்மலரை சரஸ்வதி பாத கமலங் களில் சமர்ப்பித்து 7-வது ஆண்டில்

புகுந்தார். ஸ்ரீ வேங்கடரமணியின் கலை பக்தி நாளுக்கு நாள் ஓங்குக. இம்மலரில் பிரமுகர்கள் பலரும் இடம் பெற்றிருக்கிறார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியின் ஆசியும் கலந்திருக்கிறது. கவி பாரதியை வேதவித்தாகக் கொண்டு டாக்டர் வே. ராகவன் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருக்கிறார். சிறு கதை புனைவதில் பேரெடுத்த ந. பிச்சமூர்த்தி "காணிக்கை" தந்திருக்கிறார். கிருஷ்ணமூர்த்தி இந்தியாவின் பிரிவினைப் பிரச்னையை எழுதியிருக்கிறார். புரசு. பாலகிருஷ்ணன் காளிதாஸன் உவமைகள் வியாசத்தில் கங்கையும் யமுனையும் கலக்கும் நேர்த்தியைப் பார்க்கிறோம். கல்வியைப்பற்றி டாக்டர் திருமூர்த்தியும், பி. ஸ்ரீயும் எழுதிய இரு அரியகட்டுரைகள் இம்மலருக்கு மணமளிக்கின்றன. 'ரஸிகன்' எழுதிய 'ஊருக்குப் பெரிய மனுஷ்யன்' என்கிற குட்டி நாவலும், ஜெமன் எழுதிய 'அவளும் அவனும்' என்ற கதையும் ருசிகரமானவை. இதைத் தவிர கவிதைகளும், மற்றக் கட்டுரைகளும் மிளிர்கின்றன. இவ் வருஷ மலர் நவீன மோஸ்தரில் படங்கள், கார்டூன்களைக் கொண்டிராவிடினும், விஷயங்களை அள்ளித்தருவதாகும்.

—பாரததேவி

* * *

இதன் ஆசிரியர் ஸ்ரீ K. S. வெங்கிடரமணியை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். இந்த விசேஷ வெளியீடானது ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் படத்துடனும், ஸ்ரீ ஆசார்யாளின் ஸ்ரீமுகத்துடனும், நன்மொழிகளிலிருந்து உலகத்துக்கு ஒரு தாயாகிய ஜகன்மாதாவின் உத்கர்ஷத்தை விளக்கக் கூடிய சிற்சில பாகங்களுடனும் துவக்கமாகிறது. அரிய கட்டுரைகள் தத்வம் நிறைந்ததாயும் போதிப்பனவாயுமிருக்கிறது.

—ஆர்ய தர்மம்

* * *

பத்திரிகைகளுள் புநிதமான 'பாரத மணி'யையும், அதன் ஆசிரியரையும் நாட்டிற்குப் புதிதாக அறிமுகப்படுத்த வேண்டியது அனுவசியம். ஆனால் இவ்வருஷ மலரின் சிறப்பைப்பற்றி எத்தனை புகழ்ந்து கூறினாலும் மிகையாகாது. ஆறுவருட காலமாக கஷ்டநஷ்டம் கருதாது தீவிர முயற்சியுடன் நிஷ்காமிய கர்மியாகப் பத்திரிகை மூலம் நாட்டிற்குப் பாடுபட்டுவரும் ஆசிரியர் வெற்றிச் சின்னங்களைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளும் காலத்தைத் தெற்றென எடுத்துக் காட்டுகிறது மலர்.

—மிராசுதார்

## Press Opinions on PUJA MALAR


We heartily welcome the Saraswati Puja Special Number of the *Barata Mani*, the well-known Tamil monthly journal zealously serving the cause of Indian culture and edited by Mr. K. S. Venkataramani (34, Alamelumangapuram, Mylapore). The Special Number makes ample amends for the slight delay in publication, necessitated by wartime exigencies, by the quality and number of the articles, stories and other reading matter that it provides. Almost encyclopaedic in scope, the 200-page Annual covers a topical and interesting canvas. The big budget of short stories, including a 30 page novelette by 'Rasikan' touches Indian social life in a variety of moods at various points. Informative articles include a critical appreciation of Sri Subrahmanya Bharati, the Tamil poet, by Dr. V. Raghavan, a speculative philosophical thesis by T. S. Ramanujam, an essay on capital by T. V. Radakrishna Sastri, an explanatory article on broadcasting by R. K. Viswanathan. another of those provocative discussions on planning a Carnatic music concert by Y. Mahalinga Sastri, an article on the future of

Soviet-Japanese relations by A. G. Venkatachari and another on the cloth famine in India by "M.A." A 'Srimukham' from H H. the Sankaracharya of Kumbakonam and a colured picture of Sri Kanchi Kamakshi Amman on the front cover add to the attraction of the Number. At only Re. 1 a copy, the Puja Annual offers bumper value indeed. —*The Hindu.*

* * *

Bharata Mani Saraswati Puja Number is an unusually bulky production in these days of paper scarcity and contains interesting articles on subjects, spiritual, artistic and literary, apart from topical short stories. The contributors include well-known Tamil writers like V. Narayanan, Dr. V. Raghavan, Swami Sivananda, K. S. Ramaswami Sastri, Dr. Trimurty and others. *Tamilians settled outside Tamil Nadu cannot do better than read Bharata Mani for latest trends and developments in Tamil thought and literature.* The first article is from Sankaracharya of Kamakoti Peet in which His Holiness pays a tribute to K.S.Venkataramani, the editor of Bharata Mani for expounding the 'Tatvic and Dharmic' way of life. The copy is priced one rupee and can be had from Svetaranya Ashrama, Mylapore, Madras.

—*The Bombay Chronicle.*



The Saraswathi Puja annual of the 'Bharatha Mani' is a volume of 258 pages containing a number of interesting articles in Tamil by some of the well known writers, led by a message from Jagathguru Sri Sankarachariar of Kamakoti Peetam. They cover a wide variety of subjects. One story by Rasika covers as many as 30 pages. On the whole the volume provides. entertaining reading matter for a few hours. —*Free Press.*

* * *

Sri M. S. M. Sharma, Editor, The Daily Gazatte, writes: I have just finished reading the Saraswati Pooja Number of Bharata Mani, which in my opinion is a very high class Tamil Journal worthy of emulation by your contemporaries.

* * *

Many articles of lively interest, short stories, poems and essays on politics and social life are contained in the Saraswathi Puja Malar of Bharata Mani, published by Svetaranya Ashrama, 34, Alamelu Mangapuram, Mylapore, Madras. Among the notable contributors to this issue may be mentioned Mr. N. Pichamurthi, Dr. T. S. Tirumurthi, Mr. K. S. Ramaswami Sastri, Pi. Sri and others. —*Indian Express.*


# கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்

(1904-ம் ஸ்தாபிக்கப்பட்டது)

கிளை ஆபீஸ்கள் :—**மன்னார்குடி, நாகப்பட்டணம், திருக்காட்டுப்பள்ளி.**

ஸப் ஆபீஸ்கள் :—**நன்னிலம், அய்யம்பேட்டை, திருவாரூர், மணப்பாறை.**

**30—9—44** எடுக்கப்பட்ட கோஷ்பாரா

| மூலதனம், செல்லுகள் | | | | சொத்துகள், இருப்புகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. மூலதனம் (வரவு வந்த பங்குத் தொகைகள்) | 3,29,960 | 0 | 0 | 1. ஆபீஸ் சாமான்கள், கட்டிடங்கள், ஸ்தாவரங்கள் | 16,354 | 1 | 2 |
| 2. க்ஷேம நிதிகள், காப்பு நிதிகள் | 2,20,456 | 13 | 10 | 2. இன்வெஸ்ட்டுமென்டுகள் :—சர்க்கார், கடன் பத்திரங்கள் இதர இனங்கள் | 707,254 | 12 | 11 |
| 3. தவணை, நடப்பு, சேவிங்ஸ் முதலிய டிபாஸிட்டுகள் | 2334,492 | 7 | 6 | 3. வரவேண்டிய கடன்கள், வசூலிக்கவேண்டிய உண்டியல்கள், அதிக பத்துகள் உள்பட | 1529,106 | 15 | 2 |
| 4. சில்லரை இனங்கள் | 141,519 | 13 | 1 | 4. சில்லரை இனங்கள் | 66,453 | 4 | 8 |
| 5. வருமானம் | 45,768 | 12 | 4 | 5. இருப்பு:—ரொக்கமும், இதர பாங்கிகளிலும் | 753,028 | 12 | 10 |
| மொத்தம் ... | 3072,197 | 14 | 9 | மொத்தம் ... | 3072,197 | 14 | 9 |


கும்பகோணம்
7-10-'44

**S. மகாலிங்கய்யர்**, B. A., B. L.,
*மானேஜிங் டைரெக்டர்.*

# உங்களுக்கு எது வேண்டும்?



உணவு,



துணி மணிகள்,



விறகு வேண்டுமா?




அல்லது ரயில் பிரயாணமா?

இரண்டும் கிடைக்காது. இந்தியா பூராவுக்கும் தேவையான பொருள்களை தங்கு தடையின்றி ஏற்றிவர ரயில்வேக்கள் உத்திரவாதமளிக்க முடியாது; கூடவே கணக்கற்ற பிரயாணிகளுக்கு இடவசதியளிப்பதும் சாத்தியமில்லை. போதுமான என்ஜின்கள், வண்டிகள், வாகின்கள் கிடையா.

இந்த நிலைமையில் ரயில்வேயின் கடமை என்ன என்பதில் சந்தேகமே வேண்டாம். உணவுப் பொருள், துணிமணிகள், விறகு இவற்றிற்குத்தான் முதற் சலுகை. அவை மக்கள் வாழ்க்கைக்கு **இன்றியமையாதவை**. அவைகளில்லாவிடில் மக்கள் மடியவேண்டியதுதான்.

ஆகையால்தான் பிரயாணி வண்டிகளில் இவ்வளவு கூட்டம் நெருக்கடி அதுவே சார்ஜுகள் அதிகரிப்புக்கும் காரணம். ஆகையால நீங்கள் வீட்டைவிட்டு வெளியூருக்குக் கிளம்பக்கூடாது. அப்படி இருந்தால்தான் உங்களுக்கு வேண்டிய பொருள்களை கஷ்டமின்றிப்பெற வசதியேறபடும்.

## பிரயாணத்தைக் குறையுங்கள்.

RAA 681 TM


ஜுபிடர் பிக்சாஸ்
மஹா
மாயா
P.U.சின்னப்பா
P.கண்ணாம்பா
M.S.சரோஜா
M.K.மீனலோசனி
நடித்தது
டைரக்ஷன் :—
T.R.ரகுநாத்
"இளங்கோவன்"
S.I.P
ரிலீஸ்

# மினுக்கரிசி மோகம்

[இராவ்பகதூர் - டி. எஸ். திருமூர்த்தி, B.A., M.B., & C.M.D., T.M., & H. Civil Surgeon (Retired) மாஜி பிரன்ஸிபால், ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி, சென்னை]

## மினுக்கரிசி மோகம், தேக ஸ்திதி மோசம், திடவலிமை நாசம்

தனி மனிதனுக்கு வாழ்வுந் தாழ்வும் உண்டாவது நாள்தோறும் பார்க்கும் ஒரு காட்சி. சமூகங்களுக்கும், தேசங்களுக்கும், நாடுகளுக்கும் வாழ்வுந் தாழ்வும் காலத்தில் மாறுதல் அடைவதையும் சரித்திரத்திலும் வாசித்திருக்கிறோம்; இக்காலத்திலும் அம்மாதிரியே உண்டாகிக் கொண்டு வருவதையும் பார்த்துக் கொண்டும் இருக்கிறோம். அங்ஙனமே எல்லா வஸ்துக்களுக்கும் உயர்வு தாழ்வு காலமாறுதலில் ஏற்படுகிறது என்பதை ஊன்றிப் பார்த்தால் தெரியவரும். உதாரணமாக, வெகு காலமாக உயர்ந்த பொருளாக வாங்கிவந்த கைக்குத்தல் அரிசிக்கு போங்காலம் வந்து, இகழ்ந்து தள்ளப்படும் நிலைமை வந்துவிட்டது. மில்லரிசிக்கு வந்தது வாழ்வு, கைக்குத்தலரிசி அடைந்தது தாழ்வு. வெள்ளைச் சர்க்கரைக்கு வந்தது தசை, நாட்டுச் சர்க்கரைக்கு உற்றது கேடு. நியாயந் தானே? சில நூற்றாண்டுகளாக வெள்ளையர்களுக்குத் தானே வாழ்வு; கறுப்பு மக்களுக்கு உலகத்தில் எங்குமே தாழ்வு.

தற்போதைய நாகரிகத்தை 'தளுக்கு மினுக்கு நாகரிகம்' என்று சொல்வது பொருந்தும். விடுதிகளிலும் உடையிலும் ஊணிலும் இந்த நாகரிகச் சின்னங்கள் மிகுந்து வருவதைக் காண்கிறோம். காலதேச வர்த்தமானங்கள் காரணமாக எல்லாத் தேசங்களிலும் ஜனசமூக வாழ்க்கையிலும், அரசியலில் ஏற்பட்ட மாதிரி மாறுதல்கள் உண்டாவது இயற்கையே. 'பழையன கழிதலும், புதியன புகுதலும், வழூஉ அல கால வகையினானே?' என்பது உண்மை.

ஆனால் இந்த மாறுதல்கள் நன்மைக்காகவும் அமையும்; தீமையை விளைப்பதாகவும் இருக்கலாம். அன்னிய ஆட்சியில் ஆளும் வர்க்கத்தினரது நாகரிகம், அடிமைநாட்டினர் மோகத்தைத் தூண்டுவதும், அடிமையாக யிருப்பவர்கள் ஆளுபவர்களின் நடையுடைபாவனைகளைக் 'காப்பி' அடிப்பதும் எங்கும் சகஜம். நமது இந்திய தேசத்திலே அநேக மாறுதல்கள் இம்மாதிரி உண்டா யிருப்பது கண்கூடு.

அடிமையில் மோகம் ஏற்பட்டு விட்டால் அதற்கு எல்லையில்லை. அந்த மனப்பான்மை உடையவர்கள் தங்கள் இயற்கைப் புத்தியையும் இயற்கை உணர்ச்சிகளையுங்கூட இழந்து விடுகிறார்கள். தங்கள் பழக்க வழக்கங்கள், எவ்வளவு நன்றாக இருப்பினும், உடை உணவுகள் சீதோஷ்ண நிலைக்கும் வருவாய்க்கும் தேகஸ்திதிக்கும் ஒத்தனவாக யிருந்தாலும், மத நூல்கள் இலக்கியங்கள் உலகமே போற்றும்படியாக யிருந்தாலும், இவைகளை யெல்லாம், இகழ்ந்து பேசுவதும் மதாசாரங்களைக் கைவிட்டு விடுவதும் அநேக வருஷங்களாக நாம் பார்த்துக்கொண்டிருக்கும் விஷயங்கள். இதற்கெல்லாம் முக்கியமான காரணம், குறிதவறி ஏற்படுத்தி யிருக்கும் கல்வி முறையே; அரசாங்க வேலைக்குத் தயார் செய்யும் கல்வி, ஆண்மையற்ற கல்வி, ஆற்றல் ஒழிக்கும் கல்வி, அன்னம்

பிக்கை உண்டுபண்ணாத கல்வி, பகுத்தறிவு உண்டாக்காத கல்வி. இத்தகைய கல்வி கற்றவர்களின் நடையுடைபாவனை, மேற்கத்திய நாகரிகத்தைத் தழுவியது. அவர்கள் மாதிரி, பட்டணத்திலுள்ள பாமரர்களும், பட்டிக்காட்டிலுள்ள நிலபுலன் உடையவர்களும், உயர்தரக் கல்விக்கு அனுப்பப்படும் அவர்கள் பிள்ளைகளும், தங்கள் பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளுகிறார்கள். நடையலங்காரமும் உடையலங்காரமும் கைவந்தவுடன், உணவலங்காரமும் கைக்கொண்டார்கள். முற்றிலும் தவிடு நீங்கிய மினுக்கரிசியைச் சமைத்தால் அது மல்லிகைப் பூப்போல் வெண்மையாகயிருக்கிறது; ஆகையால் வெளுத்த அரிசிக்கு வேண்டி நின்றார்கள். இயந்திரத்தில் தீட்டிய அரிசியைச் சாப்பிடுவது அந்தஸ்து என்றார்கள். கையில் கொஞ்சம் காசிருந்தால் மற்றவர்களும் அம்மாதிரியே செய்வார்கள் என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஏன்? மேல்நாட்டு நாகரிக மோகினிப்பேய் எல்லாரையும் பிடித்திருக்கிறது; அது சுயஅறிவையும் உணர்ச்சியையும் அடியோடு அழிக்கும் சக்திவாய்ந்த மோகினி.

இதெல்லாம் எதற்குப் பீடிகை? மேஜை அரிசியான (Table Rice) வெள்ளை அரிசி, மினுக்கரிசி கைக்குத்தல் அரிசியை எதனால் தலைகாட்ட முடியாமல் ஓடி ஒளிந்து அழியும்படி செய்தது என்பதற்கு முக்கியமான காரணத்தைத் தெரிவிக்கவே. மற்ற காரணங்கள் எல்லாம் கைக்குத்தலரிசி ஒழிவதற்கு உபகாரணங்களாகவே இருந்தன.

நெல்லைச் சேர்கட்டும் காலம்போச்சே! மில்லைக் கைக்கொள்ளும் நாள் வந்தது. குதிரும் போய், குந்தாணியும் போய், குத்துலக்கையும் போய்விட்டது. இது இயந்திர யுகம் அல்லவா? மில்லுக்கு அடிமையானோம். நன்றாகத் தீட்டி வெளுக்கப்பட்ட மினுக்கரிசியை முதலில் பட்டணங்களில் சாப்பிட்டார்கள்; பின்பு கிராமங்களிலும் இந்தப் பழக்கம் பற்றி விட்டது. முக்கியமாகக் கிராமங்களில் வீட்டுக்கு வீடு அணிசெய்த நெல்குதிர்கள் போய், இருந்தவிடம் தெரியவில்லை. நெல் நேராக மில்லுக்குப் போய், வெள்ளை அரிசியாக மாறி கோணிச் சாக்குகளில் நிரப்பப்பட்டது; ஏற்றுமதி செய்ய எளிதாகிவிட்டது. நிலச்சுவான்தார்கள் நெல்லைக் களத்திலேயே விற்றுவிட்டுப் பணமாக்கிக் கொண்டார்கள். வேண்டியது ரூபாய். கடையில் மில்லரிசியை வாங்கி உபயோகித்தார்கள்.

நமது தேசத்தில் விளையும் நெல் போதுமான அளவு இல்லாமையால் பர்மாவிலிருந்தும், ஸயாமிலிருந்தும் வருஷா வருஷம் அதிகமாக வெள்ளை அரிசியும் விலை குறைந்த சுண்ணாம்பு அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டன. 'தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்குவார்கள் உண்டோ?' என்று ஆச்சரியப்பட வேண்டாம்.

கிராமங்களில் வேலையாட்களுக்குக் கொடுக்கவும் பண்டமாற்றலுக்கும் நெல் உபயோகப்பட்டு வந்தது. அதுபோய்க் கூலியும் பண்டமும் பணத்தைக் கொடுத்துக் கொண்டார்கள். நெல்லுக்கும் வீட்டுக் கைக்குத்தலரிசிக்கும் இருந்த பிரதான்யமும், மகத்துவமும்போய், பணமே எல்லாவற்றிற்கும் முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

மேல்நாட்டு நாகரிகப் புதுப்பழக்கத்தால் நேர்ந்த மில்லரிசி மோகம் பல வியாதிகளுக்கு அடிப்படையான காரணம் என்பதை, மேல்நாட்டு வைத்தியர்கள் சில வருஷங்களுக்கு முன்னதாகத்தான் அறிந்துகொண்டார்கள்! மேல்பார்வைக்கு வெண்மையாக இல்லாத அரிசி சில வியாதிகளை உண்டாக்காமல் தடுத்து வந்தது என்பதையும் உணர்ந்தார்கள். இதெல்லாம் மேல்நாட்டு வைத்திய நிபுணர்கள் ஆராய்ச்சியில் கண்டுபிடித்தார்கள். நம் நாட்டிலும் வைத்தியர்கள் இல்லையா? ஏன் அவர்களால் இந்த விஷயத்தை அறிந்துகொள்ள முடியவில்லை?

கவர்ன்மெண்டில் நாட்டு வைத்தியத்திற்கு ஆதரவு அக்காலம் கிடையவே கிடையாது. பணக்காரர்களும் மேல்நாட்டுக் கல்வி கற்றவர்களும் அதற்கு

ஒருவித சலுகையுங் காட்டவில்லை. எவ்வளவோ தினுசு நெல் வகைகள் உண்டு; அரிசி விளைவுகள் உண்டு; அவைகளைப் பற்றிய போஜன-ஜீரண விஷயங்களைக் கொஞ்சம் தெரிந்தவர்கள் நாட்டு வைத்தியர்களே. அவர்களும் கிராமங்களில் படிப்பில்லாமல் போலிவைத்தியர்களானார்கள். பொதுஜன ஆதரவு இல்லாமையால் நல்ல நாட்டு வைத்தியர்கள் மறைந்து போனார்கள். வருவாயற்ற தொழிலை மற்றவர்களும் கைக்கொள்ள வில்லை. நாட்டு வைத்தியர்கள் வைத்திய முறையில் மில்லரிசியைத் தள்ளி வந்தார்கள். அதனால் விளையுந் தீமையை விவரித்துச் சொல்லுவோர் இல்லை. சொல்லி யிருப்பினும், அவர்கள் பேச்சை யார் கேட்டிருப்பார்கள்?

மேல் நாட்டு வைத்திய முறை கற்றவர்களே சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்கள். உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள் எல்லாரும் வெள்ளையர்கள். அவர்களுக்கு மினுக்கரிசி தான் சாப்பிட்டு வழக்கம். அவர்களிடம் கீழ் ஸ்தானம் பெற்றவர்களும் அதே அரிசியைத் தான் உபயோகித்தார்கள். அவர்கள் கலப்புணவு சாப்பிட்டார்கள். மில்லரிசியில் சத்தில்லா விட்டாலும் மற்ற உணவுகளிலிருந்து அந்தச் சத்தை அடைந்தார்கள். ஆகையால் அவர்கள் வியாதியால் பீடிக்கப்படவில்லை; மேலும் நெல்லைப்பற்றியாவது அரிசி வகைகளைப் பற்றியாவது அவர்கள் பாட முறையிலும் ஒன்றுங் கற்றுக்கொள்ளவில்லை. மணிச்சம்பா, சீரகச்சம்பா, குன்றுமணிச் சம்பா, ஈர்க்குச் சம்பா, கார் அரிசி இவைகளின் தராதரம் தெரியாது. அரிசியைக் கையில் கொடுத்து, "இது என்ன அரிசி?" என்று கேட்டுப் பாருங்கள். நீங்களே அவர்கள் அறிவை அளந்துவிடலாம். "சம்பா அரிசி சாப்பிடலாமா, கார் அரிசி சாப்பிடலாமா, பச்சரிசி உபயோகிக்கலாமா, புழுங்கலரிசி உபயோகப்படுத்தலாமா?" என்று கேட்டால், எது வழக்கமோ அதைச் சாப்பிடுங்கள் என்று சொல்லிவிடுவார்கள்! தங்கள் அறியாமையைத் தளுக்காக மறைத்துக் கொள்ளுவார்கள். அவர்களுக்குச் சாப்பிடத்தான் தெரியுமே ஒழிய அரிசி வகைகளைப்பற்றி ஒன்றுந் தெரியாது; அவைகளின் போஜன ஜீரண குறைகுணங்கள் ஒன்றுமே தெரியாது. பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலும், வைத்தியக் கல்லூரிகளிலுமே பதார்த்த குணங்களைப்பற்றி ஒன்றும் சொல்லிக் கொடுக்கப்படவில்லை. ஆகையால் அவர்களைக் குறை கூறுவது சரியில்லை.

நம்முடைய ஸ்திரீகளுக்கு அரிசி விஷயத்தில் புருஷர்களைவிட அதிகம் தெரியும். 'இந்த அரிசி சாதம் காணுமா காணாதா? சீக்கிரம் கொதி வருகிறதா, இல்லையா? வாங்கலாமா, வேண்டாமா?' என்பதை அவர்களிடமிருந்துதான் தெரிந்துகொள்ள வேண்டும். இப்பொழுது வைத்தியர்களுக்கு ஒன்று மட்டும் தெரியும்; தீட்டிய அரிசியையே பிரதானமாகக் கொள்ளும் மக்களிடையில் தேகதிடக் குறைவு, பெரிபெரி, நரம்புத்தளர்ச்சி, மலச்சிக்கல், அஜீரணம், மைனவாய் முதலிய பல வியாதிகள் பரவி யிருக்கின்றன என்பதே. இந்த விஷயங்களைப்பற்றிப் பொது மக்களும் இக்காலத்தில் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

கைக்குத்தலரிசியில் முளையும் மட்டையும் முழுமையாக யிருக்கின்றன. இவைகளில்தான் புஷ்டி தரக்கூடிய சத்து விடமின் பி (Vitamin B) இருக்கிறது என்பதை ஆராய்ச்சி முறையில் சில வருஷங்களுக்குமுன் மேல்நாட்டு வைத்தியர்கள் கண்டு பிடித்தார்கள். அனுபவ முறையில் கைக்குத்தலரிசி தான் நல்லது என்று நம் நாட்டு வைத்தியர்களும் கிராமாந்தர வாசிகளும் சொல்லிவந்தார்கள்.

மில்லில் குத்தித் தீட்டிய அரிசியில் முளையும் மட்டையும் முழுமையும் போய் விடுகின்றன. ஆகையால் புஷ்டி தரும் சத்து அரிசியில் இல்லாமல் போய்விடுகிறது. இதையே முக்கிய உணவுப் பொருளாகப் பெரும்பாலான மக்கள் கொள்ள வேண்டியிருப்பது நம் நாட்டுத்

தற்கால நிலைமை. இதனால் பல வியாதிகள் உண்டாகின்றன. இவ்வியாதிகளுக்கு அடிப்படையாக நிற்பது, முளையும் மட்டையும் நீங்கிய, புஷ்டியற்ற, சத்தில்லாத, தீட்டி வெளுக்கப்பட்ட மில்லரிசி. இந்த உண்மையை அசட்டை செய்து, மட்டை போன அரிசியைச் சாப்பிடலாமா? முளைபோன அரிசியைச் சாப்பிடுபவர்களின் மூளையைப்பற்றி என்ன சொல்வது?

கைக்குத்தல் அரிசிக்குப் பிரசாரம் பலம் தான். ஆனால் கைக்குத்தலரிசி எங்கே கிடைக்கிறது? குதிரைக் கொம்பாக அல்லவோ யிருக்கிறது. ஜனசமூகத்தில் முன்னணியில் இருப்பவர்களில் எத்தனை பேர் கைக்குத்தலரிசியைத் தாங்களே உபயோகித்து மற்றவர்களுக்கும் அந்த வழக்கத்தைக் கைப்பற்ற எடுத்துக் காட்டாக இருக்கிறார்கள்? எனக்குத் தெரிந்த வரையில் சச்சிவோத்தம ஸர். சி. பி. ராமஸ்வாமி ஐயர், திருவிதாங்கூர் திவான் ஒருவரே! அவர் கிரகத்தில் சமைக்கும் அரிசி, பார்வைக்கு நன்றாக மல்லிகைப்பூப்போல இல்லாமற் போனாலும் நல்ல மணமுடையது; சுவையுடையது. சுண்ணாம்புபோல் வெளுப்பாகவும் காய்ந்த சோளத்தட்டைபோல் சுவையில்லாததாகவும் இருக்காது கைக்குத்தலரிசி. மில் திட்டத்தைத் திருத்தி அரிசியை மட்டை போகத் தீட்டி வெளுக்க வைக்கக்கூடாது என்று ஒரு கவர்ன்மெண்ட் உத்தரவு போட, எந்த அரசாங்கம் தைரியமாக முன்வந்தது? திருவிதாங்கூர் சமஸ்தானம் ஒன்றுதான்! மில்களை மூடிவிட்டு கைக்குத்தல் அரிசியைத்தான் திருவிதாங்கூரில் தயாரிக்கலாம் என்ற திட்டத்தை, வைத்திய சாஸ்திரம் கண்ட உண்மையைத் தைரியமாகப் பொதுஜனநன்மைக்காக அமுலுக்குக் கொண்டுவந்தவர், திருவிதாங்கூர் திவான் ஒருவர்தான். மற்ற சமஸ்தானங்களும் அரசாங்கங்களும் ஏன் தயங்குகிறார்களோ, தெரியவில்லை. என்ன சாபத்திடு இது!

ஒரு நல்ல சமாசாரத்தையும் கடைசியில் பிரசுரிப்பது என் கடமை.

தென் இந்தியாவில் கைக்குத்தலரிசி ஸ்தாபனம் இராயவரத்தில் இருப்பது போல் வேறு எங்குமே கிடையாது. சுகாதார அபிவிருத்தியைக் கருதி இங்கு இத்தாபனம் நன்கு நடைபெற்று வருகிறது. இதற்கு புதுக்கோட்டை அரசாங்கத்தின் ஆதரவும் உண்டு. இங்கு தயாராகும் கைக்குத்தல் அரிசியை புதுக்கோட்டை மகாராஜா, திவான், இன்னும் மற்றுமுள்ள பிரபல அதிகாரிகள் அனைவரும் தவறாது உபயோகிக்கின்றனர். கடைகளில் ஒன்றேமுக்கால் படி ($1\frac{3}{4}$) அரிசி கிடைக்காத காலத்தில் கைக்குத்தலரிசி பொது ஜனங்களுக்கு இரண்டேகாலே அரைக்கால் ($2\frac{3}{8}$) படி வழங்கப்படுகிறது.

இங்கு மாதம் 400 மூட்டை தயாராகிறது. வழக்கமாக 500 குடும்பங்களுக்குமேல் கைக்குத்தலரிசியை உபயோகிக்கிறார்கள். இதனால் நாள் ஒன்றுக்கு 120 ஏழை மக்களுக்கு வேலை கிடைக்கிறது. இராயவரம் என்ற கிராமத்தில் மொத்தம் ஜனத்தொகை 2500 பேர். இதில் தினசரி கைக்குத்தலரிசியால் 120 ஏழை மக்களுக்கு வேலை கிடைக்கிறது. இந்த ஸ்தாபனம் செய்யும் பொதுஜன சேவை மிகவும் போற்றத்தக்கது. மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த ஸ்தாபனத்தை ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். அப்படிச் செய்தால் அவர்கள் தேகதிடகாத்திரர்களாக இருப்பார்கள் என்பது விஞ்ஞான சாஸ்திரத்தில் கண்ட உண்மை.

# மாரியப்பனின் மனோரதம்

[கே. வெங்கடாசலம்]

**மா**ரியப்பன் சட்டக்கல்லூரியில் பயிலும் ஒரு மாணவன். வயது இருபத்து மூன்று இருக்கும். அவனுடைய தகப்பனார் சொக்கலிங்கம் பிள்ளை காளத்தி கோயில் கிராமத்தில் சுமாரான ஆஸ்தி உடையவர். மாரியப்பன் அவருடைய ஏக புத்திரன். 'பிள்ளைவாள்'ளின் அந்தஸ்தும், செல்வாக்கும் கிராமத்தில் அசையாமல் வெகுகாலமாக இருந்து வருகிறது. அவருக்கு ஆங்கிலப் படிப்பு, நவநாகரிகம் இவற்றிலெல்லாம் ஒரு வெறுப்பு. அவர் தன் வாழ்நாளில் இரண்டு முறைதான் ரயில் பிரயாணம் செய்திருக்கிறார் என்றால் அவருடைய தன்மையை அதிகம் விஸ்தரிக்கவேண்டியதில்லை. அவருக்குத் தெய்வபக்தி மிகுதியாகவுண்டு. அவர் நா எப்பொழுதும் முருகன் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டே யிருக்கும். இன்பத்தையும் துன்பத்தையும் ஒருங்கே பாவிப்பார். ஊரிலுள்ள சில பெரிய மனிதர்கள் பிள்ளையவர்களின் புதல்வன் சட்டம் பயின்று வக்கீலாக வேண்டுமென்று 'பஞ்சரி'த்ததால் மாரியப்பனை ஆங்கிலம் படிக்கவைக்கும் நிர்ப்பந்தத்திற்குள்ளானார். பி. ஏ. வரைக்கும் மதுரையில் படித்தான். பின்பு பட்டணத்திற்குப் போனான்.

சொக்கலிங்கம் பிள்ளையின் மனைவி, மகனுக்கு வயது இருபத்திமூன்றாகியும் கலியாணம் ஆகாமலிருக்கிறதே என்று குறைபட்டுக் கொண்டிருந்தாள். கணவனை தினசரி இவ்விஷயமாகத் தொந்திரவு செய்தவண்ணமாக யிருந்தாள். அவருக்கோ பையன் படித்து முடிந்த பின்னர் விவாகத்தை வைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணம். ஆனால் மனைவியின் இருபத்திநாலு மணி நேரப் புடையெடுப்புக்குமுன், அவர் புறமுதுகு காட்டாமலிருக்க முடியுமா? பக்கத்துக் கிராமத்தில் 'செயலா'கவுள்ள ஒரு குடும்பத்தில் மகனுக்குப் பெண்ணை நிச்சயம் செய்து மாரியப்பனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் 'பெண் சுமாரான அழகுள்ளவளென்றும், ஆனால் குணம் பத்தரைமாற்றுத் தங்கம்' என்றும் குறிப்பிட்டிருந்தார். முருகனருளினால் மணம் இனிது நடைபெறுமென்ற தமது தீர்மானத்தையும் கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

## 2

மாரியப்பன் முன்னேற்றமான எண்ணங்கள் கொண்டவன். அவன் எதிலும் சுதந்திரம் இருந்து தீரவேண்டுமென்ற மனப்பான்மை யுடையவன். இதற்காகக் கல்லூரியில் புரொபஸர்களுடன் பலதரம் மோதிக்கொண்டிருக்கிறான். அவன் மனதில் புத்தம்புது கற்பனைகள் உதித்துக்கொண்டே யிருக்கும்.

அன்று மாலைத் தபாலில் வந்த கடிதத்தால் அவன் முகம் வாட்டமுற்றது. வாழ்க்கைக்கே ஆதாரமாகவுள்ள துணைவியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அவனுக்கில்லை. இதை நினைக்குந்தோறும் அவன் நெஞ்சு குமுறியது. அவன் கற்பனையில் கட்டியிருந்த மாளிகைகளெல்லாம் தூள் தூளாயின. ஆம்; தனக்கு வரப்போகும் அந்த மங்கை நல்லாளைப்பற்றி அவன் கண்ட கனவுகள்............

அவளைக்காவியத்திலேதான்காணலாம். அவள் அங்க நெளிவுகளை வைத்துக்கொண்டு ஒரு மூடன்கூட கவிதைமழை பொழியலாம். இன்ப நினைவூட்டும் அந்தப் பார்வையில் எவன்தான் சொக்கிப்போகமாட்டான்? கண்களில்கொண்டு

ஈச்வரன் ஆயிரம் சூரியர்களின் ஒளியை வைத்துவிட்டானோ என்னவோ! மல்லி கைக் கொடிபோன்ற அந்த மெல்லிய லாளின் மேனியில் அக்கண்கள் என்ன சோபிதமாக ஒளிவீசுகின்றன! அவிழ்ந்து காற்றிலே அசைந்தாடும் அளக பாரத்தில் மறைந்துகொண்டு மதன் தன் கருப்புவில்லை நாணேற்றிக்கொண்டிருப்பான்.

அது என்ன பேச்சா? இல்லை; நன்ருகச் சுருதி கூட்டப்பெற்ற வீணையில், மென்மையான விரல்கள் மீட்டிய நாதம். அந்தக் கான வெள்ளத்திலே மிதந்துகொண்டிருந்தாலே யுகம் போவது தெரியாது. அவள் கிள்ளை மொழியிலே யாருடைய வெள்ளை மனந்தான் பறிபோகாமலிருக்கும்? இளமையின் தோற்றம் அவள்; நறுமலர்க்காவின் தென்றல் மணம் அவள் சிரிப்பதிலும்; பேசுவதிலும் ஒரு கம்பீரம்......அவளைப் பற்றி விவரிக்கவா? அது ஒருபெரிய காவியமாகி விடுமே!

சொக்கலிங்கம் பிள்ளையின் கடிதம் மாரியப்பனின் கற்பனையில் தோன்றிய அந்த நீலோற்பல மேனியாளை மாய்த்துவிட்டது. எங்கோ, கண்டிராத அந்த 'சுமாரான அழகி'யை மணம் செய்ய வேண்டுமாம். அவன் மனம், நடுக்கடலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் படகு போல் கடும்புயலில் தத்தளித்தது.

அவனிருந்த அறை அப்பொழுது அவனுக்குச் சிறையைப்போல இருந்தது. கடற்கரையில் உலாவி வந்தால் மனப்பளு சிறிது குறையுமென்று எண்ணினன். கால் போகிற போக்கில் ரொம்பத் தூரம் போய்விட்டான். ஆள் நடமாட்டமில்லாத இடத்திற்கு வந்திருப்பதை உணர்ந்ததும் திரும்புவதற்குச் சற்று நின்றுன். அப்பொழுது அவன் தோளை யாரோ தொடுவதுபோலத் தெரிந்தது. திருப்பிப்பார்த்தான். என்னஆச்சரியம்?

ஒரு பெண், அழகு என்றால் அழகு. அப்படி வனப்புவாய்ந்த வடிவழகி. வயது பதினறுக்குமே லிருக்காது. அப்பொழுதுதான், கடலிலிருந்து கிளம்பும் பொற்குடம்போல, சந்திரன் உதித்தான். அந்தப் பொன்மயமான ஒளியில் அவள் அவனுடைய கற்பனைப் பெண்ணைவிட ஒருபடி அதிசுந்தரமாகவே தெரிந்தாள். அந்தப்பொன்மயமான ஒளி கணப்பொழுதில் பால் மயமாக மாறியது. அதில் அவள்........அப்பப்பா! அவள் சௌந்தர்யத்தைக் காணக் கண்கள் ஆயிரம் இருந்தாலும் போதா.

மாரியப்பன் சற்றே நினைவிழந்து நின்றுன், அந்த மாய அழகில் ஈடுபட்டு. ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பேசினன்:

"அம்மா, நீ யார்?"

"சாமி, நான் ஏழை; திக்கற்ற பரம ஏழை."

அவள் பேசியதுதான அது? வீணகானம்போல் அவ்வார்த்தைகள் அவன் செவியில் பாய்ந்தன. அவள் ஏழைதான்; அதற்கு அவள் உடுத்திருந்த புடவை ஒன்றே போதும், சாட்சி சொல்ல. ஆண்டவன் இரக்கமில்லாதவன். இளமையும், வனப்பும் கொடுத்தவன் கூடவே தரித்திரத்தையும் கொடுத்துவிட்டான். இவ்வாறு சிந்தித்தவாறே அவன்,

"உனக்கு என்னவேண்டும்?" என்று கேட்டான்.

கணீரென்று பதில் வந்தது. "ஆதரவு வேண்டும், சாமி."

அவன் மனம் கொஞ்சநேரம் யோசனையி லாழ்ந்தது.

"சரி, என்னுடன் வருகிறாயா?"

"தங்கள் சித்தம்."

இருவரும் நடந்துகொண்டே நகரத்தை நெருங்கிவிட்டனர். எதிர்ப்பட்ட நண்பனொருவன், "எங்கேயப்பா ஒண்டியாய் இந்நேரத்தில்" என்று கேட்டுவிட்டுக் கடந்துபோனன். அவனிடம் மாரியப்பனுக்கு அசாத்ய கோபம். "தன்னருகில் தேவலோகத்து ரம்பைகளும் பிச்சை வாங்கும்படியான எழிலுடைய ஒருத்தி வருவது அவன் கண்ணில் ஏன் படவில்லை. எல்லாம் பொறாமைப் பேய்கள்!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

இருவரும் அறைக்குவந்து சேர்ந்தனர். கதவைத் திறந்துகொண்டே, "இனி, இது உன் வீடு, தெரிகிறதா... அடடா, உன்னை எப்படிக் கூப்பிடுகிறது? பேர் என்ன?" என்று கேட்டான்.

"மல்லிகா என்று அழையுங்கள்" என்று பதிலளித்தாள். பெயரில்தான் எத்தனை சௌந்தர்யம்!

மல்லிகாவின் அழகில் மயங்கிப்போன மாரியப்பன் அன்றே தகப்பனருக்குக் கடிதம் எழுதினன். தன் வாழ்க்கையில் முதல்முதலாகத் தந்தையின் ஆக்ஞையை உதாசீனம் செய்தான். ஆனல் அக்கடிதம் மைந்தனின் சுக வாழ்விலே கண்ணும் கருத்துமாகவுள்ள தந்தையிடம் எத்தகைய வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் உண்டுபண்ணுமென்பதை அவன் அறியான்; அறிவதற்கு அவகாசமும் இல்லை. தன் மனோரதம் ஈடேறிவிட்டது என்பதில் அவன் கிறுக்குப் பிடித்தவன் போலானன்.

அவளுடன் பழகிய சில மணி நேரத்திற்குள்ளே அவள் ஒரு அசாதாரணப் பெண் என்பதைக் கண்டுகொண்டான். கடைத் தெருவுக்குப்போய் சில சாமான்கள் வாங்கிக்கொண்டு வந்தபோது தன் மேஜையில் காபி, பலகாரம் தயாராக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டான். இவ்வளவு விரைவில், அதுவும் காலி வீட்டில் மல்லிகா இதை எப்படித் தயாரித்தாள் என்று விளங்கவில்லை. ஒரு கணம் திகைத்து நின்ருன். அதற்குள் அவளே அங்கு தோன்றினள்.

"காபி சாப்பிடுங்கள்; பசி ரொம்ப இருக்குமல்லவா?" என்று கொஞ்சுகிற பாவனையில்—ஆனல் அதே மணிக்குரலில் பேசினள்.

"காபி ஏது" என அவன் கேட்குமுன்னரே அவள் விடை பகர்ந்தாள்.

"இதென்ன விந்தை! புராணத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை போலும். பதிவிரதைகள் வேண்டினல் வராததொன்று உண்டா?"

மாரியப்பனுக்கு எல்லாம் புதிர்போல இருந்தது. பேசாமல் காபியைக் குடித்தான்.

இரவு, மணி பன்னிரண்டு அடித்தது காதில் விழுந்தது. விழித்துக்கொண்ட மாரியப்பன் மல்லிகாவைப் பார்த்தான். அவள் நிச்சிந்தையாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். முகம் களங்கமற்ற சந்திரன்போல பிரகாசித்தது. உதட்டிலே புன்னகையின் ரேகை. அவளையே இமைகொட்டாமல் பார்த்தான். ஆம்; அந்த மணம் எங்கேயிருந்து வந்தது? அபூர்வமான வாசனை. பூலோகத்து மலர்களின் மணமாகத் தெரியவில்லை. ஆனலும் மனசை ஆனந்த லாஹிரியில் ஆழ்த்தும் அந்த மாய வாசனை....'குபு, குபு'வென அறையில் பாய்வானேன்? திடீரென்று மல்லிகாவின் கூந்தலைத் தொட்டுப் பார்த்தான். அதில் ஒரு பூ செருகியிருந்தது. அதைக் கையிலெடுத்தான். எங்கும் பார்த்திராத மலராக இருந்தது. மூன்று இதழ்களுடைய அம்மலர் கரிய நிறத்தையுடையதாயிருந்தது. அவன் தேகமெல்லாம் வேர்த்தது. அப்பொழுது, மல்லிகா தன்னுடன் வரும்போது அவள் கூந்தல் விரிந்துகிடந்த காட்சி மனக்கண் முன் வந்தது. அவனுக்கு நெஞ்சு நின்றுபோகும்போலிருந்தது. வெறிகொண்டவன்போல் மலரை ஜன்னல் வழியே வீசியெறிந்தான். அப்படியும் அந்த மணம் அறையை விட்டகன்ற பாடில்லை.

சரியாக விடிவதற்குள் மாரியப்பன் எழுந்து, தன் 'காமரா'வுக்குள் சென்று மறுநாள் பரீட்சைக்குப் படிக்க உட்கார்ந்தான். புத்தகத்தின்மேல் கவனம் படியவில்லை. பக்கம் பக்கமாகப் புரட்டியவண்ண மிருந்தான். 'சட்'டென்று யாரோ நடந்துவரும் காலடிச் சப்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தான். எதிரே மல்லிகா நடந்துவந்து கொண்டிருந்தாள், ஒரு மயிலைப்போலே. அவள் தோற்றம் மகாலக்ஷ்மிபோல இருந்தது. மேனியெல்லாம் ஒரே ஆபாண மயம். அவளைப் பார்க்க மாரியப்பன் கண்கள் கூசின. உடல் புல்லரித்தது, நாக்குழற.

"மல்லிகா, நீ யார் சொல்லிவிடு" என்று கூறினன்.

ஒரு சிரிப்பு; 'கல கல'வென்ற ஆரவாரச் சிரிப்பு.

"என்னை இப்படிப் பார்க்கப் பிடிக்கவில்லையா? அப்படிச் சொல்லுங்கள் கதையை" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தாள் அக்கட்டழகி.

மாரியப்பன் பிரமை பிடித்தவன்போல் அவளையே வெறித்து நோக்கினான். அவள் முகத்தில் நிலவிய தேஜஸ் அதிசயிக்கத் தக்கதாகயிருந்தது.

மாரியப்பன் மல்லிகாவிடம் சொல்லிவிட்டுக் கல்லூரிக்குப் போக வெளிக்கிளம்பினான். போகும்போதே ஆயிரம் சிந்தனைகள் அவனை அலைக்கழித்தன. அவள் யார்? மானிடப் பெண்தானா? அவன் மூளை குழம்பிப் போயிற்று. வழியில் சந்தித்த நண்பனொருவன், "என்னடா, இப்படிப் பேயடித்தவன் போல் காணப்படுகிறாய்" என்று கேட்டான். அவனுக்குப் பதில் கொடாமல் மேலே சென்றான். அவள் நிச்சயம் ஒரு மோஹினிப்பிசாசாகத் தான் இருக்கவேண்டும் என்று அவன் முடிவிற்கு வந்தான். எப்படி அவள் பிடியிலிருந்து தப்புவது என்ற சிந்தனையில் அவன் மனம் ஊசலாடியது. ஏதோ தீர்மானித்தவனாய் தந்தியாபீசுக்கு ஓடிப்போய் தந்தைக்கு, "அபாயம், உடனே வரவும்" என்று தந்தி கொடுத்தான். அன்று பூராவும் அவன் மனம் எதிலும் சரியாய்ச் செல்லவில்லை.

சாயங்காலம் கல்லூரி விட்டதும் அறைக்குப் போகவில்லை. வீதிகளில் குறுக்கும் நெடுக்குமாக அலைந்தான். இரவு வண்டியில் தந்தை வந்துவிடுவார் என்ற தைரியம் இருந்தது. அதுவரைக்கும் அவள் கண்ணில் படாமலிருக்க வேண்டும். இப்படி யோசித்துக்கொண்டே மணியைப் பார்த்தபோது திடுக்குற்றான். ரயில் வந்து அரைமணி கழிந்துவிட்டிருந்தது, அப்போது. அறையை நோக்கி நடந்தான். ஒருக்கால் தகப்பனார் வந்திருக்கலாமல்லவா?

அறையை நெருங்கியதும் அவன் மேனி சிலிர்த்தது. அறையில் பிரகாசமான விளக்கு எரிந்துகொண்டிருந்தது. மெதுவாக அடிமேல் அடி வைத்து நடந்தான். கதவு சாத்தப்பட்டிருந்தது. ஜன்னல் மட்டும் திறந்திருந்தது. அங்கமெலாம் நடுக்கமுற ஜன்னல்வழி உற்றுப் பார்த்தான். அந்த மாயை மல்லிகாவின் முதுகுப் புறம்தான் தெரிந்தது. அவள் சுவரை நோக்கியவாறு இருந்தாள் போலும். ஆனால்....அவள் திரும்பியதும் அவன் கண்ட காட்சியென்ன? ஆ! கோர வடிவம், கோரைப் பற்கள், தீக்கனல் வீசும் கண்கள்! மேனி முழுவதையும் மண்டையோட்டின் மாலை மறைத்தது. மாரியப்பன் பார்த்தானோ இல்லையோ, "அப்பா!" என்று அலறிக்கொண்டு கீழே விழுந்தான்.

மைந்தனிடமிருந்து தந்தி வரப்பெற்ற சொக்கலிங்கம் பிள்ளை விழுந்தடித்துக் கொண்டு வந்தார். வழியெல்லாம் ஒரே கவலை. மாரியப்பனின் அறையைத் தேடிப்பிடித்து இரவு பத்து மணிக்கு வந்து சேர்ந்தார். வாசல்படியில் மகன் விழுந்து கிடப்பதையும், கடைவாய் வழியாக இரத்தம் வடிந்திருப்பதையும் கண்டு மனம் பதைத்தார். அவர் கண்களினின்றும் நீர் 'மள, மள'வென வழிந்தோடியது. ஆவேசம் வந்தவராய், "முருகா, இன்று முதல் மாரியப்பன் உன் பிள்ளை" என்று கூறி இடுப்பில் செருகியிருந்த இலை விபூதியை எடுத்து அவன் நெற்றியில் பூசினார்; நெற்றி சுடு நெருப்பெனக் கொதித்தது. சிறிது நேரத்தில் அவன் கண்ணிமைகள் அசைந்தன; சொக்கலிங்கம் பிள்ளையின் உள்ளம் மலர்ந்தது.

மாரியப்பன் கண்களைத் திறந்து மருள, மருள விழித்தான். தகப்பனார், "மாரியப்பா, முருகா என்று சொல்லு" என்று கூறினார். அவன் எழுந்து "அப்பா" என்று கட்டிக்கொண்டு அழுதான்; அவன் உடல் நடுக்கம் மட்டும் தணியவில்லை. சில வினாடி கழித்துக் கேட்டான்: "அப்பா வீட்டில் யாரும் இல்லையே."

"ஒருத்தருமில்லேப்பா; பயப்படாதே" என்று கூறி மகனை மார்போடு அணைத்துக் கொண்டார்.

---

# நாகரிகம் எது?

[சிறுவை. மோகனசுந்தரன்]

இத்தலைப்பு ஈற்றிலே கேள்விக் குறி உள்ளது. நன்று; மிக நன்று. இன்று இவ்வுலகிடை நிலவும் மிகச் சீரிய நாகரிகத்தையும், இற்றைக்குச் சுமார் 2500 ஆண்டுகட்கு முன்னர் இருந்த நாகரிகத்தையும் காணுங்கால், கண் இமைக்க இயலவில்லை. ஏன்? இன்றைய நாகரிகப் பண்புகளை எல்லாம் ஒருவாறு மனத்தில் ஈர்த்து, அற்றை நாள் நாகரிகப் பண்பையும் காண்போம்.

மண், புனல், அனல், வளி, வான் என்னும் ஐந்து முதற்பொருள்களால் ஆன இவ்வுலகம் நம்முன் காட்சி யளிக்கிறது. எல்லாரும் இதிலிருந்துதான் தம் வாழ்வை உருவாக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. பெரும்பாலும் மக்கள் வீடு, வாசல், நிலம், நீர், தொழில் முதலியவைகளைப் பெருக்கி, கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும் இன்புற நினைக்கின்றனர். அல்லது பசியும் பிணியும் பிணக்கும் வழக்கும் உள்ள இவ்வுலகில் அவற்றினின்றும் நீங்கி நலம்பெற முயல்வதை விட்டுப் புலவர்களோடு இருந்து, தேவர் குறளையும், திருநான்மறை முடிபையும், கோவைத் திருவாசகத்தையும், சீர்த்தொண்டர் பெருங்காவியத்தையும், நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரத்தினையும், பழம் பெருங் காப்பியமாகிய தொல்காப்பியத்தையும் ஆராய்ந்து மகிழ நேரமேது?

இன்று தமிழ் உணர்ச்சி, தமிழ் நாட்டு உணர்ச்சி முதலிய பேறுகளை எவ்வாறு பெறுகின்றோம்? தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் இன்னோரன்ன பிற புலவர்கள் தேடி வைத்து, என்றும் தேயாதும், சிறிதும் குறைவுறாதும் நம்முன் காட்சியளிக்கும் "தொல்காப்பியம்" "திருக்குறள்" "சிலப்பதிகாரம்" போன்ற நூல்களெல்லாம், நாம் இன்றிருக்கும் நிலையில் உலக மக்களிடையே நாணாது தலை நிமிர்ந்து செருக்குடன் நடந்து செல்வதற்கும், மேற்படி உணர்ச்சிப் பேறுகளைப் பெறுதற்கும் துணை செய்யா நிற்கின்றன.

இலக்கணம் என்று சொன்ன அளவானே, மேலை நாட்டார் எழுத்துக்கும் சொல்லுக்குமே இலக்கணம் கண்டனர். அன்றியும் அதனுடனேயே அன்னவர் தம் மொழியிலக்கணம் முற்றுப்பெறாமல் இன்னும் கூட்டியும் குறைத்தும் செல்கின்றனர்.

கடல் ஆழத்தினையும், அதனுள் மறைந்து கிடக்கும் பல்வேறு பொருள்களையும் காண்டல் எவ்வளவு கடினம் என்று கருதப்படுகிறதோ, அவ்வாறே கீழை நாட்டு மொழியாகிய நம் தீந்தமிழ்மொழி என்று உண்டாக்கப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. மற்றும் நமது தமிழ்மொழி, மொழிப் பாகுபாடுடன் இலக்கணத்தை நிறுத்தாது, எழுத்துச் சொல்லோடு 'பொருளையும்' மாட்டிச் சென்றனர். ஆகவே அப்பொருள் இலக்கணம் என்றால் என்னையோ? எனின், அது உலகத்தைப் பற்றிக் கூறுவதாகும். இவ்வுலகினை எத்துணைப் பிரிவாகப் பிரிக்கலாம் என்றும், அப்பிரிவின்பாற்பட்ட நிலத்திற்கு உரிய முக்கிய பயிர், உணவு, இசை, விலங்கு, மக்களினம், அன்னவர்தம் ஒழுக்கம் இன்னபிற கூறா நிற்பதாகும். எனவே அப்பொருள் அகம் புறம் என இருவகையாகக் காட்சி அளித்தது.

இப்பொழுது காணும் சில நூல் ஆசிரியர்களைவிட அற்றை ஞான்று இருந்து வாழ்ந்த ஆசிரியர்கள் தம் தன்மைகளையும் நுண்ணறிவின் திறன்களையும் என்னென்று புகல்வது? மொழியுடன்

அமையாது மொழி பயிலுதற்குரிய உலகத்தின் தத்துவங்களேயும் வெள்ளிடை மலேபோல் விரித்துக் காட்டினர் எனின் தமிழ் நாட்டாராய நாம் பெற்ற பேறு தான் என்னே !

இந் நிலவுலகை நமது அகப்பொருள் ஆசிரியர் குறிஞ்சி, முல்லே, மருதம், நெய்தல், பாலே என இந்த ஐந்து நிலத்திற்கும் ஐவகை ஒழுக்க நிலேயினேக் கற்பிக்கின்றனர். இத்தலேப்பின் நோக்கம் குறிஞ்சித் திணே ஒழுக்கம்பற்றி.

குறிஞ்சித் திணேக்குரிய ஒழுக்கம் எதுவோ எனின் : அறத்தொடு நிற்றல், மற்றும் புணர்தலும், புணர்தல் நிமித்தமும் ஆகும். குறிஞ்சி என்ருல் நில அளவிலே மலேயும் மலேயைச் சார்ந்த இடமும் ஆகும், இதுவே வரை, மலே, குறிஞ்சி எனப் பல் பெயர்பெறும். குறிஞ்சி நில மகளிர் ஒழுக்கம், காதல் கொண்ட கணவனேயே மணப்பர். அன்றிப் பெற்ருேர் வேருெருவருக்குத் தங்களே வாழ்க்கைப்படுத்த நினேப்பரேல், தான் காதல்கொண்ட தலேவருடன் சென்று விடுவர்.

இதனே ஈண்டு நாம் பத்துப் பாட்டில் கபிலரால் பாடப்பட்ட குறிஞ்சிப் பாட்டின் குறிப்பிலே காணலாம். இதில் காணும் ஒரு அரிய கருத்துதான் 'நாகரிகம் எது?' என்பதற்கு விடையாகும். இனி பாட்டின்மேல் செல்வோம். பாட்டிலே பொதிந்த பொருள் பின் வருமாறு:

"தலேவி தோழியர் பலருடன் கூடித் திணேப்புலம் காக்கச் செல்கின்ருள். ஆங்கு திணேப்புள்ளே ஓட்டுகின்ருள்? பின்னர் அருவியிலே கண் சிவக்கக் குளிக்கின்ருள். பல விதமான பூக்களேக் கொய்து பரையிடத்தே வைக்கிருள். பக்கத்துப் பண்ணே யானே ஒன்று மருண்டு இவ்வழி ஓடி வருகின்றது. அங்கே ஒரு சிறந்த தலேவன் கைவில் ஏந்து வருகின்ருன். இவளோ யானேயைக் கண்டு மருண்டு நிற்கின்ருள். மருண்டதன் காரணமாய் நாணம் இழந்தவளாய் நின்ற தலேவன் அருகில் செல்கின்ருள். தலேவன் யானேயின்மீது அம்பு எய்து காப்பாற்றுகிருன். பின்னர் தலேவி தலேவன் கேட்கும் கேள்விக்குப் பதில் கூறிச் சுனே நீரில் நீராடச் செல்கின்ருள். நீராடச் சென்ற தலேவி நீரில் தவறி விழுகின்ருள். விழுந்த தலேவியை தலேவன் வாரி எடுத்து தனது மார்புடன் அணேக்கின்ருன். தலேவி தன் அகத்தின் அளவானே தலேவனிடத்தில் கொண்ட அன்பின் காரணமாக அவனே விட்டு அகலாதும், நீரில் விழுந்த அயர்ச்சியின் காரணமாகவும் மூர்ச்சித்தாற் போல் கிடக்கின்ருள். தலேவன் எதிரில் வந்த தோழி முகம் நோக்குகின்ருன். நீடு நினேக்கின்ருன். 'இக்கள வொழுக்கம் நீடிப்பதாகுக, அது நீடிப்பதற்கு நீ பெருந்துணே செய்யவேண்டும்' என்று தோழியைப் பார்த்துக் கூறுகின்ருன். தலேவி நிலேயை ஒருவாருக அறிந்து தான் கற்பொழுக்கம் நடத்துதற்கு ஏதுவாய் இருக்கலாம் எனக் கருதினவனுய் தலேவியைப் பார்த்து, "பலரும் தட்டுத் தடையின்றி வரும் நமது வாயிலிலே நெய்யுடன் கலந்த நிணம் ஒழுகின சோற்றினேப் பலருக்கும் இட்டு எஞ்சியதை நாம் இருவரும் உட்கொள்வோமாக, அப்படிச் செய்வதுதான் இல்லறமாகிய நல்லறத்திற்கு விழுமிய பயனுகும்" எனக் கூறித் தன் நிலக்கடவுளாகிய 'முருகக் கடவுளே' வாழ்த்தி ஒரு கை நீரும் அதன் காரணமாய் உட்கொண்டு மேற்படி சூளுரை பகர்கிருன். பின்னவர் இருவரும் பக்கலில் இருந்த குகை ஒன்றில் அப்பகல் கழிக்கின்றனர். மாலே வந்து இரவு தொடங்கப்போகிறது. தோழியர்களேயும், தலேவியையும் ஊர்ப் பொதுநீர் மண்டபம் வரை விட்டு "இக்களவு நீட்டிக்க, யான் நின் தாய் தந்தை அறிய மணக்கிறேன்" என்று கூறிச் செல்கின்ருன். சின்னுள் இவ்வாறு செல்லத் தலேவி தலேவனே அடைய வேண்டி வாடி ஆற்றியிருக்கின்ருள். இதனே அறியாத நற்ருய் தலேவி உடல் நலிவுக்கு மருந்து பல தேடுகின்ருள். மந்திரம் பல செய்கின்ருள். விழா எடுக்கின்ருள். செவிலி ஒருநாள் நற்ருயைப் பார்த்து. "அம்மா, நோய் ஒன்று

# மாத்ரு பூஜை

[எஸ். வி. துரைசாமி]

"பொம்மைகள்; மண் பொம்மைகள்; பீங்கான் பொம்மைகள்" என்று வீதியில் விற்றுக்கொண்டு செல்கிறான், விதவிதமான பொம்மைகள் நிறைந்த பெரிய கூடையொன்றைத் தலையில் சுமந்த பொம்மை வியாபாரி. மறுகணம் வீதிக் கதவைத் திறந்துகொண்டு வெளி வரும் பெண்மணி "ஏய் பொம்மை! இங்கே கொண்டுவா!" என்று கூப்பிடுகிறாள். பொம்மைக் கூடை திண்ணையில் இறக்கி வைக்கப்படுகிறது. கூடையிலிருந்து கிருஷ்ணன், விஷ்ணு, லக்ஷ்மி, ஸரஸ்வதி, ராமர், ஸீதை முதலிய பற்பல கடவுள்கள் கண்ணைக் கவரும் வர்ணத் தோற்றத்துடன் வரிசை வரிசையாகத் தரிசனம் தருகின்றனர்! பெண்மணிக்கும் பொம்மை வியாபாரிக்கும் ஒரு சிறு தர்க்கம் நடைபெறுகிறது. கடைசியில் பெண்மணியின் கையிலிருந்து சில ரூபாய்கள் வியாபாரியின் கைக்கு மாறுகின்றன. கடவுள்களும் வீட்டிற்குள் எழுந்தருள்கின்றனர்!

இம்மாதிரிக் காட்சிகளை இப்போது நாம் சில நாட்களாக நம் வீதிகளில் காண்கிறோம். ஆம்! நவராத்திரி சமீபித்து விட்டது. நவராத்திரிக்குப் பெண்கள் எல்லோரும் கொலு வைக்கவேண்டும். அத்தருணத்தை முன்னிட்டுத் தான் பொம்மை வியாபாரியும் கடவுள்களைப் படைத்து எடுத்துக்கொண்டு தெருத் தெருவாய் அலைகிறான்! ஆமாம் இந்த நவராத்திரி என்றால் என்ன? அதை

---

கிடக்க மருந்து ஒன்று நாடுவதால் யாது பயன்? அதனுடைய காரணம் வேறு. நம் இளமகள் ஒருநாள் தினைப்புலம் காக்கச் சென்றபோது நடந்த செயல்கள் அனைத்தையும் கூறி மற்றும் அத்தலைவனும் மிக நல்லன். மிகுந்த செல்வமுடையவன், வீரன், அவனுக்கே கொடுப்பினும் நமது குடி உயரும் என்கிறாள்.

அஃதன்றியும், தலைவன் பல தடவை தலைவியை அடைய முயற்சி செய்வான். வழியில் பாம்பு, பாறை, சிங்கம், கரடி, காட்டுப் பசு, சுனைகள் முதலியன இருக்கும். இவைகளைக் கடந்து இங்கு வரினும், காவலர் ஏகுவர். கதநாய் குரைக்கும், நிலவு வெளிப்படும், அவள் துயில்வாள். அவனோ அவளைக் காணாது திரும்பிச் செல்வான். ஆனால் கோபிக்க மாட்டான். மீண்டும் மீண்டும் வருவான். எனவே அவனுக்கே முடித்தல் சால நன்று.......என இவ்வாறு இக்கதை செல்கிறது.

எனவே இக்கதையை நன்றாகத் தெரிந்தீர்கள். அரசன் செய்த சூளுரையைக் கண்டீர்கள். என்னே அவனது பெருமை. பலரும் தட்டுத் தடையின்றி வரவேண்டும். பலரும் உண்ணவேண்டும். ஆனால் அரசனோ பலர் உண்ட பிறகு எஞ்சியதை அவனும் அவர்தம் மனையாளும் உண்ணவேண்டும்.

இதுதான் அன்று தமிழ்நாட்டார் கண்ட நாகரிகம். தமிழ் மன்னன் கண்ட நாகரிகம். இப்பாட்டைப் பாடிய ஆசிரியருக்குக் கண்ணுக்கு எட்டிய தூரம் நிலம் வழங்கியதில் யாதோ குற்றம்? ஆம், அங்கும் குற்றமே. நம் உள்ளத்தை அல்லவா அவருக்குக் கொடுக்கவேண்டும்.

வாழ்க்கை எதற்கு? வாழ்க்கை ஏன்? என்றெல்லாம் கேட்பின் அதற்கு விடை ஒன்றே அன்றோ நமது குறிஞ்சிப்பாட்டில் பெறுவது. ஆம் அதுதான் என்ன?

"ஐயம் இட்டு உண்."

நாம் கொண்டாடும் விசேஷம்தான் என்ன என்று சற்றுக் கவனிப்போம்.

* * * *

மஹிஷாசுரன் என்னுமோர் கொடிய அரக்கன். அவனால் கணக்கிலடங்காத் துயரையடைந்தனர் மக்கள். கடைசியில் அவ்வரக்கனை மாய்க்க அன்னை பராசக்தி உளம் கொண்டாள். ஒன்பது நாட்கள் வரை அதற்கான வகை தேடி யோக நிஷ்டையிலமர்ந்திருந்தாள். பத்தாவது நாள் சிங்க ஏறுமீது ஏறிச்சென்று அவ்வரக்கனுடன் கொடிய போர் தொடுத்து கடைசியில் அவனை மாய்த் தொழித்த னள். தேவி பராசக்தி யோக நிஷ்டையிலிருந்த அந்த ஒன்பது நாட்கள்தான் "நவராத்திரி" என்றும், அரக்கனை வீழ்த்தி வெற்றி கொண்ட நாள்தான் விஜயதசமி என்றும் வழங்கப்படுகிறது.

* * * *

இதுதான் நவராத்திரியைக் குறித்து நமது முன்னோர்கள் வழங்கிவந்த புராணக் கதை. ஆம்! கதைதான்! நமது முன்னோர்களும் நம்மைப் போலவே பல கதைகள் எழுதி வைத்தனர். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். நாம் பொழுது போக்குக்காகக் கதைகள் எழுதுகிறோம். கலைவளர்ச்சிக்காகக் கதைகள் எழுதுகிறோம். ஆனால் நம் முன்னோர்கள் பல விஷயங்களைப் போதனை செய்யவே - பசுமரத் தாணிபோல் மனதில் பதியச் செய்யவே- கதைகள் எழுதி வைத்தனர். அவர்கள் எழுதி வைத்த கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்துக்கும் எடுத்துக் காட்டாக இருந்து வருகின்றன. ஆனால் இதில் ஒரே ஒரு குறை மட்டும். சில விஷயங்களை அவர்கள் மிகமிக மறைவாகவிட்டுச் சென்று விட்டனர். அக் கருத்துக்களைத் தெற்றெனக் கண்டு தெளிய நமக்குப் போதிய திறமை சில சமயம் இருப்பதில்லை.

போகட்டும். கதை என்றால் கருத்து ஏதாவது இருக்குமென்று சொன்னோமே, அப்படியாயின் இந்த நவராத்திரி கதைக்கும் கருத்து ஏதாவது இருக்க வேண்டுமல்லவா? ஆம்! இருக்கத்தான் வேண்டும். அது என்ன? ஏதோ தெரிந்தவரையில் பார்ப்போம்.

* * * *

மஹிஷம் என்றால் எருமை. மஹிஷாஸுரன் என்றால் எருமை அரக்கன். அதாவது எருமை உருக்கொண்ட அரக்கன். எருமையின் குணம் மந்தம். சற்றும் சுறுசுறுப்பின்றி சோம்பலாயிருக்கும் பிராணி எருமை. அவ்வெருமையை வெட்டி வீழ்த்தினள் சக்தி. சக்தி என்றால், வலுவு, பலம். சக்தி, சிங்கத்தின்மீது ஏறிச் சென்றுதான் அரக்கனை அழித்தாளாம். சிங்கம் சோம்பலற்றது, சுறுசுறுப்பானது, எதற்கும் அஞ்சாத நெஞ்சுரம் வாய்ந்தது, கம்பீரமானது. அரக்கன் வீழ்ந்தொழிந்தான். வெற்றி கிட்டிவிட்டது.

சோம்பலும் மந்த குணமும் அரக்கனுக் கொப்பானதே. ஆம்! அவற்றால் பீடிக்கப்பட்ட மக்கள் தம் காரியங்களில் வெற்றிபெறுது அல்லலுறுகின்றனரன்றோ? அவர்கள் எங்ஙனம் தம் சுயமதிப்பையும் மானத்தையும் காத்துக் கொள்வர்? சோம்பலையும் மந்த குணத்தையும் ஆத்மபலத்தைக் கொண்டு— சுறுசுறுப்பைக் கொண்டு—போக்கினால் எடுத்த காரியம் வெற்றியுடன் முடியுமென்னும் எளிய நீதி இக்கதையினின்று விளங்குவதாகக் கொள்ளலாமல்லவா?

தவிரவும் சிவமும் சக்தியும் இணைபிரியாதது; பாலும் அதன்கண்ணுள்ள இனிமையும் போல, வீணைக் கம்பியும் அதனின்று மூண்டெழும்நாதமும்போல, தீபமும் அதில் அடங்கியுள்ள ஒளியும் போல, சிவமும் சக்தியும் ஒன்றுடன் ஒன்று இரண்டறக் கலந்தது. சிவம் மனித சுபாவம். சக்தி என்பது அவனுக்குள்ள ஆத்ம சக்தி. எருமை ரோஷமற்ற பிராணி. எத்தனை அடி அடித்தாலும் அதற்கு உறைக்காது. மேலும் புத்தி தீக்ஷண்யமற்ற ஜடப் பிராணி எருமை. இத்தீய குணங்கள் மனிதனது புலன்களைப் பற்றுமாகில் அவனுக்கு வாழ்க்கையில் இன்பமேது? மதிப்பும் மானமுமேது? எனவே இத்தீய குணங்

களை ஆத்ம பலத்தால், ஞான சக்தியால் வெட்டி வீழ்த்தினால் வாழ்க்கையிலே வெற்றி பெறலாமென்னும் கருத்தை இந் நவராத்திரிக் கதை விளக்குவதாகக் கொள்ளலாமன்றோ ?

* * * *

கருத்து எதுவாயிருப்பினும் நவராத்திரி என்பது மாத்ரு பூஜை என்பதை மட்டும் யாவரும் ஒப்புக்கொள்வர். நவராத்திரி காலத்தில் நாம் தாயை பூஜிக்கின்றோம். நவராத்திரியின் உண்மைக் கருத்து நமக்குத் தெரிந்ததோ தெரியவில்லையோ, நாம் ஆண்டுதோறும் பொம்மைகளை அடுக்கி வைத்து நவராத்திரியைக் கொண்டாடுகிறோம். சுண்டல் வடைகளைச் செய்து சாப்பிடுகிறோம். ஆனாலும் நாம் பூஜிக்கும் தாய் இன்று எந்நிலையிலுள்ளாள் ? நமது பூஜையால் அவள் எம்மட்டும் மகிழ்ச்சியடையக் கூடும் என்று கவனிப்போம்.

தாய் என்றால் யார் ? தோற்றுவித்தவள் தாய். நம்மைத் தோற்றுவித்துப் போஷித்து வளர்த்தவள் அன்னை பாரத மாதா. அவள் இன்று எந்நிலையிலுள்ளனள் ? கைகளிரண்டும் அந்நியரிட்ட விலங்குகளால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. தன் சொந்த நாட்டில் அன்னியராட்சி புரிவதையும், தன்னருமைப் புதல்வர்கள் பசியாலும் பிணியாலும் வாடி வதங்குவதையும் கண்டு கண்ணீர் அருவியெனச் சோருகிறது அவள் கமலக் கண்களினின்று. யுத்தப் பேய் வேறு தன் கோரப் பற்களைக் காட்டிக் கொண்டு விரைந்தோடி வருகிறது. தன்னை ஈன்ற தாய் அந்நியனுக்கு அடிமையாயிருப்பதைக் கண்டும், நம் சகோதரர்கள் சிறைபட்டிருப்பதைக் கண்டும், நமது மனம் அவமானத்தால் குன்றுவதில்லை. நமது உள்ளம் ரோஷம் கொண்டெழுவதில்லை. தாயின் தளையை அறுத்தெறிய வீறுகொண்டெழ விடாமல் நம்மை, சோம்பலும் சுயநலமும் அறியாமையும் அடிமை மோஹமும் தடை செய்கின்றன.

இந்நிலையில் நாம் ஆண்டுதோறும் ஒருமுறை வர்ணப் பொம்மைகளை அடுக்கி வைத்துச் சுண்டல் வடை செய்து உண்பதுதான் மாத்ரு பூஜையா ? இத்தகைய பூஜையால் நமது அன்னைதான் உண்மையில் மகிழ்ச்சி யடைய முடியுமா ?

போதுமிந்த பொம்மை விளையாட்டு. நாம் ஒவ்வொருவரும் ஆத்ம சக்தியைத் தட்டி எழுப்புவோமாக ! ஒவ்வொருவருடைய உள்ளக்களத்திலும் மஹிஷாஸுர மர்த்தனத்தை நடத்துவோமாக ! சோம்பலையும் சுய நலத்தையும் அறியாமையையும் அடிமை மோஹத்தையும் வேருடன் வெட்டி வீழ்த்தி, தாயின் விடுதலைக்கு வீறுடன் எழுவோமாக ! இனிவரும் ஆண்டுகளிலாவது அன்னையைச் சுதந்திர பீடத்தில் கொலுவிருத்தி மாத்ரு பூஜையை உண்மையாகவே நடத்த எல்லாம் வல்ல பராசக்தி அருள் புரிவாளாக !

ஓம் சக்தி ! வந்தே மாதரம் !



# மாயனூர்

[ஏ. ஜி. வேங்கடாச்சாரியார்]

**மா**யனூர்! என்ன அழகான பெயர்! திருச்சினப்பள்ளி ஜில்லாவிலுள்ள இந்தக் கிராமம் சரித்திரப் பிரசித்தமானது. சேர, சோழ, பாண்டியமன்னர்களிடையே சச்சரவுகள் எழுந்த காலையில் அவர்களோ அல்லது மந்திரிகளோ இவ்விடத்துக்கு அருகில் கூடி சமரசம் பேசுவது வழக்கமாம். ஒரு பெரிய வட்டாரம் இதற்காக யுத்த சூன்ய பூமியாக நிரந்தரமாய் ஒதுக்கப்பட்டிருந்தது என்றும் தெரியவருகிறது. இந்த எல்லைக்குள் வசித்த மக்கள் போர்முரசு முழங்கக் கேட்டறியார் எனக் கூறுவார்கள். பழைய ஞாபகம் அடியோடு மங்கி மறையாமலிருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் யாரோ ஒருவன் சில தலைமுறைகளுக்கு முன் இங்கே ஓர் அம்மன் கோயிலைக் கட்டி, ஓயாத சண்டைகளையெல்லாம் தீர்த்துவைக்கும்வரப்பிரஸாதி என்ற மகிமையையும் அந்த தேவதைக்கு அளித்தான். அதுமுதல் இந்த ஸ்தலத்துக்கு வந்தது ஒரு புது யோகம். நெடுநாளைய விரோதிகள், 'மூஞ்சியில் கூட விழிக்கமாட்டேன்' என்று சங்கற்பம் செய்துகொண்ட பங்காளிக் காய்ச்சல்காரர்கள் போன்றோர், மீண்டும் கூடி உறவு கொண்டாட, காவேரிக்கரையில் அழகாக அமைந்துள்ள இந்த ஸ்தலத்தையே நாடுகின்றனர். இவ்விடத்துக்குச் சற்று தெற்கே, சிகப்புநிற மேடொன்று கண்ணுக்கெட்டிய தூரம்வரை வானை இடித்துக்கொண்டே போவதைக் காணலாம். கரூருக்குச் சுமார் பதினைந்து மைல் தூரத்திலிருந்து மதுரைவரை இந்த மேடு நீடிக்கிறது. இதைத்தான் மதுக்கரை என்று அழைக்கிறார்கள். இதுவே முக்காலத்திய தமிழ் ராஜ்யங்களின் எல்லையாக இருந்ததாகவும் ஐதிகம். இந்தவிடத்தைச் சமீபத்தில் காவேரிக்கரைமீது நின்று கண்ணுற்றபோது, மேலே கூறிய சரித்திரக் கதைகள் என் மனதை அவ்வளவாகக் கவரவில்லை. ஆனால் இவற்றின் காரணமாகவோ என்னவோ, இந்திய ஊழியர் சங்கத்தினர் தங்கள் கிராம சேவாஸ்தலத்தை இங்கே அமைத்திருக்கிறார்கள்.

ஸ்ரீ கே. ஜி. சிவஸ்வாமிக்கு உதவியாக இருந்துகொண்டு இந்த சேவா ஸ்தலத்தை நிர்வகித்துவரும் ஸ்ரீ சாம்பசிவனுடன்கூட அகண்ட காவேரியின் அழகை சமீபத்தில் பருகினேன். இரு கரைகளையும் பற்றிக்கொண்டு கம்பீரமாக ஜலம் நகர்ந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கட்டளை அணையின் உதவியால் இரு கரைகளிலும் பெரிய நீர்ப்பாசனக் கால்வாய்கள் கிளைத்துச் சென்றன. தொலை தூரத்திலுள்ள நதிக்கரையோர பூமிகளைச் செழிக்க வைக்க அவை விரைந்துகொண்டிருந்தன. ஆனால், காவேரிக்கரையிலிருந்து கூப்பிடு தூரத்திலிருக்கும் ஊழியர் சங்க ஸ்தலமும் அதையடுத்துள்ள பூமிகளும் தரிசாகக் கிடந்தன. நதியின் இரு கரைகளிலும் கொஞ்ச தூரத்துக்குக் கண் குளிரும் பச்சை; அதற்கப்பால் வெறும் பொட்டல்! டெல்டா பிரதேசம் தவிர காவேரியின் இரு தீரங்களிலும் இதே நிலைமைதான். ஏன், அநேகமாய் எல்லா நதிகள் விஷயத்திலும் இப்படித்தான். காவேரிக்கரையிலிருந்து இரண்டு பர்லாங் தூரத்திலுள்ள ஊழியர் சங்க ஸ்தலத்தைச்சுற்றியுள்ள புன்செய் நிலங்களின் விலையையும் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தையும் பற்றிக் கேட்டால் திடுக்கிடுவீர்கள். தான்யங்களின் விலை உச்சாணிக்கிளையிலிருக்கும் இந்தக்காலத்தில், வருஷத்துக்கு ஏகர் ஒன்றுக்கு மூன்று ரூபாய்தான் இங்கு அமலில் இருந்துவரும் குத்தகை நிலவரம். ஒரு ஏகராவின் விலை ரூபாய்

நூறு அல்லது நூற்றைம்பதுக்குமேல் இல்லை. இரண்டு வருஷங்களுக்குமுன் குத்தகையும் விலையும் இப்போதைய அளவில் மூன்றிலொரு பங்கு அல்லது பாதியாக இருந்தன என்று தெரியவந்தது. உணவு தான்ய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற பிரசாரம் இந்தப் பிரதேசத்தை எட்டவில்லையோ என்று முதலில் சந்தேகித்தேன். காவேரி ஜலத்தை குழாய்கள்மூலம்கொண்டுவந்து இலாபகரமாக சாகுபடி செய்ய முடியும் என்பதைக் கொஞ்ச தூரத்துக்கு அப்பால் காட்டுப்புத்தூரில் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், ஏழு வருஷங்களாக வெற்றிகரமாகக் காண்பித்துள்ளார். அவருடைய உதாரணத்தை இந்திய ஊழியர் சங்கம் பின்பற்றிச் சுற்றுப்புறங்களில் பிரபலப்படுத்த முயன்றதாகத் தெரிகிறது. ஆனால் சாமி வரம் கொடுத்தும் பூசாரி வரம் கொடுக்க மறுக்கிறான். அமெரிக்காவிலிருந்து "இரவல் குத்தகை" முறைப்படி மின்சாரக் குழாய் சாதனங்கள் கிடைப்பது அவ்வளவு சிரமமாக இல்லை. அவற்றை உபயோகிக்க ஏற்கெனவே வரும் விசையை இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பெறுவதற்கு முட்டுக்கட்டையாக எத்தனையோ அதிகார முறை ஜபர்தஸ்துகள்!

இந்திய ஊழியர் சங்கத்தின் இந்த சேவா ஸ்தலம் எந்த உயர்ந்த லட்சியங்களுடன் தன் வேலையைத் தொடங்கியதோ அவை சரிவரக்கைகூடவில்லை என்பதைக் கேட்டு எல்லோரும் வருந்துவர். சுற்றுப்புறத்தில் வசிக்கும் ஜாதி ஹிந்துக்களின் மனோபாவத்தில் இன்னும் போதிய மாறுதல் ஏற்படவில்லை. சேவா ஸ்தலத்தினர் நடத்தும் கல்வி - தொழில் பாடசாலையில், விவசாய பயிற்சியில் இலவச உணவு விடுதியில் ஹரிஜனங்களுடன்கூடச் சேர்ந்து பழகத் தயாராயுள்ள ஜாதி ஹிந்துக்களை விரலை விட்டு எண்ணிவிடலாம். இதன் காரணமாக இப்பொழுது அநேகமாய் ஹரிஜன மாணவர்கள் தாம் இங்கே வந்து சேருகின்றனர். ஹரிஜன சேவைக்காக ஸ்தலம் பயன்படுகிறது என்று சந்தோஷப்படலாம். ஆனால் இந்த வேலை நீடித்து வெற்றிகரமாய் நடைபெறுவதற்குச் சமுகக் கொடுமை குறுக்கே நிற்கிறது. உதாரணமாக இங்கே அளிக்கப்படும் முக்கியமான தொழிற் பயிற்சி நெசவு. அருகிலுள்ள கரூரிலும் சுற்றுப்புறங்களிலும் சுமார் 86 கைத்தறி நெசவாலைகள் இருக்கின்றன. இவை சுமார் 3,000 தொழிலாளருக்கு வேலை தருகின்றன. மாயனூர் ஸ்தலத்தில் பயிற்சி பெறும் சுமார் 40 மாணவர்களுக்கு இவற்றில் ஒவ்வொரு வருஷமும் வேலை சுலபமாய்க் கிடைக்க முடியும். ஆனால் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் ஜாதி ஹிந்து தொழிலாளர், ஹரிஜனங்களுடன் சேர்ந்து வேலை செய்ய மறுப்பதுதான். வேலை செய்தாலும் பரவாயில்லை. கூட இருந்து அவர்கள் சாப்பிடுவதை அனுமதிக்கப் பெரும்பான்மையும் நாட்டுப்புறத்தினராயுள்ள மற்றத் தொழிலாளர் சம்மதிப்பதில்லை. எனவே, இங்கே ப்யிற்சி பெறுவோரில் பலர் மறுபடியும் தங்கள் சேரியின் வறுமையையே அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக சேவா ஸ்தலத்தின் நல்ல வேலையெல்லாம் வீணாய் விடும்போலிருக்கிறது. கிறிஸ்தவர்கள் சிலர் நடத்தும் தொழிற்சாலைகள் மட்டுமே இவர்களை ஏற்றுக்கொள்கின்றன. இதன் விளைவாகச் சில சமயங்களில் ஏற்படும் மத மாறுதல்கள் சேரியினருக்குப் பிடிக்கவில்லை. இந்த நிலைமையில் சேவா ஸ்தலத்தின் நல்ல வேலையை மேற்கொண்டு உருப்படியாக நடத்துவதே சிரமமாய் விடுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. சுற்றுப்புறங்களில் பொதுஜன அபிப்பிராயம் கணிசமாக மாறக்கூடியவாறு தீண்டாமை யொழிப்பு முயற்சி நடைபெறுவது முக்கியமானது என்றே தோன்றுகிறது. கால்நூற்றாண்டாகப் பிரசாரம் நடந்தும்கூட நமது பிற்போக்கு அப்படியேதான் இருந்து வருகிறது என்பதற்கு அத்தாட்சி வேறென்ன வேண்டும்?"

# இந்தியாவின் துறைமுகங்கள்

[ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி]

## II

### பம்பாய்

**ப**ம்பாய் என்பது (அப்பெயர் கொண்ட) ஒரு தீவு. அதன் பூகோள நிலைமையையும் அதன் இயற்கையான துறைமுகமும் அதற்குப் பெருமை அளிக்கின்றன. இங்கிலாந்தின் அரசனை இரண்டாம் சார்லஸின் பட்ட மகிஷி பிராகான்ஜா இளவரசி காதரைன் என்பவருக்குச் சீதனமாக அந்த நாளில் இந்தத் தீவைக் கைப்பற்றிச் சொந்தமாக ஆண்டு அனுபவித்து வந்த அவரது பெற்றோர்கள் கொடுத்தார்கள் என்பது சரித்திரப் பிரசித்தம். அந்த ராணி இதை 1668-ம்வருஷம் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குப் பத்து பவுன் வருஷத் தீர்வை கொடுத்து விட்டாள். அதற்கு 150 வருஷங்களுக்கப்புறம் தக்காணத்தைப் பிரிட்டிஷார் கைப்பற்றியபோது பம்பாய் மாகாணத் தலை நகராயிற்று. 19-ம் நூற்றாண்டின் பாதிவரையில் இத்துறைமுகத்துக்குச் சிறப்பு ஏற்படவில்லை. மேற்குக் கரையிலுள்ள சிறு துறைமுகங்களிலிருந்து சரக்குகளைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு இது ஒரு சௌகரியமான நிலையமாக மட்டுமே இருந்துவந்தது. அதோடு கடலுக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் இடையிலுள்ள சமவெளி இங்கு சற்று வசதியாயிருந்தது.

1838-ம் வருஷம் இங்கிருந்து மாசா மாசம் சீமைக்குத் தபால் போக்குவரத்து ஏற்பட்டது. அதுவும் பாதி தூரம் எகிப்து வழியாய்த் தரை மார்க்கமாய்த்தான் போய்கொண் டிருந்தது. அதுமுதல் சற்றுச் சிறப்பு ஏற்பட்டது. அதற்குப் பன்னிரண்டு வருஷத்துக்குப் பிறகு பம்பாய்க்கும் மேற்குத் தொடர்ச்சி மலையைத் தாண்டி அப்பாலுள்ள பருத்தி விளை பிரதேசங்களுக்கும் கோதுமை விளைகிற பஞ்சாப்புக்கும் ரயில் போட்டார்கள். அமெரிக்காவில் உள்நாட்டுக் கலகம் வந்தபோது பம்பாய் பருத்திக்கு என்றுமில்லாத கிராக்கி ஏற்பட்டது. அந்த வர்த்தக வெறியில் சிக்கிக்கொண்டு எத்தனையோ முதலாளிகள் கடைசியில் கவிழ்ந்து போனார்கள் என்றாலும், அதன் விளைவாக பம்பாய் துறைமுகம் பல ரேவுகளும் சீர்திருத்தங்களும் பெற்றதோடு, அதன் வர்த்தகப் பெருமையும் வளர்ந்துவிட்டது.

சென்ற நாற்பது வருஷங்களில் நடந்து வந்த ஏற்றுமதி இறக்குமதிப் புள்ளி விவரங்களைப் பார்த்தால் வருஷா வருஷம் சராசரி அறுபதுகோடி ரூபாய் பெறுமான சரக்குகள் இறக்குமதி ஆகின்றன. சராசரி எண்பதுகோடி பெறுமான சாமான்கள் ஏற்றுமதி ஆகின்றன. ஆகமொத்தம் நூற்றைம்பது கோடிக்கு கிட்டத்தட்ட வியாபாரம் நடந்திருக்கிறது. 1896-ம்வருஷத்தில் பிளேக் நோய் பம்பாய் மாகாணத்தில் பரவி வியாபாரம் எல்லாம் தலைகீழாய்ப் போயிருந்தது. அதனால் துறைமுகத்திலும் சரி, அதற்குச் சாமான்களை அனுப்பும் தொழிற்சாலைகளினும் சரி, கொஞ்சம் பாதகம் ஏற்பட்டது என்பது வாஸ்தவமே. இருந்தாலும், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் மாத்திரம் நாளுக்குநாள் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. இந்த யுத்தத்தினால் மற்றத் துறைமுகங்களில் வேலை ஓய்ந்திருந்தாலும் பம்பாயில் மட்டும் கப்பல் போக்குவரத்து சிறிதுகூட குறையவேயில்லை.

பம்பாயிலிருந்து குஜராத்துக்கும் வட இந்தியாவுக்கும் பம்பாய் - பரோடா - செண்டிரல் இந்தியா ரயில்வே ஓடுகிறது. மற்ற கல்கத்தா, சென்னை, மத்திய மகாணம் முதலிய இடங்களுக்குக் கிரேட்

இண்டியன் பனின்சுலா ரெயில்வே ஓடுகிறது. இந்தத் துறைமுகத்துக்கு வந்து குவிகிற பண்டங்களில் மிக முக்கியமானது பருத்திதான். மற்றவை நிலக்கரி, தோல், நூல், தானிய வகைகள், எண்ணெய் வித்துக்கள் முதலியன. இறக்குமதியாகும் பொருள்களில் மிக முக்கியமானது சவரன் பொன், பருத்தி ஜவுளிகள், இரும்பு சாமான் இயந்திரங்கள், மண்ணெண்ணெய், சர்க்கரை, தேக்கு முதலியவை. கல்கத்தாவுக்குச் சமீபத்தில் நிலக்கரிச் சுரங்கங்கள் இருப்பதாலும் துறைமுகத்துக்குச் சாமான்களைத் துரிதமாகக் கொண்டு சேர்க்கப் படகு ஓடும் ஆறுகளும் வாய்க்கால்களும் இருப்பதாலும் அங்கு ஏற்றுமதி இலேசு. பம்பாயிலோவென்றால் கடல் நடுவில் இயற்கையாய் அமைந்த துறைமுகம் இருக்கிறது. வருஷம் முழுவதும் இதில் கப்பல்கள் வந்து போகலாம். இந்த வசதிதான் இதற்குப் பெருமை.

பம்பாய்த்துறைமுகத்தில் வந்துநிற்கிற கப்பல்கள் கல்கத்தாவில் வருகிறவைதான். அதோடு மெக்கா யாத்திரை போகிறவர்கள் தொகை மிகப் பெரிது. அவர்கள் எல்லாரும் பம்பாயிலேதான் கப்பலேற வேண்டும். பாரசீக வளைகுடாவைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் நம் நாட்டு மக்கள்தான் பெருவாரியாக வர்த்தகம் செய்கிறார்கள். அதோடு கரையோரமாகவே கராச்சி, கத்தியவார், மலையாளக்கரை, கோவா முதலிய இடங்களுக்குப்போகிற ஏற்றுமதியும் அதிகம். சென்ற 1914ஆ இந்தத் துறைமுகத்தில் வந்துபோன கப்பல்களின் எண்ணிக்கை 1536. அவை சுமார் நாற்பது லட்சம் டன் எடை உள்ளவை. இருபத்தைந்து வருஷத்துக்குப் பிறகும் இந்தக் கணக்குக் குறையவில்லை. அதிகரித்திருக்கிறது.

பம்பாய்த் துறைமுகத்தின் நிர்வாகம் சட்டசபையார் ஏற்படுத்தின சட்டப் பிரகாரம் போர்ட் டிரஸ்ட் என்று ஒரு சபையின் கையில் இருக்கிறது. இதன் தலைவரை சர்க்கார் நியமிக்கிறார்கள். இருபத்தொரு அங்கத்தினர்களில் எட்டுப் பேரை சர்க்காரை நயமிக்கிறார்கள். பம்பாய் (வெள்ளைக்காரர்) வர்த்தக சபை ஐந்து பேரையும், இந்திய வர்த்தகர் சங்கம் ஐந்து பேரையும் பம்பாய் நகர சபை இரண்டு பேரையும், பம்பாய் மில் சொந்தக்காரர் சங்கம் ஒருத்தரையும் தேர்ந்தெடுக்கிறார்கள். சர்க்கார் நியமனத்தில் இருவர் தொழிலாளர் பிரதிநிதியாயிருப்பார். துறைமுகத்துக்குள் நிர்வாகமும், விளக்கு, ரேவு, ரயில், கிடங்கு முதலிய யாவும் இந்த சபையின் அதிகாரத்தின்கீழ் நடக்கிறது.

இந்தச் சபை ஏற்பட்ட விதம் சுவாரஸ்யமானது. 1862ஆ எல்பின்ஸ்டன் லாண்டு அண்டு பிரஸ் கம்பெனி என்றொரு கடையிருந்தது. இந்தக் கடைக்காரர்கள் சர்க்காரோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். 'கிரேட் இண்டியன் பெனின்ஸுலா ரெயில்வே'க்குப் பம்பாயில் நிலையங்கள் கட்ட நாங்கள் நூறு ஏகர் நிலம் கொடுக்கிறோம். அதற்காக எங்களுக்குக் கடலிலிருந்து இருநூற்றைம்பது ஏக்கர் நிலம் தண்ணீரை இறைத்துவிட்டு மீட்டுக்கொள்ள அநுமதி தாருங்கள் என்றார்களாம். அதிலிருந்து துறைமுகத்துக்கு வசதிகள் ஏற்பட்டனவாம். சர்க்கார் அதைப் பார்த்துவிட்டு துறைமுகத்துக்கு அண்டையில் இப்படி ஒரு தனி வர்த்தகருக்கு ஏகபோக உரிமை கொடுத்துவிடுவது யுக்தமல்ல என்று உணர்ந்து அதை விலைக்கு வாங்கிப் பொது சபை ஒன்றை நிறுவி அவர்களிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தார்களாம். 1869ம் வருஷம் சர்க்கார் இதை வாங்கி 1873ஆ போர்ட் டிரஸ்டு ஒன்று தோற்றுவித்து அவர்களிடம் விட்டார்கள். 1879ம் வருஷம் புதுச் சட்டப்படி டிரஸ்டு சபையை மாற்றி அமைத்தார்கள். இன்று வரை அச்சபை அப்படியே இருந்து வருகிறது.

பம்பாய்த் துறை என்பது பம்பாய்த் தீவுக்கும் கரை[illegible]டுக்கும் இடையில் உள்ள [illegible] ஒரு [illegible] துண்டு. அது [illegible] அமைந்திருப்பதாலும், [illegible] இருப்பதாலும் மண்

மேடிட்டுப் போகாமல் வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் போக்குவரத்துக்கு வசதியாயிருப்பதனாலும், மேற்கிந்தியாவுக்கும் மத்திய இந்தியாவுக்கும் வெளிநாடுகளோடு வர்த்தகஞ் செய்வதற்கு ஏற்ற துறையாயிருக்கிறது.

உலகத்துக்குள்ளே மிக விசாலமானதும், மிகப் பத்திரமானதுமான துறைமுகங்களுள் இது ஒன்று. இது சுமார் 14 மைல் நீளமும் 4, 6 மைல் அகலமுமுள்ளது. இதன் விஸ்தீர்ணம் 74 சதுர மைல். ஆழம் 22 அடிமுதல் 40 அடி வரையிலு மிருக்கிறது. துறைமுகத்துக்கு வழி தென்மேற்கில் இருக்கிறது. பம்பாய்த் தீவின் தெற்குக் கோடிக்குக் கொலாபா என்று பேர்; இது பலத்த காற்று அடித்தால் அதைத் தடுத்துத் துறைமுகத்திலுள்ள கப்பல்களைக் காப்பாற்றுகிறது.

துறைமுகத்திலும், அதற்கு வருகிற கப்பல் மார்க்கத்திலும் நல்ல வெளிச்சம் போட்டிருக்கிறார்கள். இதற்காக மூன்று கலங்கரை விளக்கங்கள் இருக்கின்றன. ஒன்று மிதக்கும்படி கப்பலில் அமைத்த விளக்கம். ஒன்று பம்பாய்க்குத் தெற்கே 11 மைல் தூரத்தில் உள்ள கென்னெரி தீவில் கடல் மட்டத்துக்கு 154 அடி உயர இருக்கிறது. இதன் வெளிச்சம் 18 மைல் தூரம் தெரியும். மூன்றாவது விளக்கு, கொலாபாவுக்குத் தெற்கே உள்ள பாறைகளை விளக்குகிறது. இவற்றுக்குக் கம்பியில்லா டெலிபோன் உண்டு. துறைமுகத்துக்கும் கலங்கரை விளக்கங்களுக்கும் கம்பியில்லா டெலிபோன் மூலமாய்ப் பேச்சு நடக்கும். பம்பாய்க்கு 16 மைல் வடக்கேயுள்ள ஜுஹூவில் திசையறி நிலையம் இருக்கிறது. கென்னெரி தீவிலிருந்து நூறு மைலுக்கு எட்டக்கூடிய கம்பியில்லாத் தந்தி அறிவிப்பு நிலையம் ஒன்றிருக்கிறது. இவற்றின் உதவியால் மாலுமிகள் தங்கள் நிலையை அறிந்து கொள்ளுவார்கள்.

இதைத் தவிர பூனா நட்சத்திராபீசிலிருந்து தந்தி மூலமாய் வருகிற புயல் காற்று அறிவிப்புக்களை உடனுக்குடன் துறைமுகத்திலே தெரியும்படி விளக்குகளையும் கொடிகளையும் உயர்த்தி கப்பல்களுக்கு அறிவிக்கிறார்கள்.

நூறு டன் எடைக்குமேற்பட்ட கலங்களுக்கு இத்துறை முகத்தார் நியமித்திருக்கும் மாலுமிகளே துறைமுகத்துக்குள்ளே செலுத்திக்கொண்டு போக வேண்டுமென்கிற கட்டாயமுண்டு.

வருஷ வாரியில் சுமார் 40, 50 கோடி டன் சாமான்கள் இந்தத் துறைமுகத்தின் கரையில் வந்து போகின்றன. ஒவ்வொரு பிளாட் பாரத்திலும் கூறை போட்ட கிடங்குகள் உண்டு. அவற்றில் தண்ணீரால் இயங்கும் கிரேன்களும் மூட்டை தூக்கிகளும் உண்டு. மூட்டைகளில் வரும் சாமான்களை அடுக்கத் தனியிடமும் விலை உயர்ந்த சாமான்களைப் பூட்டி வைக்க 'பிஞ்சரா' என்கிற பிரம்மாண்டமான உக்கிராண அறைகளும் உண்டு. கிடங்கு மொத்த விஸ்தீரணம் 2,500,000 சதுர அடி.

இந்த ரேவுக்குப் பிரின்ஸஸ் டாக், விக்டோரியா டாக், அலெக்ஸாண்டிரா டாக், மெரிவெதர் டாக், ஹியூஸ் டாக் என்று பேர்களுண்டு. அலெக்ஸாண்டிரா டாக்கில் இருப்புப் பாதை ஓடுகிறது. மூன்று டாக்குகளிலும் சேர்ந்து 209 கிரேன்கள் இருக்கின்றன. இவற்றைத் தவிர 30 டன் 100 டன் தூக்குகிற பெரிய கிரேன்கள் இரண்டுண்டு. மிதக்கும் கிரேன் ஒன்று 60 டன் தூக்கக்கூடியது. மண் ணெண்ணெய் பெட்ரோல் முதலிய எண்ணெய்ப் பொருள்களைக் கப்பல்களிலிருந்து டாங்கிகளுக்குக் கொண்டுபோக ஒவ்வொரு துறையிலும் பெரிய குழாய்கள் உண்டு. இவை ஒவ்வொன்றும் இரட்டையாயிருப்பதால் ஏக காலத்தில் ஒன்றின் வழியாய் இறக்குமதியும் மற்றதின் மூலமாய் ஏற்றுமதியும் செய்யலாம். ஒழுகுகிற எண்ணெய்ப் பண்டங்களைத் திரட்டி எடுக்க ஒரு தெப்பமும் இருக்கிறது.

இதைத் தவிர ஒவ்வொரு துறைக்கும் அடுத்தாற்போல் சாலையைப் பார்த்துப் பெரிய கிடங்குகள் உண்டு. அவற்றின் வழியாய் இறக்குமதியான பொருள்களை உடனுக்குடன் ரயிலேற்றி விடலாம்.

இவை மூன்று மாடி உள்ளவை. ஜவுளி களைச் சேமித்துவைக்கப் பிரத்தியேக மான கிடங்குகள் இருக்கின்றன.

இவற்றைத் தவிர கூறையில்லாத, ‘பந்தர்’ என்று சொல்லுகிற ரேவுகளு முண்டு. அவற்றில் கரையோர வர்த்த கம் செய்யும் கப்பற் சரக்குகள் இறக்கு மதி ஏற்றுமதி நடக்கிறது. இது சுமார் 30,000 அடி நீளம். இதிலும் கிரேன் களும், அடுத்தாற்போல் சாமான் கிடங்கு களுமுண்டு.

சுமார் 7½ மைல் நீளத்துக்குத் துறை முக ரயில்வே இருக்கிறது. இதில் பாதிக்கு மேற்பட்ட சாமான்கள் போகின்றன. இது பல கிளைகளாகப் பிரிந்து வடலா என்கிற ஜங்ஷனில் அந் தந்த ரயிலுக்கு மாற்றுகிறது. பருத்தி தானியங்களுக்குத் தனியே மஸகான் - ஸிவ்ரி என்கிற இடத்தில் பண்டக சாலை கள் உண்டு.

எண்ணெய் டாங்கிகள் துறைமுகத் துக்கு வடக்கே உள்ளன. அவற்றின் விஸ்தீரணம் 83 ஏகர். சுமார் ஆறு கோடி காலன் எண்ணெய் அங்கே வைக்க இட மிருக்கிறது. இவற்றிற்கு எண்ணெய் கொண்டு வருகிற குழாயின் நீளம் 20 மைல். இந்த டாங்கிக்கு 5½ மைல் தூரத் திலே தான் மண் எண்ணெய் பெட்ரோல் முதலியவை வெளியேற்றப்படுகின்றன.

இங்குள்ள பருத்திக்கிடங்கு உலகி லேயே மிகப் பெரியது. 1923ம் வருஷம் 1½ கோடி ரூபா செலவில் சுமார் 127 ஏகர் விஸ்தீரணத்தில் கட்டி னார்கள். இது துறைமுகக் கரைக்கு மேற்கே யுள்ளது. இதில் பத்துலட்சம் பேல்கள் வைக்கக்கூடிய 178 கிடங்குகள் (சிமிட்டி காங்கிரீட் கட்டிடம்) இருக் கின்றன. தவிர 230 திண்ணைகள் இருக்கின்றன. இவற்றில் சிலவற்றிற்கு மழை வெயிலுக்கு ஆதரவும் உண்டு. இதிலும் பத்துலட்சம் பேல் பிடிக்கும். இந்தப் பருத்திக் கிடங்கின் இருபுறத்தி லும் 20 ஸ்டேஷன்கள் இருக்கின்றன. இதில் 8 மைல் நீளமுள்ள இருப்புப் பாதை ஓடுகிறது. இதில் தீயணைக்கும் படையும், மருத்துவசாலைகளும் உண்டு.

தானியக் கிடங்கு பருத்திக் கிடங் குக்குக் கிழக்கே ரயில் பாதைக்கு அந் தண்டை இருக்கிறது. இது அமைப்பி லும் போக்குவரத்து சாதனத்திலும் மற்ற ஊர்களுக்கு முன்மாதிரியா யிருக் கிறது. விஸ்தீரணம் 80 ஏகர். இதில் பத்து லட்சம் சதுர அடிக்கு அதிகமா கவே இடவசதி உண்டு. கிடங்குகள் 500, 1000 அடிநீளம், 110 அடி அகலம், ஒன்றன் பக்கத்தில் ஒன்றாய் அமைந் திருக்கின்றன. இவற்றுக்குப் போக சிறந்த ரஸ்தாக்களுண்டு. குடி தண்ணீர், மின்சார விளக்குகளும், மின்சாரத்தால் ஓடும் யந்திரங்களும் இருக்கின்றன. கிடங்குகளுக்கு இடையிலே இறக்குமதி க்கு ஒன்றும் ஏற்றுமதிக்கு ஒன்றுமாக இரண்டிரண்டு இருப்புப்பாதைகளுண்டு. 1914ல் இதைக் கட்டும்போது தானி யங்களுக்கும் எண்ணெய் வித்துக்களுக் கும் என்று கட்டினார்கள். பின்னால் விசேஷ சீர்திருத்தங்களைச் செய்து இப் போது பல்வேறு சாமான்களுக்கும் பயன்படும்படிசெய்துவிட்டார்கள். இதில் சுமார் எட்டு ஏகர் இடத்தை ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனிக்காரர் மோட் டார் தொழிற்சாலைக்கு வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள்.

இவைகளைத் தவிர, நிலக்கரி, சிமிட்டி, வைக்கோல் முதலிய வேறு பொருள் களுக்குத் தனித்தனி கிடங்குகள் ரேவு துறைகள் இருக்கின்றன.

கடலில் ஏற்றம் போட்டு இறைத்து நிலத்தை ‘மீட்டு’ இந்தத் துறைமுகத்து அதிகாரிகள் சுமார் 26 ஏகர் நிலத்தைத் தொழில்சாலைகளுக்காக ஒதுக்கி வைத் திருக்கிறார்கள். இவற்றில் ரயில், ரஸ்தா வசதிகளும் அமைப்பும் வெகு பொருத் தமாயிருக்கின்றன. வேண்டியவர்களுக்கு வேண்டியபடி இந்த இடத்தில் வாடகைக் குக் கொடுக்கப் போகிறார்கள்.

இந்தத் துறைமுகக் கரை கட்டிடங் கள் எல்லாமே கடலில் ‘மீட்ட’ நிலம் தான். இந்தத் துறைமுக பரிபாலன சபை தோன்றின முதல் முப்பது வரு

# நக்ஷத்திரங்கள்

[டி. பி. நவநீதகிருஷ்ணன், எம். ஏ., அண்ணாமலைநகர்]

இரவில், அண்ணாந்து வானை நோக்கின், எங்கும் நக்ஷத்திரங்கள் ஜ்வலிக்கின்றன. எண்ணற்ற விண்மீன்கள் உண்டென எண்ணுகிறோம். ஆனால், கண்ணால் பார்க்க முடிந்த நக்ஷத்திரங்கள் சில்லாயிரமேயென வான சாஸ்திர நிபுணர் சொல்லுகின்றனர். தான் கண்டு பிடித்த டெலெஸ்கோப்பைக் கொண்டு, கலிலேயோ எனும் விஞ்ஞானப் பேரறிஞர், ஐந்து லக்ஷம் நக்ஷத்திரங்களைக் கண்டார். அவருக்குப்பின், தோன்றிய விஞ்ஞானிகள், மகத்தான டெலெஸ்கோப்களைக்கொண்டு, மேலும் பல லக்ஷம் நக்ஷத்திரங்களைக் கண்டனர். கண்டதுடன் நில்லாது, பலவகையான அளவைகளைச் செய்து, நக்ஷத்திர ஆராய்ச்சிகளில் பல முன்னேற்றமான விஞ்ஞான முறைகளையும் கையாண்டனர். நக்ஷத்திரங்களைப்பற்றின அறிவைப் பெருக்கினர். அவர்கள் கண்டு பிடித்த விஷயங்களில் சிலவற்றைப்பற்றி எழுதுகிறேன்.

விஞ்ஞானம் செழித்த நாடுகளிலெல்லாம், நக்ஷத்திரங்களைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்துவதற்கான 'உடுவியல்' விஞ்ஞானச் சோதனை நிலையங்கள் (ஆஸ்ட்ரோ பிஸிக்ஸ் ஆப்ஸர்வேடரிஸ்) நிறுவப்பட்டன. கலிலேயோவின் டெலஸ்கோப்பின் லென்ஸ் சில அங்குலக் குறுக்களவேயானது. இப்பொழுது, நக்ஷத்திரங்களைப்பற்றி ஆராய்வதற்கு உபயோகிக்கப்பட்டு வரும் டெலிஸ்கோப்களின் 'நோக்காடி' (ஆப்ஜக்ட் க்ளாஸ்) களின் குறுக்களவு 60 முதல் 200 அங்குலங்கள் வரையிலுள்ளது. அவை, 60 முதல் 100 அடிவரை உயரமுள்ள ஸ்தூபிகள்மீது நிருமிக்கப் படுகின்றன. நக்ஷத்திர ஆராய்ச்சிகளில், ஸ்பெக்ராமீடர்களும் பெரிதும் உதவுகின்றன. பலவகையான அபிவிருத்திகளுடனமைந்த ஸ்பெக்ட்ராமீடர்கள் அந்நிலையங்களில் இருக்கின்றன. பலவகையான நுட்பங்களுடன் அமைக்கப்பட்ட சிறந்த கருவிகள் வேறு பலவும் அவ்வாராய்ச்சியில் கையாளப்படுகின்றன.

நக்ஷத்திரங்களைப்பற்றி அறியப்பட்ட பல விஷயங்களில், முக்கியமான சிலவற்

---

ஷத்தில் சுமார் 167 ஏகர் நிலத்தை மீட்டார்கள். பிற்பாடு 1908-1912ல் 583 ஏகர் நிலம் இப்படியே உண்டாயிற்று. அதற்கப்புறம் கொலாபா என்கிற இடத்தில் 310 ஏகர் நிலத்தைச் சேர்ந்தார்கள். இப்படியாக 1880 ஏகரா நிலத்தைக் கடலிலிருந்து நிலமாக்கி யிருக்கிறார்கள். இது பம்பாய் (தீவு) நகரத்தின் விஸ்தீரணத்தில் அரைக்கால் பங்கு என்றால் அந்தத் துறைமுகப் பரிபாலன சபையார் திறத்தை என்னென்று வியப்பது!

இந்தத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி ஆகும் பொருள்களின் பட்டியையும் அவற்றின் மதிப்பையும் இங்கே எழுதுவமென்றால் இடம் போதாது. துறைமுகத்தின் வரும்படி மாத்திரம் சராசரி மூன்று கோடி ரூபாய். அத்தனையும் சிப்பந்தி செலவுக்கும் சீர்படுத்தும் செலவுக்கும் போய் விடுகிறது. கட்டடங்களாக உள்ளது சுமார் 25 கோடி ரூபாய். இதற்கு 20 கோடி கடன் இருக்கிறது. இதை வருஷாவருஷம் இறுத்துக் கொண்டு வருகிறார்கள். கால் வாசி அடைந்துவிட்டது. இதைத் தவிர பல இடங்களில் இருப்பாக வைத்திருக்கும் மூலதனம் ஒரு கோடி ரூபாய் பெறும்.

ஜனநாயக ஆட்சியின் வெற்றிக்கு இந்த பம்பாய்த் துறைமுகத்தின் நிர்வாகமே சிறந்த அத்தாட்சியாகும்.

றைக் குறித்துச் சொல்லிவிட்டு, ஸ்பெக்ட்ரோ மீட்டரால் செய்யப்பட்ட சோதனைகளைப்பற்றிச் சற்று சுருக்கமாய்ச் சொல்லலாம். நக்ஷத்திரங்கள், நமது சூரியனைப்போன்ற வேறு சூரியர்கள் என்பது இப்பொழுது எல்லோரும் அறிந்ததே. அவை நம்முலகத்தினின்று கோடானு கோடி மைல்கள் தூரத்தி லிருப்பதனாலேயே, சிறிதாய்க் காணப்படுகின்றன. நக்ஷத்திரங்கள் இவ்வாறு நம்முலகினின்று வெகு தூரத்திற்கப்பால் உள்ளவை யாதலால், விஞ்ஞானிகள் அத்தூரங்களை மைல்களில் குறிப்பிடுவதில்லை. அதை 'ஒளியாண்டு' (லைட் யியர்) என்ற யூனிட்டில் குறிப்பிடுகிறார்கள். ஒளி செகண்டிற்கு 186,000 மைல்கள் வேகத்துடன் செல்கின்றது. சூரியனின்று நமக்கு ஒளிவர எட்டு நிமிஷங்கள் ஆகின்றன. ஒன்பது கோடி மைல்களுக்கு அப்பாலுள்ள சூரியனின்று ஒளி வர எட்டு நிமிஷங்களே ஆனால், ஒரு ஆண்டில் ஒளி வந்தால், அது எவ்வளவு தூரம் வந்திருக்க வேண்டும் என்பதைக் கணக்கிடலாம். ஒரு ஆண்டு 5,25,600 நிமிஷங்கள் கொண்டது. எனவே, ஒரு ஒளியாண்டு தூரத்திலுள்ள நக்ஷத்திரம், சூரியனைவிட 65,700 மடங்கு தூரத்திலுள்ளது. அதாவது, ஒரு 'ஒளியாண்டு' என்றால் சுமாராக ஆறு லக்ஷக் கோடி மைல்கள். மற்ற எல்லா நக்ஷத்திரங்களைவிட, நம்முலகிற் கருகிலுள்ளது "பிராக்ஸிமா ஸெண்டாரி' என்பது. அதன் தூரம் 4·2 ஒளியாண்டுகள். அதாவது, சுமார் இருபத்தைந்து லக்ஷக் கோடி மைல்கள். 22 கோடி ஒளியாண்டுகள் தூரத்திலுள்ள நக்ஷத்திரங்கள் கூட கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. நம்முலகினின்று ஒரு நக்ஷத்திரம் எவ்வளவு தூரத்திலுள்ளது என்பது எப்படி கணக்கிடப்படுகின்றது என்பதைப்பற்றிச் சுருக்கமாய்க் குறிப்பிடலாம். ஒவ்வொரு நக்ஷத்திரமும் வானவெளியில் நிலையாயிருப்பது போல் தென்படுகின்றது. அவையெல்லாம் இவ்வுலகினின்று ஒரே யளவான தூரத்திலுள்ளவைபோல் காணப்படுகின்றன. ஆனால், குறித்த இரு நக்ஷத்திரங்கள்மட்டும், நம்முலகில் வெவ்வேறான இரு இடங்களினின்று ஒரே சமயத்தில் கவனிக்கப்பட்டபோது, அவ்விரு நக்ஷத்திரங்களிடையிருந்த கோண இடைத்தூரம் (ஆங்குலர் டிஸ்டன்ஸ்) ஒன்றாயில்லாமல் வித்தியாசப்பட்டது. இரண்டு நக்ஷத்திரங்களும், இவ்வுலகினின்று ஒரே யளவான தூரத்தில் இருந்தால், கோண இடைத்தூரம் ஒன்றாயிருக்கும். ஆதலால், அவை வேறாக யிருந்ததால், நக்ஷத்திரங்கள் வெவ்வேறான தூரங்களில் உள்ளவையென யேற்பட்டது. அவ்விரு இடங்களுக்குமிடையுள்ள தூரத்தையும் கோண இடைத் தூரங்களின் வித்தியாசத்தையும் அறிவதால், கோண கணிதம் (Trignometry) கொண்டு, நக்ஷத்திரங்களின் தூரங்களைக் கணக்கிட முடிந்தது.

ஒவ்வொரு நக்ஷத்திரமும், நமது சூரியமண்டலம் போலவே, அததனுடைய மண்டலத்துடன் உள்ளது. விஞ்ஞானிகள் பல்லாயிரக்கணக்கான நக்ஷத்திரங்களின் குறுக்களவுகளைக் கணக்கிட்டுள்ளார்கள். இது எப்படி செய்யப்படுகின்றது என்பதைப்பற்றியும் சுருக்கமாய்ச் சொல்லலாம். ஒரு நக்ஷத்திரத்தை நேரே பார்க்கும்போது, அது மிகச் சிறிதாய்த் தோன்றினாலும், டெலஸ்கோப்பால் பார்க்கும்போது, அது அளவிடக்கூடிய குறுக்களவுடனுள்ள வட்டமாகவே காணப்படும். அதை அளவிடுவதாலும், நக்ஷத்திரத்திற்கும் நம்முலகுக்கும் இடையுள்ள தூரத்தை அறிவதாலும், நக்ஷத்திரத்தின் குறுக்களவைக் கணக்கிடலாம். இவ்வாறு பல்லாயிரக்கணக்கான நக்ஷத்திரங்களின் அளவைகளைக் கணக்கிட்டபின், விஞ்ஞானிகள் அவற்றை அளவுக்குத் தகுந்தவாறு, பல வகையானவையாய் வகுத்தனர். நக்ஷத்திரங்களின் வகைகளை அவற்றின் ஜீவிய சரித்திரமாயமைத்துக் கூறலாம். நக்ஷத்திரங்களின் ஜீவிய சரித்திரமென்பது, அவை எப்படித் தோன்றி, காலாந்தரத்தில் மாறி, இறுதியில் அழிகின்றன என்பதை வர்ணிக்கும் வரலாறு. நக்ஷத்திரங்களின்

ஜீவிய சரித்திரம் விசித்திரமானது. சாதாரணமாக, பிராணிகள், இளமையில் சிறியவையாயிருந்து, பின் விருத்தியடைந்து பெரிதாகின்றன. ஆனால், நக்ஷத்திரத்தின் வரலாறு இதற்கு நேர் மாறாகவுள்ளது. அவை, இளவயதில் பெரியவையாயிருந்து, பின் குன்றுகின்றன. அவை, எப்படித் தோன்றுகின்றன என்பதை விஞ்ஞானிகள் அறியார். நக்ஷத்திரங்களில், ஆரம்ப தசையுள்ளவற்றைப்பற்றியும், அவற்றில் அதன் பின் நேர்வதைப்பற்றியுமே அவர்களுக்குத் தெரியும். பெரிதாயுள்ள நக்ஷத்திரங்கள் இளம்பிராயமானவை. அவை 'நெட்டை நக்ஷத்திரங்கள்' (ஜயண்ட்ஸ்) எனப்படுகின்றன. அவை இலேசான வாயுக்களால் மட்டுமே நிரம்பியுள்ளன. 'பீடல்க்யூஸ்' என்பது நெட்டை நக்ஷத்திரங்களிலொன்று. அது நமது சூரியனை விட மூன்று கோடி மடங்கு பெரிது. அதிலுள்ள வாயுக்கள், நம்முலகைச் சுற்றியுள்ள காற்றைவிட இருநூறு மடங்கு இலேசானது. அது சிவப்பு ஒளியுடன் பிரகாசிக்கின்றது. அதனுடைய வெளிப்புற வெப்பநிலை (டெம்பரேசர்), வேறு பல நக்ஷத்திரங்களிலுள்ளதைவிடக் குறைவாகவேயுள்ளது. சுமாராக, 2500°C, அதன் வெப்பநிலை (டெம்பரேசர்). ஒரு நக்ஷத்திரத்தின் வயது அதிகரிக்க, அதிகரிக்க, அதிலுள்ள பரவலான வாயுக்களும் இறுகுகின்றன. இதனால் நக்ஷத்திரமும் அளவில் குன்றுகின்றது; அதிகச் சூடாயும் ஆகின்றது. அதன் நிறமும் மாறுகின்றது. அது வெண்ணிறமாய் அல்லது சற்று நீலங்கலந்த வெண்ணிறமாய் காணப்படுகின்றது. இந்நிலைமையிலுள்ள நக்ஷத்திரங்களில் 'ரைகல்' என்பது ஒன்று. அது மிகவும் பிரகாசமான நக்ஷத்திரம். அது நமது சூரியனைவிட பதின்மூன்றாயிரம் மடங்கு அதிகமான காந்தியுடன் உள்ளது. அதன் வெளிப்புற வெப்பநிலை(டெம்பரேசர்),30,000°C. வரை எழுகின்றது. இம்மாதிரியாகக் கடுஞ்சூட்டுடனுள்ள நக்ஷத்திரங்கள், 'மரண நக்ஷத்திரங்கள்' (டெத் ஸ்டார்ஸ்) எனப்படுகின்றன. ஏனென்றால், அவை வீசும் கொடுங்கதிர்கள் எவ்வுயிரையும் அழிக்கும் தன்மையானவை. ஆனால் அவற்றின் தீங்கிழைக்கும் பகுதிகள் நம் முலகை எட்டுவதில்லை. நம்முலகைச் சுற்றியுள்ள பவனத்திற்கு (அட்மாஸ்பியருக்கு) மேலுள்ள ஓஜோன் என்ற வாயுவினாலான படலம் அக்கதிர்களின் தீமை நம்முலகை யடையாது தடுத்துவிடுகின்றது. பல்கோடி ஆண்டுகளுக்குப் பின், நக்ஷத்திரம் தன் வாழ்க்கையின் உச்சநிலையை யெய்துகின்றது. அதன் பின், அதன் க்ஷீணதசை ஆரம்பமாகின்றது. அது மேலும் சிறிதாகின்றது. அதன் சூடும் குறைகின்றது; பிரகாசமும் மங்குகின்றது. மகிமையையிழந்து, வயோதிகம் ஆரம்பமான நக்ஷத்திரமாகின்றது. நமது சூரியன் இத்தசையில் தான் உள்ளது. மேலும், பல்கோடி ஆண்டுகளுக்குப் பின், அது இன்னும் குறுகுகின்றது. அதிலுள்ள பதார்த்தமும் மிகவும் கெட்டிப்படுகின்றது. சூடும் தணிகின்றது. மங்கலான மினுமினுப்பான சிவப்பு ஒளியே அதனின்று வெளிப்படுகின்றது. இந்நிலைமையிலுள்ள நக்ஷத்திரம் 'குட்டை நக்ஷத்திரம்' (ட்வார்ப் ஸ்டார்) எனப்படுகின்றது. மேலும் பல்கோடி ஆண்டுகளுக்குப் பின், அது, சோர்ந்து, ஒளியிழந்து, குளிர்ந்து, நசிக்கின்றது.

இவ்வுலகிலுள்ள இரு வஸ்துக்களிடை கவர்ச்சி (அட்ராக்ஷன்) உள்ளதென்றும், அக்கவர்ச்சியின் வலிமை, (போர்ஸ்) அவ்வஸ்துக்களின் எடைகள் (மாஸஸ்) அவற்றினிடையுள்ள தூரம், என்பவற்றைப் பொருத்திருக்கும் என விஞ்ஞானிகள் அறிவார்கள். எடைகள், தூரம், கவர்ச்சிவலிமை என்ற மூன்றினிடையுமுள்ள சம்பந்தத்தைப் பற்றியதான திட்டமான விதி முறையே, ந்யூடனின் கவர்ச்சி - வலிமை - விதி (ந்யூடன்ஸ் 'லா-ஆப் க்ராவிடேஷன்) என்பது. ந்யூடனின் விதிமுறையை, ஆதாரமாய்க் கொண்டு, பல நக்ஷத்திரங்களின் எடைகள் கணக்கிடப்பட்டன. அவற்றின் குறுக்களவுகளும் கண்டுபிடிக்கப்பட்டன என்பதைப்

பற்றி முன்பே கூறியுள்ளோம். குறுக்களவினின்று, நக்ஷத்திரங்களின் பருமனை (வால்யூமை)க் கணக்கிடலாம். எடையும், பருமனும் அறிந்தபின், எடையைப் பருமனால் வகுத்து, அடர்த்தி (டென்ஸிடி)யைக் கணக்கிடலாம். நக்ஷத்திரங்களினுள்ள பதார்த்தங்கள் அதிகமான அடர்த்தியுள்ளனவா அன்றிக் குறைவான அடர்த்தியுள்ளனவா என்பதைப்பற்றி அறியலாம். இம்முறையாலேயே, நாம் முன்னேயே கூறியுள்ளபடி, பீடல்க்யூஸ் போன்ற நக்ஷத்திரங்களினுள் மிகவும் லேசான வாயுக்களேயுள்ளனவென கண்டு பிடிக்கப்பட்டது. மரண நக்ஷத்திரங்களிலொன்றான 'ஸிரியஸ்' என்பதனுள், பொன்னைவிட நானூறு மடங்கு அதிகப்பட்ட அடர்த்தியான (டென்ஸான்) பதார்த்தமுள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

நக்ஷத்திரங்கள் நிலையாயிருப்பதில்லை. சில நம்முலகை நோக்கியுள்ள திசையிலும், சில நம்முலகினின்று வெளி நோக்கும் திசையிலும் பல்வேறு வேகங்களுடன் செல்கின்றன. இவ்வாறுள்ளதைக் கண்டுபிடிக்கவே, ஸ்பெக்ட்ராமீடர் மிகவும் உபயோகப்பட்டது. இதைப்பற்றிப் பின்னர் சொல்லலாம்.

நக்ஷத்திரங்கள் எல்லாம் தனித்தனியாயிருப்பினும், வானில், சில பகுதிகளில் பல நக்ஷத்திரங்கள் திரளாய் இருப்பதையும், சில பகுதிகளில் நக்ஷத்திரங்கள் ஒன்றினொன்று தூரமாய் இருப்பதையும் காண்கிறோம். இவையேயன்றி, ஜோடி ஜோடியாகவேயுள்ள நக்ஷத்திரங்கள் சிலவும் உள்ளன. இவை இரட்டை நக்ஷத்திரங்கள் (பைனேரி ஸ்டார்ஸ்) எனப்படுகின்றன. இவை ஒன்றையொன்று சுற்றி வந்து கொண்டேயுள்ளன. அவற்றிடையுள்ள தூரம் (நக்ஷத்திரங்களைப்பற்றிய மற்ற தூரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது) மிகக் குறை. இம்மாதிரியான இரட்டையர்கள் வகையைச் சேர்ந்ததே, ஸீரியஸ் என்ற நக்ஷத்திரமும் அதன் பக்கத்திலுள்ள மற்றோர் நக்ஷத்திரமும்.

நமது சூரிய மண்டலமும், இன்னும் பல நக்ஷத்திர மண்டலங்களும், வானிலுள்ள ஒரு பெரும் பாதையைப்போன்ற பிரதேசத்தில் உள்ளனவென விஞ்ஞானிகள் கண்டார்கள். இப்பிரதேசம் 'பால் வண்ண மண்டல மார்க்கம்' (மில்கி வே) எனப்படுகின்றது. இதில் கிட்டத்தட்ட நடுவில் நமது சூரிய மண்டலம் உள்ளது. இப்பிரதேசம் ஒரு லக்ஷம் ஒளியாண்டுகள் அகலமானது.

நமது 'பால்வண்ண மண்டலமார்க்கம்' மட்டுமேயன்றி, இன்னும், அவ்வாறான பலவுள்ளன. அவை வெகு தூரத்திற்கு அப்பால் இருப்பதால், நமது பால் மார்க்கத்தை (மில்கி வேயை)ப் போன்ற ஒளியுடன் சாதாரணமாய்க் காணப்படுவதில்லை. அவை 'பனியிழைகள்' (நெப்யுலா) எனப்படுகின்றன. இவற்றில், நக்ஷத்திரங்கள் மட்டுமேயன்றி, ஒளியுடனுள்ள உருமாறிக் கொண்டிருக்கும் வாயுத் திரள்களும், நொய்போல் அங்கு மிங்கும் பறந்து கொண்டிருக்கும் தூள்களும் இன்னும் பலவும் உள்ளன. திடீரென எங்கிருந்தோ தோன்றி, பளீரென மிக்க ஒளியுடன் பிரகாசித்துவிட்டு சடுதியில் மறையும் ஒளிப் பொட்டுகள் அவற்றில் உள்ளன. இவை 'நோவா' எனப்படுகின்றன. 'நோவா' போன்ற சில நக்ஷத்திரங்களும் உள்ளன. அவை சாதாரணமாய் மங்கலாயிருக்கும். ஆனால், திடீரென அவற்றின் ஒளி அதிகரிக்க ஆரம்பிக்கும். ஒளி அதிகரித்துக்கொண்டே போய், அதிக பிரகாசமான உச்சமாகும். அதன் பின் கொஞ்சம் கொஞ்சமாய் ஒளி குன்றி, கடைசியில் நக்ஷத்திரம் முன் போலவே மங்கிய ஒளியுடனிருக்கும். இவை 'மாறும் ஸிமிட்' எனப்படுகின்றன. இம்மாதிரியான நக்ஷத்திரங்களும் நெப்புலாவில் உள்ளன.

இனி, ஸ்பெக்ட்ராமீடர் நக்ஷத்திரங்களைப்பற்றின ஆராய்ச்சியில் பயன்பட்ட விதத்தைப்பற்றிக் கொஞ்சம் சொல்லலாம். ஒரு நக்ஷத்திரத்தின் நிறமாலை (ஸ்பெக்ட்ரம்) சாயப் பெறுவதால் அதிலுள்ளவற்றைப் பற்றி அநேக விஷயங்களை அறியலாம். மேலும்

அதன் நிறமாலை (ஸ்பெக்ட்ராம்)க் கோடுகளின் பிரகாசத்தை அளவிட்டு, நக்ஷத்திரம் நம்முலகினின்று எவ்வளவு தூரத்திலுள்ளது எனக் கணக்கிடும் முறையை விஞ்ஞானிகள் கண்டு பிடித்தார்கள். இவ்வழியால் கண்டுபிடித்த தூரத்தையும், நாம் முன்னே விவரித்த வழியால் கண்டுபிடித்த தூரத்தையும் ஒப்பிட்டு, சரிகட்ட முடியுமாவெனப் பார்க்கலாம். அப்படிச் செய்தபோது, இரு வழிகளால் கணக்கிடப்பட்ட தூரங்களும் கிட்டத்தட்ட ஒன்றுயிருந்தன. அதன்பின், பிரகாசத்தைக் கொண்டு தூரம் கணக்கிடும் வழி, மற்றதைவிட எளிதாயிருந்ததால், அம்முறையே அதிகமாய் அநுசரிக்கப்பட்டது. ஸ்பெக்ராமீடர், நக்ஷத்திர ஆராய்ச்சிகளில், முக்கியமாய் மற்றோர் வழியிலும் உபயோகிக்கப்பட்டது. அதைக்கொண்டு, நக்ஷத்திரங்களின் வேகத்தைக் கணக்கிட முடிந்தது. நக்ஷத்திரங்கள் நிலையாயில்லாது நம்முலகை நோக்கியும், எதிர்முகமாகவும், பல்வேறான வேகங்களுடன் செல்கின்றன என முன்பே சொல்லியுள்ளேன். இவ்வேகங்களை எப்படி ஸ்பெக்ட்ராமீடரால் கணக்கிடலாம் என்பதைப்பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன். இப்படிக் கணக்கிடுவதற்கு, 'டாப்ளர் விளைவு' (எபக்ட்) என்பது ஆதாரமாயுள்ளது. 'டாப்ளர் விளைவு' (எபக்ட்) என்பது, அலைபரப்புமொன்று நிலையாயுள்ளபோதும், இடம் மாறிக்கொண்டுள்ளபோதும், வெளிப்படுத்தும் அலைகளிடையுள்ள வித்தியாசத்தைப் பற்றி எடுத்துரைக்கும் விவரம். அவ்வலைகளின் நீளங்கள் வித்தியாசப்பட்டுத் தோன்றும். அவ்வித்தியாசத்தை அளவிடுவதால், அலைபரப்புமொன்று, அலைபெறுமொன்றை நோக்கி வருகின்றதா, அன்றி எதிர்முகமாய்ச் செல்கின்றதா வென்பதையும், அவ்வாறு செய்யும்போது அதன் வேகம் எவ்வளவு இருக்கும் என்பதையும் கணக்கிடலாம். ஸ்பெக்ட்ராமீடர் கொண்டு, ஒரு நக்ஷத்திரத்தை வெவ்வேறு தருணங்களில் பரிசோதித்தபோது, அவ்வொரே நக்ஷத்திரத்தினின்று பெறப்பட்ட நிறமாலை (ஸ்பெக்ட்ராம்)க் கோடுகள், ஒரேவகையாய்த் தென்படவில்லை. அக்கோடுகளுக்கான அலைநீளங்கள் வித்தியாசப்பட்டன. வித்தியாசங்களை அளவிட்டு, நக்ஷத்திரத்தின் சலனத்தை (மூவ்மெண்டை)ப்பற்றி அறியவும், அதன் வேகத்தைக் கணக்கிடவும் முடிந்தது. இவ்விதமாகக் கணக்கிட்டு, நமது உலகினின்று பத்து கோடி ஒளியாண்டுகளுக் கப்பாலுள்ள 'சிம்மம்' (Leo) எனும் நக்ஷத்திரம், செகண்டிற்கு 12,000 மைல்கள் வேகத்துடனுள்ள சலனத்தைப் பெற்றுள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

நக்ஷத்திரங்களைப்பற்றி அறியப்படாத விஷயங்கள் பலவுள்ளன. அவற்றின் வயதைப்பற்றி நிச்சயமாய் ஒன்றும் அறியமுடியாதுள்ளது. அநேக நக்ஷத்திரங்களின் தூரங்களும், குறுக்களவுகளும் எடைகளும் இன்னும் அளவிடப்படவில்லை. நக்ஷத்திரங்களினுள்ளுள்ள பதார்த்தங்களைப்பற்றி, அநேகமாய் ஒன்றும் அறியோம். இவ்வாறு நக்ஷத்திரங்களைப்பற்றி அறிந்தது மிகமிகக் கொஞ்சமே, அறியப்படாதது அதிகம் என்பது விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆகவே, அவர்கள் மேலும் மேலும் ஆராய்ச்சிகள் செய்துகொண்டிருக்கின்றனர். 'பான்கரே' என்ற விஞ்ஞான அறிஞர் பின்வருமாறு சொன்னர். "விஞ்ஞான ஆராய்ச்சிக்கு முற்றுப்புள்ளி என்பதே இல்லை. விஞ்ஞான ஆராய்ச்சிக்குக் கேள்விக் குறியே உண்டு". இதை விஞ்ஞானிகள் என்றும் மறவார்.

# ஸஹஸ்ராரா

அல்லது

# யோகாலய மித்ரபீடம்

[ தி. எஸ். ராமானுஜம், எம்.ஏ . எல்.எல்.பி. லண்டன் ]

## அந்தணன் தோட்டம்

ஆழ்வாராகிய நாயகியை பகவான் பரிதவிக்கும்படி விட்டுக் கவனியாதிருக்கிறார். பெண் பிள்ளையோ பூமியைச் சுற்றியுள்ள கடலில் உண்டான அருமையான அமுதம் போன்ற இனியள். (பார் கொழு பவ்வத்(து) ஆரமு(து) அனைய பாவை....) அவளை "அந்தணன் தோட்டம் ஆக நின்மனத்து வைத்தாயே" என்று திருமங்கை மன்னன் கதறுகிறார். பிராம்மணனது பொழுது முடிந்ததும் ஜபதபங்கள் முதலிய நித்தியக் கடமைகளிலே கழிவதால், அவனுடைய தோட்டம் கவனிப்பில்லாது பாழடையும். இத்துடன் மற்றோர் உண்மையையும் ஆழ்வார் கூறுகிறார். "தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே ஒக்க அருள் செய்வர்...." (தம்மையே எப்போதும் வணக்கத்தோடு தொழுபவர்களுக்கு, (அவர்கள்) தம்மைப்போலே ஆகும்படி பகவான் கிருபை செய்தருளுவர்.) பகவானைப் போலாவது (பிரம்ம துல்யம்) என்பதே பக்தியின் முக்தியாக ஆழ்வார் கருதுகிறார். பகவானைப்போல் ஆவதென்றால் என்ன? ஸ்ரீ சைதன்ய சித்தாந்தம் பின்வருமாறு கிருஷ்ணபகவானை வர்ணிக்கிறது :—"அழியாத பிரம்மமானவர். ஆதியந்தமற்றவர். மற்றைய தெய்வங்களைத் தமது அம்சமாக உடையவர். அவரே உலகிற்குக் காரணமாவார். எல்லாப் பொருள்களும் தம்மிடத்தும் தாம் எல்லாப் பொருள்கட்குள்ளும் இருக்கப்பெற்றவர். ஆயினும் அவர் மனித உருவமுடையவர். அவ்வடிவம் எல்லையுள்ளதாகத் தோன்றினும் உண்மையில் எல்லையற்றது. ஸர்வ வியாபகமுள்ளது. அது பூரணமானது அழியாத அப்ராகிருதமானது. அவர் ஆனந்தவடிவினர். அவரது வடிவமும் ஆனந்தமயம். அவர் அன்பேயாவார். அவரது உடலும் மொழியும் நடையும் அவரைப்பற்றிய யாவும் இனிமையுள்ளனவாகும். அவர் ஆன்மாக்களையெல்லாம் தம்மிடம் கவரும் இயல்புடையவர். இதனால் கிருஷ்ணனெனப்பெயர்பெற்றார். பிருந்தாவனமே அவரது உறைவிடம்." இத்தகைய திவ்ய சக்தியும் அருளும் வாய்ந்த இறைவன் அர்ஜுனனைப்பார்த்து என்ன சொன்னார் : "தவத்தினும் பெரியது. பெரிது ஞானத்தினும், கருமந்தனினும் காணப்பெரிது." ஆதலால் யோகியாகுவை ! (தஸ்மாத் யோகீ பவார்ஜுன) இந்தத் திருவாக்கை அடியார்கள் எங்ஙனம் உட்கொண்டிருக்கின்றனர். மூக்கைப் பிடித்து மூலையில் உட்காருதல்; காட்டுக்கோடி விலங்குபோல் தனித்தல்; இள மனைவியையும் கதியற்ற குழந்தையையும் தவிக்க விட்டுத் தப்பியோடி இரவில் பதுங்குதல்; பெண் தெய்வங்களை மாயை, நம்பொணாது, என்று இகழுதல்; உலகைப் பொய்யென்றுரைத்தல்; காண்பது கற்பனைக் கனவென்று தருக்கிக் களைத்தல்; பட்டினியால் எலும்புக் கூடாகுதல்; தன்னலமோட்சமின்பமெய்தல்; இவ்விதப் பேதமை, அமங்கலம், கரவு, யோகவாழ்வாகவும் யோக வினையாகவும் பரிமளித்து நாளடைவில் பிருந்தாவனமெனப்படும் கிருஷ்ணன் தோட்டமாகிய மண்ணுலகமும், அவனுடன் கூடிப் பேரின்பமடைய விரும்பும் கோபியர் கூட்டமாகிய மனித சமுதாயமும் 'அந்தணன் தோட்டமாக' ஆகிவிட்டதன்றோ! இதற்குக் காரணம் யாது? மூக்கை

வருத்தும் மூடச்செய்கையேயாகும் (அக்ஞானம் க்ராணபீடனம்).

## ஆத்ம சித்தியும் அகண்ட சித்தியும்

“யோக: கர்மஸு கௌஸலம்” - மனித வாழ்வை சாந்தம், சிவம், சுந்தரம், மங்களமாக்கும் திருப்பணிகளே யோகமென்கிறார் கீதாசாரியர். சாதாரண உலக வாழ்வை யோகவாழ்வாக மாற்றி உயர்த்த வழி கண்ணன் வாக்கில் பதுங்கியிருக்கிறது. “அவனின்றி ஓர் அணுவும் அசையாது.” அவனுடைய இச்சா சக்தியின் விரிவே அனைத்துமாகும். அனைவரும் அவன் அருள் மைந்தரே. கண்ணுலக மெல்லாம் விண்விதான மேவிய ஒரு திருக்கோயில். ஒரு கோயிலில் ஒரு கடவுளன்புடன் பற்பல தொண்டரால் வெவ்வேறு திருப்பணிகள் செய்யப்படுவதுபோல புவிவிண்ணில் ஆத்மசித்தியையும் அகண்ட சித்தியையும் திகழச் செய்யும் பொருட்டு நடந்தேறும் மனிதத்திருப்பணிகளே கீதை சொல்லும் பரிபூரண யோக வினையாகும். ஆனால் இவ்வுண்மை மனிதனுக்கு இன்னும் புலன்படவில்லை போலும். மனிதன் - தேவன், மண் - விண், அகம் - புறம் என்ற பேதபாவங்கள் இதுகாறும் அலைமோதியே நிற்கின்றன. யோகநிறைவு எதுவாயிருக்க முடியும்? தன் மயத்திலும் விஸ்வ மயத்திலும் ஓரே சச்சிதானந்தப் பொருளைக் கண்டுணர்ந்து, அகவாழ்வையும் புறவாழ்வையும் கடவுளுணர்வில் (தெய்வசக்திப் பெருக்கில்) பொருத்தி வாழ்வதேயாகும். ஆத்மசித்தி அகண்ட சித்தியாகவும், ஆத்மஸ்வராஜ்யம் ஆத்மஸாம்ராஜ்யமாகவும், விரிவாக்குதலே பரிபூரண யோகமாகும். இதுவரையிலும் வேதரிஷிகளால் அனுட்டிக்கப்பட்ட யோகங்கள் ஆத்மசித்தியுடன் நின்று விடுகின்றன. நிர்விஷய கைவல்யம், நிரதிசயானந்தம், நிர்குணமுக்தி, என்று சொல்லப்படும் நிலைகளெல்லாம் அவற்றை யடையும் யோகிகளின் சுயநல சித்தியேயன்றி, அவர்களின் தனிப்பொருளே யன்றி, மனித ஜாதியின் முக்தி சித்தியாகாது. எங்கெந்த பாகத்தில் குறையிருக்கிறதோ, குறை தோன்றுகிறதோ, அவற்றிலெல்லாம் நிறையை உண்டாக்குவதும், தோன்றும்படி செய்வதும் யோக வினையாதலால், தற்காலம் குறைபட்டுள்ள அகண்டத்துக்கு ஆத்மாவுக்குள்ள நிறையை அளித்து, மண்ணை விண்ணாக்கி, நரனை நாராயணனாக்கி, எல்லாம் பிரம்மமென்னும் உணர்வை யொட்டி உலகையும் பிரம்மமாகக் கண்டு, அதைக் கானல், கனவு, மாயை என்று வெறுத்தோடாமல், உலக வாழ்வையே பிரம்மசக்தியால் அமைத்து, உலகாதீத வாழ்வைப்போல உலக வாழ்வையும் பரமாத்மாவிற்கு வெல்லவேண்டுமென்பதே பூரண அத்யாத்ம ஞானமாகும். நமது தனி ஜீவனை (ஜீவான்மாவை), அகந்தை வாழ்வை, அகண்ட ஜீவன், அகண்ட தெய்வப் பொருளுடன் ஒன்றுவித்து, தெய்வ இச்சைக்கு நம்மை இணக்கி, அவனருளைப் பெறுதலே, அகங்கார விடுதலே, ஜீவன் முக்தியாகும். திருவண்ணாமலையிலுள்ள ஸ்ரீரமண மஹரிஷி ஜீவன் முக்தியடைந்து விட்டதாகச் சொல்வதுண்டு. ஆனால் ஒரு மனிதன் ஜீவன் முக்தி யடைந்து விட்டானென்றால் மனித ஜாதியே ஜீவன் முக்தியடைந்து விட்டது என்று சொல்லவல்ல அகண்ட ஸ்தானத்தை நிலைநிறுத்தல் அம்மஹரிஷியின் ஆத்ம நிஷ்டையில் காணேம். புதுச்சேரியிலிருக்கும் ஸ்ரீ அரவிந்த யோகாசிரமம் மேற்கண்ட நோக்கத்தை ‘அத்யாத்ம ஸமத்வ பரிபூரண யோகம்’ என்று அழைத்து, பிரக்ஞாபங்க மற்ற தூல அமர வாழ்வை செயலிற்காட்ட முயன்று வருகிறது. பழைய யோகமெதுவும் அந்நோக்கத்தை அநுபவத்தில் கொணர வழி காட்டவில்லை என்று தீர்மானமாய்ச் சொல்லலாம். இருளை ஒளிர்வித்து, துன்பத்தை யின்புறுத்தி, சாவை நித்ய வாழ்வாக்கி, மெலிவை வலியுறுத்த ஆண்டவனுக்குச் சக்தியுண்டு; அந்த லீலைத் திறனை வெளிப்படுத்த இயற்கையன்னை விடா முயற்சிசெய்து வருகிறாள், என்ற உண்மை சற்று யூகித்தால் தெரிய வருகிறது. ஆனால் இப்பெரும் சித்தியை

இறைவன் அருளால் நாம் அடைய முடியுமே ஒழிய, நம் முயற்சியால் அடைய முடியாது.

மேற்கண்ட சித்தியை அடையவல்ல மார்க்கம் எதுவென்று காட்டுவதுடன் தற்சமயம் நடைபெற்று வரும் இருபத்தெட்டாம் கலியுகத்தில் சுமார் 5000 வருஷம் சென்றபின் அம்மார்க்கம் பிரம்மத்தாலேயே உலகிற்கு வெளியாகுமென்றும், அது பிருக்தாஹிததாரக ராஜயோக மென்றழைக்கப்படு மென்றும், அதுவே இயற்கை அன்னையின் வேலையை (Evolution) பூர்த்தி செய்யவல்லதென்றும், வரும் ஸர்வ சித்து வருஷத்துக்குள் அப்பூர்த்தியை மனித சமுதாயம் பார்க்கலாமென்றும், அப்பூர்த்தியே மனிதனின் தூலகோச மடையும் பிரம்ம துல்யம், கைவல்யம் என்ற மெய்யான மோக்ஷபதமென்றும் காக புசுண்டர் கீதம் கூறுகிறது. இந்த யோகம் கும்பகோணத்தில் டபீர் கீழத் தெருவில் இரண்டாம் நம்பர் கிரகத்தில் அமைக்கப் பெற்றிருக்கும் யோகாலய மித்ர சங்கம் (The Yoga School Friendship Society) கையாண்டுவரும் முறை. அச்சங்கத்தின் குருநாதன், மாஸ்டர் ஸி. வி. வி. பிரம்ம சக்தியை எம்மனிதனுக்கும், யாதொரு வித்தியாசமின்றியும் அளித்து, அவனுடைய கர்மாக்களனைத்தையும் ஓர் பிறப்பிலேயே கொஞ்சம் கொஞ்சமாய் அகற்றி, பிரம்மத்தைக் கண்டுபிடிக்கும் யோக்யதையை அடையும்படிசெய்து, பிறகு பிரம்ம துல்யமென்ற பூரண கைவல்ய மோக்ஷபதத்தை அவன் அடைந்து, புவி விண்ணில் சுதந்திர அமர வாழ்வை தூல கோசத்துடன் எக்காலும் ஆண்டு அனுபவிக்கக்கூடும் ரகசிய முறையை உணர்ந்து, ஸஹஸ்ராரா என்பதை யொட்டி ஓர் ஆயிரம் நண்பர்களை யோகத்தில் மாட்டி, மாற்றி வருகிறார் என்ற உண்மையையும் காக புசுண்டர் கீதம் சுட்டிக் காட்டுகிறது.

## தாமரை ரகசியம்

சரஸ்வதியை மனைவியாகப் பெற்றதால் பிரம்மா (லக்ஷ்மியை மணந்த விஷ்ணுபோல்) உறங்காமலும், (பார்வதியை மணந்த சிவன்போல்) பைத்தியம் பிடியாமலும் உலகத்தைப் படைக்கிறான். இப்பெருமை வாய்ந்த சகல கலாவல்லியைப் பார்த்து குமரகுருபரர் "நீ வெண்டாமரையிலே வசிப்பவளாயினும், என் மனமாகிய வெண்டாமரையிலும் வசிக்கலாகாதோ" என்று சாதுர்யமாகக் கூறுகிறார். இவ்விதம் படைக்கப்பட்ட உலகமே ஓர் ஆலயம்; அதில் ஆண்டவன் எத்தகைய பதார்த்தத்துக்கு உள்ளும் புறமும் வீற்றிருக்கிறான். அவனுடன் இவ்வுலகிலேயே தூல உடலில் இரண்டறக் கலத்தலே யோகாலய வாழ்வாகும். இவ்விதம் கலக்க 'அவன்' தோற்றிய மக்கள் நமது சகோதரர்கள். அவர்களிடம் பங்காளிச் சண்டை போடாது, ஆத்ம நண்பனிடம் எவ்விதம் உள்ளன்புடன் உறவு கொண்டாடுகிறோமோ, அவ்விதம் மித்ர பாவத்தைப் பெருக்கினால் சாவு அழிந்து மண் விண்ணாகும். இக்கொள்கையை அஸ்திவாரமாகக் கொண்டதுதான் யோகாலய மித்திர சங்கம். இதுவே அதன் பீடமாகும். புறத்தில் மாஸ்டர் ஸி.வி.வி. யால் அப்பீடம் குடந்தை க்ஷேத்திரத்தில் அமைக்கப்பட்டது. அதன் பயனை ஆயிரம் மனிதர்கள் யோக சாதகத்தால் தேறி வருகிறார்கள். இதற்குச் சரி சமானமாக உள்ளே விளங்கும் ஆயிரம் இதழ்பெற்ற ஸஹஸ்ராரா என்று சொல்லப்படும் தாமரை மலர் ஒன்றுண்டு.

இயற்கை அன்னைக்கும் அவளைக் குறிக்கும் தெய்வங்களுக்கும் தாமரை மலர் மிகமிக உவப்பானதென்று எல்லா கிரந்தங்களும் கூறுகின்றன. அதுவே இயற்கையின் தெய்வ சிருஷ்டி முறையையும், ஜட சிருஷ்டி முறையையும் குறிக்கிறது. ஹிந்துக்கள் விஷ்ணுவின் நாபிக் கமலத்தில் பிரம்மா வீற்றிருப்பதாகவும், சரஸ்வதியின் பீடம் வெண்டாமரையென்றும், அதுவே அக்னி, அப்பு இரண்டின் கலப்பைக் குறித்து ரூப உற்பத்தியைக் காட்டுவதாகவும், கருதுகிறார்

கள். இவ்விதம் தாமரை புகழ் பெற்ற தற்கு ஓர் இயற்கைக் காரணம் உள. அதன் வித்துக்கள் முளைப்பதற்கு முன்ன மேயே முழுச் செடியின் ரூபத்தைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்கும். இலைகள் வித்தினுள்ளேயே வளர்ந்திருக் கும். மற்ற வித்துகள் முளைத்த பிறகு தான் செடியின் ரூபத்தை விரித்துண் டாக்கும். பிரம்மாவும் பிரம்மாண்டா வும் உற்பத்தியாவதற்கு ஆதி பூமியாய் விளங்கியதை ஜலமாகவும், அதற்குக் கற்பம் தரிக்கவேண்டும் வெப்பத்தைக் கொடுத்ததை அக்னியாகவும், நமது முன்னோர்கள் பாவித்தார்கள். இத்த கைய அக்னி, ஜல சந்தியை சூரிய வெப்ப முண்டு ஜலத்தில் வாழும் தாமரை விளக் கிக் காட்டுகிறது.

பிரம்மா உற்பத்தி பண்ணியது எதுவு மில்லை. முதலாக நின்றதிலிருந்து அவன் பிரிந்தான். அவனுள் அடங்கிய சக்திகள் வெளி வீசவே, மற்றவை தோன்றின. இது எதுபோல? தாமரை வித்திலுள்ள தூய்மை இதழ்கள் வெளிவந்து செடி யாய் பரிமளிப்பதுபோல. ஆதலால் பிரம்மாவே பிரம்மாண்ட ரூபங்களா கிறான். அவற்றினின்று வெளிப்பட்டு நிற்கிறானில்லை. அவற்றிலேயே பலவாறு கலந்து விடுகிறான். எதிலிருந்து அவன் பிரிந்தானோ அதுவே உலகாதீதம். அதற்கும் உலகத்திற்கும் தொடர்பற் றது. நிரை குறையாயிற்று. மறுபடியும் ரூபங்கள் அரூப நிலையிலுள்ள நிரையை அடைய வேண்டுமென்றால், (விட்டுப் போன) தொடர்பு ஏற்படவேண்டும். புறத்திலுள்ள பூமிக்கும் அகத்திலுள்ள ஆதி ஜோதிக்கும் போக்கு வரவு பாதை ஏற்படவேண்டும். இப்பாதைபோடுவதே பூரண யோகமாகும். கும்பகோணமென் றும் குடந்தையென்றும் ஓரே ஊரை அழைப்பது வழக்கம். ஆனால் அச்சப் தங்கள் இருபொருளைக் குறிக்கின்றன. கும்பகோணமும் குடந்தை நகரும் தொடர் பற்றிருப்பதே தற்போதைய சிருஷ்டிமுறை. அவ்விரண்டிற்கும் மனித தூலத்திலும், அகண்ட பிரபஞ்சத்தி லும் மார்க்கமுண்டாக்குவதே நமது நோக்கம். அத்தகைய மார்க்கம் உற்பத்தி நடக்கும்போதெல்லாம் சூக்ஷ்மமாய்த் தோன்றி மறைகிறது. அதைத் தூலப் பிரக்ஞையுடன் உணர்ந் தால், அது தூலத்திலும் நிலைபெற ஆரம்பிக்கும். பிறகு தூலமும் அழி யாது நிற்கும். ஆதி ஜோதியும் ஆதி சக்தியும், தொடர்புற்று, ஒன்றி மனித உலகிலும் அமர பதத்தை அளிக்கும். இதுவே புதுமுறை சிருஷ்டி.

ஒரு மனிதன் தன்னைத் தானறிய வேண்டுமென்று ஆசைப்படுவதாக வைத் துக் கொள்வோம். அவன் ஆசை பூர்த்தி யாவ தெவ்வாறு? அவன் தூல உடலை ஏழு மாடிகள் அமைக்கப்பட்ட கிரகமாக பாவித்தால் உண்மை விளங்கும். அவன் தூல உடலுக்கு வெளியே உள்ள அவன் சக்தியை உற்பத்திக் கட்டமென்றும் அதுவே கீழ்த்தரையென்றும் கொள்ள வேண்டும். இப்பாவனையால் ஏழு ஆதா ரங்கள் கடந்து எட்டாவதறையில் (ஏழா வது மாடியில்) ஸஹஸ்ராரா என்னும் தாமரையில் வீற்றிருக்கும் பரமனை எட் டிப் பிடிக்கலாம்! இதுவரையில் ஏற் பட்ட யோக சாதனங்களில் ஒரு மனித னுடலில் ஆறு ஆதாரங்களைக் குறித்து ஏழாவதாக ஸஹஸ்ராரா கருதப்பட்டது. இது தவறு. இதனாலே ஆதி சங்கல்ப மான தூல அமரத்வம் மனிதனுக்குப் புலன்படவில்லை என்பது நமது துணிபு. மனிதனுக்கு வெளியிலுள்ள ஆதாரமே முதலானது. இதைத் தார மூலமென்று அழைக்கலாம். பிறகு அவனுடலுள்ளே வீணைத் தண்டென்று சொல்லப்படும் முதுகெலும்புக் கடியேயுள்ள குண்ட லினி ஸ்தானமாகிய மூலாதாரம் இரண் டாம் ஆதாரமாகக் கருதப்படும். பிறகு படிப்படியாக முதுகெலும்புக்குள் ஏறி னால், ஸ்வாதிஷ்டானம் (3ஆம் ஆதாரம்), மணிபூரகம் (4ஆம் ஆதாரம்), அனாகதம் (5ஆம் ஆதாரம்), ஆக்ஞா (6ஆம் ஆதா ரம்), விசுத்தி (7ஆம் ஆதாரம்) என்ற படிகள் கிடைக்கும். பிறகு மூளைக்குள் எட்டாம்படியாய்நிற்கும் ஸஹஸ்ராராவே சிவனின் கோயில். உற்பத்தி அவசரத் தில், மேலிருந்து அளவற்ற பிராண

சமுத்திரத்திலிருந்து (from the Ocean of Prana) பிரிந்த ஒரு அணு வீணைத்தண்டின் (spinal column) வழி கீழ் இறங்கி, மூலாதார இடத்தில் மூன்று அனுபவப்போர்வைகளை(பிரம்மா விஷ்ணு, மஹேச்வராஎன்ற திருமூர்த்தி வேஷத்தை) அணிந்து குண்டலினி என்று சொல்லப்படும் ஆண்மையடங்கிய வித்தாகி உற்பத்தி பூமியில் விரைக்கப் படுகிறது. கர்ப்பக்கிரஹமே சக்தியின் ஆலயமென்று சொல்லலாம். இவ்விதம் உற்பத்தி அவசர நிலையில் சிவன் கோயி லுக்கும் சக்தி கோயிலுக்குமுள்ள வழி முற்றிலும் ஒன்றுமில்லாத சூன்ய வெளி யாகிறது (குண்டலினி உற்பத்தியாகிச் சென்றபின்). பிறகு சக்தியானது தார மூலத்தில் கிளம்பி, மூலாதாரம் வந்து, ஸஹஸ்ராராவுக்குச் சென்று தன் நாத னுடன் இரண்டறக் கலக்கிறது. இத னால் சிவசக்தி போகமென்பது ஒரு மனிதனின் தூல உடலுக்குள்ளேயே சித்திக்கிறது. யோகமும் பரிபூரண லக்ஷணம் பெற்று, சத்திநாத நெருப்பை (Radio activity)க் கிளப்பித் தூல முழுவதும் அதைப் பரப்பி, தூலத்தை அழியா வஸ்துவாக்குகிறது. ஜீவனும் தூலத்தை எந்நாளும் விட்டுப் பிரியா இயல்பை அடைகிறது. குண்டலினி உற்பத்தியாகி உடலுக்கு வெளியே சென்ற பின்தான் சக்தி அவ்வுடலுக்குள் பாய சமயமும் சந்தர்ப்பமும் ஏற்படுகிற படியால், இயற்கைக்குத் துளிக்கூட மாறுபடாமல் தூலப் பிரக்ஜையுடன் மனிதன் முயன்று நிற்பதே யோகத்தின் முடிவான முடிவைக் காட்டும். காக புசுண்டர் கூறுவதும் இதுவே :—

" கமலத்துள் நின்றவரின்சேவை...சாசுவதமே நிலைநிறுத்த.........நற்றவத்தின் செய்கை யால் பிணியினேடு நமனற்றுப் போவது."

" தாமெனவும் குருநாதன் நம்மைக் காக்கத்
தவசிகளா யிருந்தவர்க்குப் பிரம்மந் தானே
ஓமெனவும் சகத்திரத்தி விருத்தி வைத்து
உறுதியாம் சீவனே யளிப்ப தண்டு "

" குண்டலினியின் மூலமே சகத்திரம்பற்ற... சுதந்திரத்தைச் சாற்றுவார் "

வெளியுதவி யில்லாமல் எதையும் சிருஷ்டிக்கவல்ல சித்தி இந்த யோகத்தால் கிடைக்கிறது. மனித சமுதாயத்துக்கே பூர்ண சுதந்திரம் (Complete independence) கிடைப்பதெவ்வாறு என்று இனி வாதிக்கவும் வேண்டுமா ?

## ஸஹஸ்ராராவின் அமைப்பு

ஸஹஸ்ராரா என்ற சிரசிலுள்ள அகத் தாமரை கைலாயம், சிவனிருக்குமிடம். இறுதியில் தார மூலத்திலுள்ள சக்தி சூன்ய வெளி ஏற்பட்ட தருணத்தில் உட்புகுந்து மேற்சென்று தன் நாத னுடன் அமரக்கூடிய பீடமாகையால் இதை மித்ர பீடமென்றும் சொல்லலாம். 'மித்ரா' என்பது ஒரு புருஷனுக்கு இரண்டாக நிற்பதே யாகும். மண்ணை யும் உடலையும் யோகாலயமாகப்பாவித்து மண் விண்ணுவதும், உடல் சாஸ்வத மாவதும் பூரண யோகத்தின் பூர்த்தி யாகையால் இதை யோகாலயமித்ர பீட மென்றும் கருதலாம். இதில் தொள்ளா யிரத்து அறுபத்தொரு கிரணங்கள் தான் சாதாரணமாய் உள்ளன. ஒவ் வொரு கிரணத்திலும் அநேக நிருத்துத லும், யோசித்தலும், கீழ்ப்பாகத்தில் நடத்தவேண்டிய பல காரியங்களுக்குப் பயன்படுதலும், அளவற்ற அற்புத உப யோகங்கள் உள. மேற்கண்ட கிரணங் களுக்குட்பட்ட பாகத்தில் தாமரை புஷ்பத்துள் இருக்கும் மஞ்சள் நிறமான வில்லைப் போன்ற ஒன்று இருக்கிறது. அதற்குள்ளிருந்துதான் மஞ்சள்நிறமான நீர் வருகிறது. அந்த நீருக்குத் தடை யாக ஓர் உறுதியான சுற்றும் தாங்கிக் கொள்ளுகிற மாதிரி யாகக் கிரணங் களுக்கு ஆதாரமாயுள்ள ஒரு நரம்பும் காணப்படுகிறது. நடுவிலுள்ள சுற்று (bulb)க்குள் ஒரு துளி மஞ்சள் நீர் தங்கியிருக்கிறது. அதற்குள் ஸித்தம் (அணுமா, மகிமா, விணுமா—பரமஅணு ஜனித்த மகிமையைக் குறிக்கிறது), காண்டியம், கௌண்டயம் என்ற மூன்று ஸித்திகள் உள. ஸ்ஹஸ்ராஹாராவின் கீழ்ப்பாகத்தில் சம்பந்தப்பட் டிருக்கிற ஸுஷும்ணு (சுழிமுனை என்ற நரம்பு)

விலிருந்து ஓஜஸ் என்கிற நீர் அவ்வி டம் தட்டுக்குள் பாகத்தில் வந்து சுத்தப் பட்டு, சிவந்த நிறத்தை அடிப்பாகத்தின் வேலையால் அதிக தீவிரம் (force) கொடுத்துப் பச்சை நிறமாக்கப் படுகிறது. அதில் மிகவும் சிலாக்ய மானதே எடுபட்டுப் பதமாக வைத் துக் கொள்ளப் படுகிறது. சிலாக்ய மில்லாத பாகம் நரம்புக்குக் கொடு படுகிறது. அது திருடமான யோக சாதகம் செய்துவந்தால் மேற்கண்ட நீர் துளிக்கு நைப்பு உண்டாகி, அதற்குத் தீக்ஷண்யமுண்டாகி, ஒரு புரை ஏற்படுத் திக் கொண்டு, மேல்வரும் நைப்பைக் கொண்டு இரண்டங்குலம் வரையில் வளரும். பிறகு மேல் வருகிற நைப்பை மேல் மேல் ஆறு புரையாய்ச் செய்து கொண்டு ஏழாம் புரையை உண்டாக்கப் பிரயத்தனிக்கிறது. அக்காலம் அதிக சிலாக்யம் பெற்ற யோக சாதகத்தால் (பூரண மித்ர யோகாப்பியாசத்தால்) அவ்வேலை நிறுத்தப்பட்டு பல்புக்குள் ஒரு வேகம் கொடுபடுகிறது. அது ஒரு காந்தியாக இருக்கும். மேல் வருகிற நைப்பை யெல்லாம் நிறுத்திக்கொண்டு ஒரு அணு மாத்திரம் பல்புக்குள் சேக ரம் செய்ய அநேக பிரயத்தனங்கள் செய்யப்படும். அப்படி சேகரித்ததின் பெயரே "ஸித்தி" என்பது.

காண்டியம் என்ற ஒரு வேலை ஸித்திக் குள் அடங்கி யிருக்கிறது. யோக சாத கத்தால் இன்னும் எவ்வளவு விஷயங்க ளிருக்கிறதென்று பார்க்கத் தொடங்கி ளுல் அநேக சித்திகள் (Powers), அநேக சத்துனுடைய குணங்கள், மன திற்குக் காட்டப்படும். இவ்விதம் யோஜித்து மேல் பாகத்தின் வகைகளை அறிய முயலவே, கீழ்ப்பாகத்தைக் கட் டிக் காக்கும் குண்டலினி மேலே இவ் விடத்துக்கு வந்து பின்வருமாறு யோஜிக் கலாகும் :—"இந்த இடத்தில் இதுவரை யில் பிரகிருதி, நகிருதி, நிவர்த்தி இந்த மூன்றுங் கூட (நான் முதலியவர் கள் கூட) யோசித்ததில்லையே. அப்படி யிருக்க, என்னுடைய ஆதார பாகத்தி லிருந்து ஒரு நீராட்டின திவலை தார மூலத்தில் கிளம்பி உட்புகுந்து வீணுத் தண்டேறி, இங்கு வந்து இந்த எண்ணம் கொடுத்ததே. என்ன ஆச்சரியம், புதுமை!" இவ்விதம் யோஜித்த பிறகு, "இருக்கட்டும், என் பலத்தை யெல்லாம் காட்டுகிறேன். இந்த சரீரத்துடன் இந்த எண்ணத்தை எப்படி நிறுத்தி வைத்துக் கொடுத்தது. ஆனாலும் என்னுடைய பலத்தையெல்லாம் காட்டினுல், இந்த சரீ ரத்தை விட்டு விடுகிறதா அல்லது எனக்கு மேலான தீவிரமாய் (force ஆய்) நின்று என் பலத்தை உட்கொண்டு விடுகிறதா, பார்க்கலாம்" என்று நினை த்து, குண்டலினி தன் சக்திகளை எல் லாம் சுருட்டிக்கொண்டு அதிக பலத் துடன் ஓர் அதிர்ச்சி கொடுக்கும். இவ் விதம் சரீரத்துக்கு ஓர் ஆட்டம் கொடு த்து நேராய் கீழ் தூலத்துக்கு (Physical) வந்து, கீழுக்கும் மேலுக்கும் அதன் பலத்தைக் காட்டும் தருணத்தில், இவ்வேகத்தைத் துளிக்கூட சட்டை செய்யாமல், ஸஹஸ்ராராவிலுள்ள அதி மேலான வேகத்துக்கு இடமுண்டாக்கிக் கொண்டு தூலத்தை அழியாத் தன்மை அடையும்படி கெட்டிப்படுத்த வெளி வந்துவிடும். எது? பல்புக்குள் இருக் கும் மஞ்சள் சத்து (Yellow matter in bulb.)

ஸஹஸ்ராராவுக்கு ஆதாரமாயுள்ள நரம்புகள், சிறு கிரணங்கள் (Rays) போல இருக்கின்றன. ஸுஷும்னு கிரணத்தின் முனை நின்ற இடந்தான் ஸஹஸ்ராராவுக்கு முதல் உண்டான ஆதாரபாகம். அதிலிருந்து ஒவ்வொரு நரம்பும் சிறு கிரணமாய் வளர்ந்து கொண்டு வருகிறது. நாற்பது வயதுக்கு மேல்தான் ஆயிரம் கிரணங்கள் வளர் கின்றன. பிறகு கிரணங்கள் மேல் நோக்கி வளர இடமும் வலுவும் இல்லை. அதனுல் அக்கிரணங்கள் கிளைத்து வளைந்து இருக்குமிடத்திலேயே சுற்றிக் கொண்டு தாமரை இதழ்கள்போல் தோன்றுகின்றன. ஸஹஸ்ரார அடி பாகத்தில் ஹார்மனேராகா என்ற பெரிய ஆதார நரம்பு முதலில் உண்டாகி பிறகு அதன் கீழ்ப்பாகத்திலிருந்து மூன்று

நரம்புகள். (சுழிமுனை, இடா, பிங்களா) சக்திபெற்றுக் கீழ் மர்மஸ்தானம் (குண்டலினி அல்லது பிரகிருதி இருக்குமிடம்) வரையில் வளர்கின்றன. ஹார்மனோராகா நரம்பின் மேல்பாகத்திலிருந்து ஸஹஸ்ரஹாரா கிரணங்கள் உண்டாக, அதன் கீழ் பாகத்திலிருந்து வேண்டிய நைப்பு (பிசின்) கொடுக்கப்படுகிறது. சிருஷ்டி ஆரம்பித்த உடனே குண்டலினி என்ற சக்தி (force) முதலில் உண்டாகி மேற்கண்ட நான்கு ஆதார நரம்புகளையும் அவற்றினின்று மற்ற நரம்புகளையும் தோன்றச் செய்வதற்கான பிசினை உண்டாக்குகிறது. இது எதைப்போல? ஒரு கெட்டியான விரையை விதைத்தால், எவ்வளவு கிளைகளும் இலைகளும் முளைக்குமோ அதுபோல. உடல் உற்பத்தி ஆரம்பகாலத்தில் "பிரயோஜன ஸித்தி" ஒன்று (கைள்ண்டயம்) சக்தி வேகமாய் ஹார்மனோராகா நரம்புக்குள் புகுந்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வேலையை செய்து வருகிறது. உதாரணமாக உடல் கட்டும் வேலை (Embryology) மூன்று மாதம் நடைபெறவே ஸஹஸ்ராராவின் அடி நரம்பிலிருந்து அறுபத்து லக்ஷத்து ஆராயிரத்து ஐநூறு நரம்புகள் வளர்ந்து பரவுகின்றன. நான்காம் மாதம் முழுமையும் மேற்கண்ட நரம்புகளைக் கெட்டிப்படுத்தி மிகவும் சூக்ஷ்ம (Astral) பாகத்தில் புத்தியும் மேல் தாரத்துப் பார்வையும் (Innersight) கொடுக்கப்படுகிறது. முதல் இரண்டு மாதங்களில் நாலு நரம்புகள்தான் (ஹார்மனோராகா, இடா, பிங்களா, ஸுஷும்ணை) வளர்கின்றன. நான்காம் மாதம், சில நரம்புகள், அடிவயறு முதலிய அவயவங்கள் வளர பிரயத்தனம் செய்யப்படுகிறது. மாலிகரஞ்சன (Raisons roof) என்கிற சிரசின் ஆதார பாகம் 6 பாகம் கனம், 35 பாகம் நீளம், இவ்விதம் தங்குகிறது. கையொன்றுக்கு 9 பாகம், நடுவே 10 பாகம் கொடுபட்டு, 35 பாகத்தின் மிச்சமாயுள்ள 7 பாகம் சிரசின் அடி ஆதாரத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டு, ரப்பர் போல் பெருகவும் குறுகவும் தகுதியுள்ளதாய் (Elastic) வைத்துக்கொள்ளப்படுகிறது. முதலிலேயே வளர ஆரம்பித்துவிடும் சர்மங்களுக்கெல்லாம் நரம்புகளும் பிசினும் கொடுத்து அவைகளுக்கு தக்க ஆதாரம் கொடுக்க ஹார்மனோராகா வேலை செய்யத் தொடங்குகிறது. இன்னும் பலவற்றை இங்கே சொல்லலாம். ஆனால் விஷயம் எட்டுச் சுரைக்காயன்று. ஆண்டு அனுபவிக்கும் இன்பத்தேனேயாகும். ஒவ்வொரு மனிதனுக்கு ஏற்பட்டுள்ள சக்தி அவன் தூல உடலுக்குப் புறத்தில் நின்று சிருஷ்டி அவசரவாயிலாய் ஏற்பட்ட சூன்ய மார்க்கத்தால் உட்புகுந்து ஏறி, ஸஹஸ்ராராவுக்குச் சென்று தன் நாதனுடன் கலந்து குலாவுவதே அவன் அடையும் வீடு என்ற மோக்ஷ நிலை. தற்கால சிருஷ்டி அமைப்பில் இவ்வீடு வலுவு குன்றியது. அதை ஸ்திரப்படுத்துவது யோக முயற்சியினால்தான் இயலும். அதற்கேற்ற யோகம் ஒன்றே. இந்த யோகத்தின் முழுப்பெயர் பிரவேச, வியாபக, கதி, கிரண, ஆரோக்ய, பிருக்த, ரஹித, தாரக, அதீத ராஜ யோகம். இத்தவச் சக்தியே ஆதிசக்தியாகும். இது தன் நாதனுடன் ஸஹஸ்ராராவில் கலப்பதே ஆணாகும். "அநாதி" என்ற சப்தத்தைப் பிரித்தால், அது "ஆண், ஆதி" என்று தொனிக்கிறதல்லவா? ஆதி சக்தியை யோக சாதகத்தால், கொஞ்சம் கொஞ்சமாய், தானாகவே, ஆண் சக்தியாய் மாற்றுதல், பரிபூரண யோகத்தின் நோக்கம். இவ்விதம் மாற்றப் பிரம்மமே முயன்று வருகிறதென்று காகபுசுண்டர் கூறுகிறார். நிகழும் தாருண வருஷம் மாசி மாதம் முதல் தேதி அதன் முடிவு ஆரம்பிக்கும். தற்சமயம் நடக்கும் ஸ்வேதவராக கல்பம் போய் பிரம்ம கல்பம் ஆரம்பிக்கும் தருணமும் அதுவே. பிரம்ம கல்ப அரசு வாழ்க! மித்திர குருநாதன் வாழ்க! அவன் சக்தி லீலை உலகை இன்புறுத்துக! பாரெல்லாம் பேரின்பம் பெறுக!

காலஞ்சென்ற, கும்பகோணம் அத்வைத ஸபா

பண்டிதராயிருந்த மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னகர, மஹோபதேசக,

பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

# ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

## கீர்த்தனை 9

தாளம் ரூபகம்] [ராகம் தோடி

### ஸாஹித்யம்

பல்லவி

குல கிரி வர தன யாம்,
ஸதத ஸாம், கலயே

அனுபல்லவி

*தள தச சத யுத நீ ரஜ நிலயாம்,
கத விலயாம், குவலய வன
காமன க்ருத குஸுமகலா பாம்.

சரணம்

வலரிபு முகஸுர பரி ப்ருட
ஸமுதய நுத சரிதாம்,
வரகுண கண மிளிதாம், லலிதாம்,
முனி பரிஷதி கலிதாம், ஹ்ருதி தாம்,
ஸஹ்ருதயவர யக்ஞேச் வர
பாலன பர ஹ்ருத யாம்.

### தாத்பர்யம்

ஆயிரம் இதள்களோடுகூடிய தாமரை புஷ்பத்தில் வீற்றிருப்பவளும், சந்திர கலையைப் புஷ்ப மாலைபோல் தலையில் தரித்திருப்பவளும், இந்திரன் முதலிய தேவர்களால் புகழப்பட்ட சரிதையை யுடையவளும், மேலான குணங்களோடு கூடியவளும், மஹர்ஷிகளால் உபாஸிக்கப்பட்டவளும், ரஸிக ச்ரேஷ்டரான யக்ஞேச்வரனை ரக்ஷிப்பதில் ஊக்கமுடையவளும், குலபர்வதத்தின் குமாரியும் ஆன தயை நிரம்பிய ஸ்ரீ லலிதா தேவியை மனதில் தியானம் செய்கிறேன்.

---

**குறிப்பு** :—* அனுபல்லவியில் ஸாஹித்யம் சிறிது மாற்றப்பட்டிருக்கிறது. இக் கீர்த்தனத்தில் ஸங்கீதாம்சங்களிலும் சிற்சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன—**ய.ம.**

பல்லவி

(1) ஸ ரி க ரி ஸ நி த நி ஸா ஆ
குல கி ரி வ ர த ன யா ஆம்

க ரி கா ஆ ம த ம க ரி ஸ
ஸ த யா ஆம் க ல யே எ எ அ

(2) ஸ ரி க ரி ஸரிஸநி த நி ஸா ஆ
குல கி ரி வஅரஅ த ன யா ஆம்

க ரி கா ஆ ம த ம க மகபம
ஸ த யா ஆம் க ல யே எ எஎஎ

(3) க ரி ஸ ரி க ரி ஸரிஸநி த நி ஸா ஆ
எ எ கு ல கி ரி வஅரஅ தன யா ஆம்

க ரி கா ஆ க மதநி ஸநிதப மககரி
ஸ த யா ஆம் க அலஅ யேஎஎ எஎஎஎ

ரி ஸ ஸ ரி க ரி ஸரிஸநி த நி ஸா ஆ
எ எ கு ல கி ரி வஅரஅ த ன யா ஆம்

அனுபல்லவி

(1) ம ம த த ம த த நி ஸ்ா ஸ் ஸ்
த ள த ச ச த யு த நீ ர ஜ

ரி ஸ் த ா ப ம ப த நிஸ்ாநி தா
நி ல யாம் க த வி ல ய ஆஅ ஆம்

(2) ம ம த த ம த த நி ஸரிகா ரிஸ்
த ள த ச ச த யு த நிஇஈ ரஜ

ரி ஸ் தா ப ம பத நிஸ ஸாரிஸ தா
நி ல யாம் க த வில யஅ ஆஅஅ ஆம்

(1) த த க் ஸ் ரி நி ஸ்ா நி த ப த
கு வ ல ய வ ன கா ம ன க்ருத

நித ம க கா ரி ஸா அ அஅ
குஸ¬ ம க லா ப ஆம் ம் ம்ம்

(2) த த க் ஸ் ரி நி ஸ்ா நி த ப த
கு வ ல ய வ ன கா ம ன க்ருத

ரிஸ ஸநி நிததப பமகா கமபத நிஸ ஸ நி த ப ம க
குஉ ஸ¬உ மஅகஅ லஅஆ பஅஅஅஅஅ அஅஅஅஅஅ

கரி ஸரி கரி ஸரிஸநி
அஅம் குல கிரி வஅரஅ

சரணம்

(1) கம நித மக — கக மக கரி
வலா ரிபு முக — ஸுர பரி ப்ருட

ரிரி கரி ரிஸ — ஸநி ஸா ஆ
ஸமுதய நுத — சரி தா ஆம்

(2) தநி ஸஸஸநி — தநி ஸா ஆ
வர குண கண — மிளி தா ஆம்

தநி ஸா ஆ — தத நிஸரிஸ தா
லலி தா ஆம் — லலி தஅஅஅ ஆம்

(3) தநி ஸ்ஸ் ஸ்நி — தநி ஸ்ா ஆ
முனி பரி ஷதி — கலி தா ஆம்

தநி ஸ்ா ஆ — தத நிஸரிஸ தா
ஹ்ருதி தா ஆம் — ஹ்ருதி தஅஅஅ ஆம்

(4) தக் ஸ்ரி நிஸ — ஸா நித பத
ஸஹ்ரு தய வர — யக்ஞேஸ்வர

(a) ஸா நித பாபம — கரி ஸா ஆ
பா லன பஅரஅ — ஹ்ருதயா ஆம்

(b) ரிஸ்ஸ்நி நிததப பமகா — கமபத நிஸ ஸநிதபமக
பஅஅஅ லஅனஅபஅரஅ — ஹ்ருஉதஅயஅ அஅஅஅஅஅ

கரி ஸரி கரி ஸரிஸநி — தநி ஸா ஆ
அஅம் குல கிரி வஅரஅ — தன யா ஆம்.

# வசனக் காவியங்கள்

[ருஷியப் பேராசிரியர் ஐவன் டூர்ஜெநீவ் 'வசனக் காவியங்கள்' என்ற தலைப் பின்கீழ் அபூர்வமான குட்டிக்கதைகளும் சொற் சித்திரங்களும் இயற்றியிருக்கிறார். மேம்பட்ட கருத்தொன்றைக் கதை ரூபமாகவோ நேரிடையாகவோ விளக்கும் துறையில் பண்பட்ட கவி ஹ்ருதயத்தில் எழும் அரிய உணர்ச்சிகளேயும் ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் தனக்குமுள்ள ஏகைக பாவத்தையும் மனதைக் கவரும் தினுசில் வெகு சில வார்த்தைகளேக்கொண்டே வருணித்திருக்கிறார். இன்னொரு பாஷையில் இவருடைய சொல் நயத்தையும் 'கடுகைத் துளேத்துக் கடலே அடைக்கும்' சக்தியையும் பூரணமாக வெளிப்படுத்துவது சாத்தியமில்லாத தாயினும் கருத்தையே முக்கியமாகக்கொண்ட கீழ்க் கண்ட மொழிபெயர்ப்புகள் நேயர்களுக்கு அவருடைய ஜீவன் ததும்பும், கலேயை ஒருவாறு உணர்த்தலாம். வருகிற இதழ் களில் இன்னும் சில காவியங்களே மொழி பெயர்த்து அச்சிட எண்ணுகிறோம்—ர.]

## நாய்

அறையில் நாங்கள் இருவர்தான், என் நாயும் நானும்.

வெளியே பெரும் புயல் அலறுகிறது.

எதிரே உட்கார்ந்து என்னேயே நோக்குகிறது நாய்.

நானும் அதையே பார்க்கிறேன்.

என்னிடம் எதையோ சொல்ல விரும்புவது போல் தோன்றுகிறது. வாயில்லாப் பிராணி, வார்த்தை வரவில்லே, தன்னேத்தான் தெரிந்து கொள்ளும் சக்தியும் அதற்கில்லே. ஆனல் அதன் உண்மை எனக்குத் தெரியும்.

இந்த க்ஷணத்தில் எங்கள் இருவர் உள்ளத்திலும் ஒரே எழுச்சிதான்; யாதொரு வித்தியாசமுமில்லே. இருவரும் ஒரே ரகம்தான். இருவருக்குள்ளும் ஒரே சுடர் ஒளிவிட்டுத் தத்தளிக்கிறது.

காலன் தன் பரந்து அல்லித் தண்டு போல் குளிர்ந்த இறக்கையை ஒரு விசிறல் விசிறி ஒரு பாய்ச்சல் பாய்கிருன். முடிந்தது வாழ்வு!....

அப்புறம் எங்களுள் ஒளிவிட்ட சுடர் யாதென்று அறிவார் யார்?

இல்லே இல்லே! ஒருவரை ஒருவர் பார்க்கும் நாங்கள் மனிதனும் மிருகமும் அல்ல...........ஒன்றன்மேல் ஒன்றாய்ப் பதிந்து நிற்கும் அக்கண்கள் சமதையான இருவர் கண்களே.

மனிதன் விலங்கு இருவருள்ளேயும் ஒரே ஜீவன்தான் நடுக்குண்டு மற்றதை நாடி ஒண்டுகிறது.

---

## பிச்சைக்காரன்

தெருவில் நடந்துகொண்டிருந்தேன்.... தெம்பற்ற கிழப் பிச்சைக்காரன் குறுக்கிட்டான்.

ரத்தம் குழம்பிக் கண்ணீர் தளும்பும் கண்கள், கறுத்த உதடுகள், முரட்டுக் கந்தல்கள், கொதரிப்புழுவைத்தகாயங்கள்.... ஐயோ, ஏழ்மை இந்த அப்பாவியைப் பயங்கரமாகக் கடித்து உதறியல்லவோ விட்டது!

சிவந்து அப்பமாய் வீங்கி அழுக்கேறிய கையை நீட்டினன், முக்கினன், 'பிச்சை' என்று முனகினன்.

ஒவ்வொரு பையாகக் கையை விட்டுத் துழாவினேன்...........ஒன்றும் அகப்படவில்லே. பணப்பை, கடியாரம், கை குட்டைகூடக் காணேம்...........கையில் ஒன்றும் கொண்டு போகாமல் போய் விட்டேன். பிச்சைக்காரனே காத்திருக்கிருன்........நீட்டின கை பலவீனத்தால் நடுங்குகிறது.

உள்ளம் தடுமாற, வெட்கம் மேலிட, வெடவெட வென்று உதறும் அந்த அழுக்குக் கையைப் பிடித்து மனமாரக்

குலுக்கிறேன்....'கோபிக்காதே, அண்ணே, கையிலே ஒன்றுமில்லே, அண்ணே.'

ரத்தம் குழம்பின கண்களால் என்னை வெறிக்கப் பார்த்தான் பிச்சைக்காரன்; கறுத்த உதடுகளில் ஒரு புன்சிரிப்பு; சில்லிட்ட என் விரல்களை அவன் கையால் அழுத்திப் பற்றினான்.

'அது கிடக்கட்டும், அண்ணே, இதற்கு என் வந்தனம். இதுவும் கொடைதான்' என்று முணுமுணுத்தான்.

எனக்கும் என் ஸகோதரனிடமிருந்து ஒரு கொடை அப்பொழுது கிடைத்ததை என் உள்ளம் உணர்த்திற்று.

---

## திருப்தி

பெரிய பட்டண வீதியிலே ஒரு வாலிபன் உற்சாகமாய்த் துள்ளிக் குதித்துச் செல்லுகிறான். நடையிலே குதூகலமும் குறுகுறுப்பும், கண்களில் வசீகர ஒளி, உதட்டில் புன்முறுவல், முகத்தில் குஷி....திருப்தியும் சந்தோஷமும் உருவெடுத்தாப்போல் தோன்றுகிறான்.

காரணம்? ஏதாவது சொத்துக் கிடைத்ததா? உத்தியோகத்தில் மேல் பதவி கிட்டியதா? தன் பிரியையைக் காணப் பறந்து செல்லுகிறானா? அல்லது, நல்ல சாப்பாடும் தேகக்கட்டும் சௌக்கியமுமாகச் சேர்ந்து இவ்வித ஆனந்தத்தை எழுப்பியிருக்கின்றனவா? ஒரு வேளை ராஜாங்கத்தில் கௌரவப் பதக்கம் அளித்திருப்பார்களோ?

அதெல்லாம் ஒன்றுமில்லை. தன் நண்பன் ஒருவன்மீது அபாண்டமான அவதூறு ஒன்று பிறப்பித்து, வெகு அக்கரையாக அதைப் பரப்பி, அந்த அவதூற்றை இன்னொரு சிநேகிதன் தன் காதில் போடத்—தானும் அதை வாஸ்தவமென்றே நம்பிவிட்டான்!

ஆஹா! என்ன திருப்தி! வெகு நல்ல சுபாவம், கட்டாயம் முன்னுக்கு வருவான் இந்தப் பிள்ளையாண்டான். தக்ஷணம் பக்ஷம் பூரித்தல்லவோ விளங்குகிறான்!

---

## கீரைக் குழம்பு

விதவைக் குடியானத்தி ஒருத்திக்கு ஒரே பிள்ளை. அவனுக்கு இருபது வயது. அந்த ஊரிலேயே முதல்தரமான வேலைக்காரன் அவன்தான். அவன் இறந்து போனான்.

ஊருக்கு முதலாளியான சீமாட்டி இந்தக் கஷ்டமான செய்திகேட்டுச் சவம் அடக்கமான தினத்தன்று குடியானத்தியைத் துக்கம்கேட்கச் சென்றாள். அவளும் வீட்டில் இருந்தாள்.

நடுக்கூடத்தில் மேஜைமேல் இடப்பட்ட கரியேறின பானையிலிருந்து தண்ணியாய் ஓடும் கீரைக் குழம்பை நிதானமாய் வலது கையில் ஏந்திய சிறு 'ஸ்பூ'னால் சுரண்டி எடுத்து வாயில் விட்டுக்கொண்டு நின்றாள். இடக்கை சோர்ந்து தொங்கிற்று.

அவள் முகம் ஒட்டி உலர்ந்து கறுத்திருந்தது; கண்கள் சிவந்து அழுது வீங்கியிருந்தன. ஆனால் உடம்பில் மட்டும் கோணல் குறுகல் இல்லை, வில் விறைப்பாய் விறைத்து நின்றாள்.

"ஈசுவரா! என்னமாய்த்தான் சாப்பாடு இறங்குகிறதோ!.... இருந்தாலும் இதுகளுக்குக் கொஞ்சங்கூட அன்பு அங்கலாய்ப்புக் கிடையாதுதான்!" என்றெண்ணினாள் பணக்காரி.

அப்பொழுது சில வருஷங்களுக்கு முன் ஒன்பது மாதமான தன் பெண் குழந்தையைச் சாகக்கொடுத்தது அவள் ஞாபகத்திற்கு வந்தது. அவளுக்கிருந்த துக்கத்தில் கிராமாந்தரத்தில் ஆனந்தமாய்க் காலங்கழிக்க ஒரு பங்களாக் கிடைத்தும் அங்கே போக மனமில்லாமல் பட்டணத்தில் தன் வீட்டிலேயே இருந்துவிட்டாளே!

இவள் இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தாள். குடியானத்தியோ சாப்பிட்டு முடிந்தபாடில்லை. பணக்காரிக்குத் தாங்கவில்லை இது. "ஏண்டி, நன்றாயிருக்கிறதே! உன் பிள்ளையிடம் நீ வைத்திருந்த அன்பு இவ்வளவுதானா? சோறு வேண்டியிருக்கிறதே உனக்கு! என்னமாய்த்தான் அந்தக் குழம்பை

மடுக்கு மடுக்கென்று குடிக்கிருயோ!" என்று ஆத்திரப்பட்டாள்.

ஒட்டின கன்னங்களில் துயரக் கண்ணீர் ஆருய் வழியக் குடியானத்தி சாவதானமாக, "என் குழந்தை போய்விட்டான். நானும் போகவேண்டியதுதான். என் வயிற்றை அள்ளிப் பிடுங்குகிறது. அதற்காகக் குழம்பை வீணடிக்கலாமா? அதில் உப்பு இருக்கிறதே" என்று பதில் சொன்னுள்.

சீமாட்டி உடம்பைக் குலுக்கிக் கொண்டு வெளியே போய்விட்டாள். அவளுக்கென்ன, உப்புக்குப் பஞ்சமா ?

---

## இரு தனிகர்கள்

ராத்ஷீல்டு என்ற பெரும் பணக்காரர் பிள்ளைகள் படிப்புக்கும் வியாதியஸ்தர் சிகிச்சைக்கும் வயோதிகர் போஷணைக்கும் ஆயிரக்கணக்காகத் தம் ஏராள ஐசுவரியத்திலிருந்து செலவிடுகிருர் என்று ஊரார் புகழக்கேட்டு நானும் மனம் இளகிப் போற்றுகிறேன்.

அப்படி மனம் கசிந்து சிலாகிக்கும் போதும் பயிர்த்தொழில் புரியும் ஒரு ஏழைக் குடும்பத்தார் அநாதையான தங்கள் சிறு மருமகளைத் தம் பொத்தக் குடிசைக் கழைத்துவந்த காட்சிதான் என் கண் முன்னே நிற்கிறது.

"இந்தக் குட்டியை நாம் கொணர்ந்து வைத்துக்கொண்டால் கால் காசு மீராது. அவள் செலவிற்கே சரியாய்ப் போய் விடும். ரொட்டிக்குப்போட உப்பு வாங்கக்கூடக் காசு இராது" என்ருள் பெண் ஜாதி. "அப்படியானுல் உப்பில்லாமல் தள்ளினுல் போச்சு" என்ருன் அவள் புருஷன் குடியானவன். ராத்ஷீல்டுக்கு எவ்வளவோ மேல் அந்தக் குடியானவன்.

---

## ஈசன் அருளிய விருந்து

எல்லாம் வல்ல ஸர்வேசுவரன் ஒரு நாள் தன் நீல வான மாளிகையில் ஒரு பெரும் விருந்திட எண்ணினுர்.

எல்லா நற்குணங்களும் அழைக்கப்பட்டன விருந்திற்கு. நற்குணங்கள் மட்டும்தான்....ஆண் பிள்ளைகளை அவர் அபேக்ஷிக்கவில்லை....விருந்தாளிகள் எல்லோரும் பெண்பாலாரே.

அவர்களும் சின்னவர்களும் பெரியவர்களுமாகத் திரள் திரளாக வந்திருந்தார்கள். சாமாந்நிய குணங்கள் பெருமை தாங்கிய குணங்களைக் காட்டிலும் சற்று அதிகமாகவே ஸரஸமாயும் ஸல்லாபமாயும் பழகினுர்கள் என்று சொல்லத்தான் வேணும். ஆகிலும் ஒருவரிடமும் கலகலப்புக்குக் குறைவில்லை. நெருங்கிய பந்துக்களும் நண்பருமான அவர்கள் ஒருவரோடொருவர் சினேக வார்த்தையாடி நின்ருர்கள்.

மனதைக் கவரும் இரண்டு பெண்மணிகள் மட்டும் ஒருவரை யொருவர் அறியாதவர்போல் விலகி நிற்பதை ஈசன் கவனித்தார்.

விருந்திடுவோர் வழக்கத்தை ஒட்டி ஒருத்தியின் கையைப்பிடித்து மற்றவளிடம் இட்டுப்போய் அறிமுகப்படுத்திஞர்.

'உபகாரம்' என்ருர் முதலாமவளைச் சுட்டிக்காட்டி.

'நன்றியறிவு' என்று பின்னேடு இரண்டாமவள் பெயரைக் குறித்தார்.

இருவருக்கும் ஏற்பட்ட ஆச்சரியத்தில் பேசமுடியவில்லை.

உலகம் தோன்றின நாளாக—அது தோன்றி வெகுகாலம் ஆயிற்றே—இது தான் அவர்கள் இருவரும் முதல்முதல் சந்தித்தது.

---

## சிட்டுக் குருவி

வேட்டைக்குப்போய்த் திரும்பி வந்து கொண்டிருந்தேன். தோட்டத்தில் இரு மரப்பத்திகள் இடையே யுள்ள நடையில் என் நாய் முன்னே ஓடிக் கொண்டிருந்தது.

திடீரென்று ஓட்டத்தை யடக்கி வேட்டையில் மிருகங்களைத் தொடரும் தினுசில் சந்தடியில்லாமல் நடந்தது. அது போகும் வழியை உற்று நோக்கினேன். சின்னஞ்சிறு சிட்டுக் குருவி ஒன்று

—மூக்கில் மஞ்சள் மாறவில்லை, தலையில் பொசபொசவென்று இளம் மயிர்—கூட்டிலிருந்து கீழேவிழுந்து கிடந்தது(காற்று பலமாய் அடித்து நடையின் பக்கவில் உள்ள மரங்களை ஆட்டி அசக்கிக்கொண்டிருந்தது.) குருவிக் குஞ்சு அரைகுறையாய் வளர்ந்த தன் சிறு சிறகுகளை வீணே ஆட்டிக்கொண்டு நகரமுடியாமல் தவித்தது.

என் நாய் அதை மெதுவாக அணுகியது. அப்பொழுது திடீரென்று அருகேயுள்ள ஒரு மரத்திலிருந்து வயதாகித் தொண்டை கறுத்த சிட்டுக்குருவி ஒன்று ஒரு பாய்ச்சல் பாய்ந்து கல் விழுந்தாப்போல் நாயின் முன்னே பொத்தென்று விழுந்து, அலங்கோலமாய் இறக்கைகளை உதறிக்கொண்டும் நடுநடுங்கிப் பரிதவிக்கும் குரலில் கீச்சு மூச்சென்று கத்திக் கொண்டும் பளிச்சென்ற பற்கள் நிரம்பிய திறந்த வாயின் நேரே தன்னை ஒருமுறை அல்ல, இருமுறை வீழ்த்திக் கொண்டது.

காக்கப் பாய்ந்த பாய்ச்சல் அது........ தன் குஞ்சின் முன்னே வேணுமென்று விழுந்தது........ஆனல் அதன் சின்னச் சரீரம் பயத்தில் பதறிற்று; அதன் குரல் உருமாறி விரஸமாய்க் கிளம்பிற்று. பீதியால் தன் நினைவிழக்கும் நிலைமையில் தன்னையே அர்ப்பணம் செய்தது!

நாய் அதன் கண்ணுக்கு பயங்கரமான பிரும்மாண்டப் பிரகிருதியாக வல்லவா தோன்றி யிருக்கும்! அப்படியிருந்தும் தன் உச்சாணிக் கிளையில் ஆபத்திற் குட்படாமல் ஒதுங்கி யிருக்க அதற்கு முடியவில்லை. தன் சங்கற்பத்தையும்விடப் பலமான ஒரு சக்தி அதைக் குப்புறத் தள்ளிற்று.

என் நாய் தயங்கிப் பின்னே நகர்ந்தது...........அதுவும் அந்தச் சக்தியை உணர்ந்ததென்பது நிச்சயம்.

ஏமாற்றமடைந்த நாயைக் கூவி அழைத்துக்கொண்டு, வணக்க உணர்ச்சி பொங்க வெளியேறினேன்.

ஆமாம், சிரிக்காதே. சூரனன அந்தச் சிறு பக்ஷியையும் அதன் அன்பில் பிறந்த வேகத்தையும் நான் வணங்கத் தான் செய்தேன்.

சாவையும் சாவின் நினைவால் உண்டாகும் பயத்தையும்விட அன்பே பலமானதென்று எனக்கு விளங்கிற்று. அன்பினலன்றோ சிருஷ்டி தர்மம் சிதருமல் விருத்தி யடைகிறது.

---

## நிருபர்

நண்பர் இருவர் தேத்தண்ணீர் அருந்திக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று தெருவில் அமளி. 'ஐயோ!' 'அப்பா!' என்ற அலறலும் கொடூரமான வசைச்சொற்களும் கோரச் சிரிப்பும் காதைத் தாக்கின.

நண்பரில் ஒருவன் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்து, "யாரையோ புடைக்கிருர்கள்" என்ருன்.

"யாரது, குற்றவாளியா, கொலை பாதகனு? அது கிடக்கட்டும், யாராயிருந்தால் என்ன, சட்ட விரோதமாக வழியிலே போகிறவர் எல்லோரும் அடிக்கிறதென்ருல் நாம் பார்த்துக் கொண்டிருக்கப் படாது. நாம் போய் அவன் பக்கம் சேரலாம்" என்ருன் மற்றவன்.

"கொலை பண்ணினவ னில்லையப்பா அவன்."

"அப்படியானல் திருடனு? அதனல் என்ன? நாம் போய் அவனைக் கூட்டத்தி லிருந்து விடுவிக்கவேணும்."

"திருடனுமல்ல"

"திருடனில்லையா? பணத்தைச் சுருட்டிக்கொண்டு ஓடும் பொக்கிஷதாரனு; ரயில் அதிகாரியா, ராணுவ 'கண்ட்ராக்ட'ரா, ஏழைக் கலைஞரை ஆதரிக்கும் வள்ளலா, வாதாடும் வக்கீலா, பழமையைப் போற்றும் பத்திராதிபனு, சீர் திருத்தக்காரனு?....எப்படி வேணுமானுலும் இருக்கட்டும், நாம் அவனுக்கு ஒத்தாசை பண்ணித்தான் ஆகவேணும்."

"இல்லை அப்பா....அடிபடுகிற இந்தப் பேர்வழி ஒரு தினசரிக்கு நிருபர்."

"நிருபமா? அப்படியானால், முதலில் இந்தத் தேத் தண்ணீரை அருந்துவோம்."

---

## ஒரு கை பார்ப்போம்

எவ்வளவு சிறு விஷயம் ஒவ்வொரு சமயத்தில் மனுஷியனுடைய போக்கையே மாற்றி விடுகிறது!

மன அமைதி சற்றுமின்றி ரஸ்தா வழியே நடந்து கொண்டிருந்தேன்.

சொல்ல முடியாத வேதனை; ஏதோ பேராபத்து வரப்போவது போன்ற பயம் உள்ளத்தை இருத்தியது. தலையை நிமிர்ந்து பார்த்தேன்....இரண்டு பத்தி மரங்களுக்கிடையே அம்பு விட்டாற் போல் ரஸ்தா கண்ணுக்கெட்டிய வரையில் நீண்டது.

எனக்குப் பத்துத் தப்படிக்கு முன்னே பளிச்சென்று அடிக்கும் காலை வெயிலில் சிட்டுக் குருவிக் கூட்டம் ஒன்று, தாயும் தகப்பனும் மக்களுமாக, ரஸ்தாவில் குறுக்கே தத்தித் தத்திக் குதித்துக் கொண்டிருந்தது. நடையில் என்ன ஒய்யாரம், என்ன கேளிக்கை, என்ன அமர்த்தல்!

அதிலும் ஒரு குருவி தன் முழுப் பலத்தையும் உபயோகப்படுத்தி பக்கவாட்டாகவே துள்ளிக் குதித்துக்கொண்டும், தன் சிறிய மார்பைப் புடைத்துக் கொண்டும், மட்டு மரியாதையில்லாமல் கொக்கரித்துக்கொண்டும், 'ஒரு பயல் லக்ஷியமில்லை!' என்று ஆரவாரிப்பதுபோல் காணப்பட்டது. ஏ, அப்பா, பெரிய சூரன் அது, சிங்கக்குட்டி!

இது இப்படியிருக்கத் தலைக்கு மேலே உச்சி வானத்தில் ஒரு பருந்து வட்டமிட்டது. இந்தச் சூரனை விழுங்கப் போகும் பருந்தோ என்னமோ?

இந்தக் காட்சியைக் கண்டதும் எனக்குச் சிரிப்பு வந்தது. கவலை, ஏக்கம் எல்லாவற்றையும் உதறித் தள்ளினேன். தைரியம், துணிச்சல், உற்சாகம் எல்லாம் திரும்பப் பெற்றேன்.

எனக்குக் காத்திருக்கும் பருந்தும் வந்து வட்டமிடட்டுமே!....அதைப்பற்றிக் கவலையில்லை. பார்ப்போம் ஒரு கை!

---





வாழ்க்கையிலே முக்கியமான வாலிபப் பருவத்தினராக இன்று நீங்கள் இருக்கிறீர்கள். நாள் முழுதும் வேலை செய்தாலும் குதூகலமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறீர்கள். இது நீங்கள் இந்த வாழ்க்கையை விரும்புவதால் தான்.

ஆனால் எதிர்கால, அதாவது 25 வருஷங்களுக்குப் பிறகு, நீங்கள் வாழ்க்கையை எப்படி விரும்புவீர்களென யோஜித்ததுண்டோ?

நீண்ட மும்முரமான வாழ்க்கைக்குபின், பாசமற்ற, நிம்மதியான வாழ்வை அமைதியாக ஓரிடத்தில் கழிக்க விரும்புவீர்கள்.

**இதற்கு நாங்கள் யோசனை கூறுகிறோம்**

விவரங்களுக்கு:

**நேஷனல்**

**இன்ஷூரன்ஸ் கோ., லிட்.**

*　*　*

நெருப்பு, விபத்து, மோட்டார், மற்றும் சகல விதமான இன்ஷூரன்ஸ்களுக்கு

**நேஷனல் பயர் அண்ட் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கோ., லிட்.**

7, கௌன்ஸில் ஹவுஸ் தெரு — கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு:

'நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்'

362, லைசனு பஜார் ரோட்—எஸ்ப்ளனேட்

சப் - ஆபீஸ்கள்: பெங்களூர் & மதுரை.




"வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைப் பண்ணிப் பார்" என்ற ஒரு பழமொழி வெகு காலமாய் நமது தமிழ் நாட்டில் தினசரி வாழ்வில் வழங்கி வருகிறது. இது ஏட்டுச் சுரக்காய் அல்ல. அநுபவத்தில் பிறந்து வாழ்வை மேன்மைப்படுத்தி நிர்மாண வேலையில் ஊக்கத்தை ஊட்டும் ஓர் சுவையுள்ள பழமொழி. உலகத்தில் சுகதுக்கங்களில் அடிபட்டவர்கள்தான் இதன் இனிமையை நன்கு உணரலாம்.

இந்தப் பழமொழியோடு, நவீன நாகரிகத்திற்குப் பொருந்திய, ஒரு வாலை ஓட்டலாமென்று நினைக்கிறேன்: "ஒரு பத்திரிகையை நடத்திப் பார்." ஆர்வத்துடன் உண்மையான வழியில், தொழிலாகக் கொள்ளாமல் சேவையாக எண்ணி, தொண்டுபுரிந்தால் பத்திரிகைத் தொழிலும் கல்யாணத்தைப் போல அவ்வளவு மங்களகரமான காரியமாகுமென்று நான் நம்புகிறேன்.

நிர்மாண வேலைக்குத் தேவையான குணங்களெல்லாம் வீடு கட்டுவதற்கு வேண்டும்: தீர்க்க தரிசனமும், பொருந்திய திட்டமும், பொது அறிவும், கை சுறுசுறுப்பும், சாமான்களை முன் கூட்டிச் சேகரிக்கும் புத்தியும் வேண்டும். கல்யாணத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு, வீடு கட்டுவதற்கு எவ்வளவு குணங்கள் வேண்டுமோ, அவ்வளவும் வேண்டும். அதற்குக் கொஞ்சம் கூடவும் வேண்டும். அந்நியர்களை அனுசரித்து, கட்டி வளைத்து, ஒற்றுமைப்படுத்திப் பழகும் தன்மையும், அவர்களை அன்புடன் சேர்த்து நேர்வழியில் நடத்தும் தன்மையும் வேண்டும்.

உண்மையில் வீடு கட்டுவது, கலியாணம் செய்வது, இவைகளைவிட பத்திரிகையை, சொந்த லாபத்தைத் தேடாமல் சமூக சேவையையே எண்ணி நடத்துவது ஓர் உயர்தர மங்களகரமான பணி. ஒரு தூய்மையான மனோ பாவமும், கிருஹஸ்தாச்ரமத்தை விட்டு விலகி வானப் பிரஸ்தத்தில் நிற்கும் மனோ நிலையும் சேர்ந்தால் மட்டுமே ஒரு பத்திரிகையை நித்திய கல்யாணம்போல் நடத்தி, தென்னல் வீசும் வீடுபோல் உயர்தரக் கட்டிப் பலருக்குப் பயன்படும் வடவிருக்ஷம்போல் வளர்த்து பலர் ஆசியைப் பெறலாம். இந்தப் பெரும் பாக்கியம் ஓரளவில் 'பாரத மணி'க்கு சரஸ்வதி பூஜா மலரின் மூலம் மலர்ந்திருக்கிறதென்று நம்புகிறேன்.

* * *

கிராமத்திற்குப் புத்துயிரளிக்கும் ஓர் ஆசிரமத்திற்கு நாக்காக, 1938-ம் வருஷத்தில் 'பாரத மணி'யைக் கனவு கண்டேன். உடனே ஒரு ஆத்ம நண்பரை மாத்திரம் இதுவிஷயம்கலந்து கனவை நினைவாக்கத் தீர்மானித்தேன். மனதில் தீர்மானத்திற்கு வந்தும் பல தலைவர்களையும் கண்டு கலந்தேன். நான் வக்கீல் தொழிலைவிட்டுப்பத்திரிகைத் தொழிலில் இறங்குவதை ஒருவராவது ஆமோதிக்கவில்லை. மைசூர் மாட்டை கட்டைவண்டியிலும்குப்பைவண்டியிலுமாகட்டிப்பரீட்சை

பார்க்க வேண்டும் என்று சிலர் மரியாதையாகச் சொன்னார்கள். அதில் முக்கியமாக ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார். அதிகாலே வேளே, அழகிய தோட்டம், எங்கும் சுறு சுறுப்பான களை, ஒரு மாமரத்தடியில் உல்லாசமாய் அமைத்து வைக்கப்பட்டிருக்கும் ஊஞ்சலில் அவர் ஆடிக்கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில் அவர் பிரசங்கத்தின் கிளர்ச்சிக்கு எல்லேயும் உண்டா? அவர் மனது மின்னல்போல் கொடியிட்டு, இடிபோல் கர்ஜித்து வானத்தில் உலவிக்கொண்டிருந்தது. அவருக்கு இணையான புத்திமான் (intellectual) ஒருவரையும் நான் சேது முதற்கொண்டு ஹிமாசலம் வரையில் ஏழு தடவை சஞ்சரித்தும் பார்த்ததில்லே.

அவர் பேச ஆரம்பித்தார், "என் உனக்கு இந்தப் பைத்தியம்? நூல் ஆசிரியராக ஒரு பெரும் பேரை வாங்கின பிறகு, காலே வைத்தால் சறுக்கும் இந்தப் பாசிபிடித்த பத்திரிகைப் படித்துறையில் போய் இறங்கிப் பலருடன் போட்டிப் போட்டுப் பொல்லாப் பெயரை ஏன் வாங்கவேண்டும்? எந்தத் தொழிலிலும் வெற்றியடைய வேண்டுமானல் இரண்டு குணங்கள் தேவை. வெற்றி யடைந்த ஒரு பெரியவரை கைகட்டி வாய்பொத்திக் காலேக்கழுவி அண்டிப் பிழைக்கவேண்டும். அல்லது பெரியோர் சிறியோர் எல்லாரையும் நீ இடித்துத் தள்ளிக்கொண்டும், வைதுகொண்டும் முன்னேற்றம் அடையவேண்டும். அதுதான் தொழிலில் வெற்றியடைய தற்கால வழி. ஆனல் உன் மனேபாவமோ, சந்நியாசியின் மனேநிலேயைப்போ விருக்கிறது. பிறரை அண்டவும் மாட்டாய். கூட்டத்தில் இடித்துத் தள்ளிக்கொண்டு முழங்கை வேலே செய்துகொண்டு போகவும் மாட்டாய். (you are neither parasitical nor aggressive). சந்நியாசிகள்கூட தக்க பிக்ஷை வேண்டுமென்றல் ஸ்ரீமுகம் அனுப்புகிறார்கள். வக்கீலேவிடப் பத்திரிகைத் தொழிலில் பத்துப்பங்கு பகட்டும், உழைப்பும், அகடவிகடமும் வேண்டியிருக்கிறது. அது உன்னல் முடியாது; குப்பைவண்டி யிழுக்க குதிரையா வேண்டும்? கால்சோர்ந்த பல மாடுகள் நமது நாட்டில் உண்டு. ஆம் ஆத்துக்குப்போய் புஸ்தகம் எழுது. ஆறு வருஷமாய் நீ ஒன்றும் எழுதவில்லே." என்று சொல்லிக் கொண்டு என் பதிலேக் கூடக் கேட்காமல் தன் மனேவேகத்தின் ஓட்டத்திலேயே கார்த்திகைப் பொறிபோல் சொற்களை அள்ளித் தெளித்துக்கொண்டு எனக்கு விரோதமாகத் தீர்ப்பைச் சொல்லிவிட்டு ஊஞ்சலேவிட்டு குதித்துக் குறுக்கும் நெடுக்குமாகத் தோட்டத்தில் உலவ ஆரம்பித்துவிட்டார்.

ஆனல் நான் சளேக்கவில்லே. மனம் தளரவில்லே. கூடப்போனேன். "ஆமாம் - வாஸ்தவந்தான் நீங்கள் சொல்வது. குப்பையையும் குவியவிடலாமா? வாரிக்கொண்டுதானே போக வேண்டும். குதிரையானல் நல்லதுதானே. அதற்கு நல்ல வண்டியும் மாடும் வேண்டாமா? நாடு முழுவதும் புத்துயிர்க் கிளர்ச்சி புகுந்து தூண்டுங்காலத்தில் கூட இந்த சுகாதாரத் தொண்டை நாம் சரிவரச் செய்யாவிட்டால் பிறகு எப்பொழுதுதான் செய்யப்போகிறோம். யாராவது ஒருவர் இதை செய்யவேண்டியதுதானே. இருபது வருஷகாலம் வக்கீலாக கிரஹஸ்தாசிரமமே போதும். நான் ஒரு நூலாசிரியராய் இருப்பதாலே இளேஞருக்கு நடை வண்டிபோல் பழக்கிக் கொடுக்கக்கூடிய ஒரு இலக்கிய பத்திரிகையை நமது நாட்டில் ஸ்தாபிக்கவேண்டியது என் கடமை அல்லவா? நான் மாத்திரம் நூலாசிரியராய் விளங்கினல் போதுமா? ஆங்கிலம் படித்த இளேஞரில் பத்து பேரையாவது ஒன்றுசேர்த்துத் தாய் மொழிக்குக் கொடுக்கவேண்டியது என் கடமை. ஆங்கிலம் கற்ற பத்து பேராவது ஒன்றுசேர்ந்து தமிழ் இலக்கியத் துறையில் ஒரு ஸத்சங்கத்தைக் கூட்டினல்தான், நார் கயிறுகிக் கைவல்யம் அடைவதுபோல், ஒரு உத்தமத் தொண்டை நாட்டில் பெருக்கிப் புத்துயிரை அளிக்கலாம்" என்று சொல்லி முடித்தேன். அவர் காதில் அது

விழவேயில்லை. நான் வீடு திரும்பினேன்.

* * * *

அப்படியிருந்தாலும் என் சுபாவத்தைக்கண்ணுடியில் பார்ப்பதுபோல் அவர் என்னையே பார்க்கச் செய்ததால் நான் பெரும் கலக்கத்துடன் வீடுதிரும்பினேன். பத்திரிகைத் தொழிலில் நான் இறங்குவதை ஆமோதித்த என் ஆப்த நண்பரைத் தற்செயலாய் வழியில் கண்டேன். அவர் பெயரைச் சொல்ல எனக்கு இஷ்டந்தான். ஆனால் நான் குறித்துவிட்டால்அவர்மறுபடியும் என்னிடம்பேசவே மாட்டார். சென்னையைவிட்டு ஓடிப்போய் விட்டாலும், ஓடிப்போய் விடுவார். அதனால் பலருக்குப் பெரும் நஷ்டம் ஏற்படும். அவர் கோரோசனையுள்ள ஒரு மாடு. இலக்கியத் தொண்டுக்கு உண்மையில் பிறந்தவராக இருந்தாலும், நமது அடிமை நாட்டில் ஏற்பட்டிருக்கும் தொழில் குழப்பத்தால் பத்திரிகை சேற்றடி உழவில் அகப்பட்டவர். ஆனால் அதில் பழந்தின்று கொட்டை போட்டவர். எந்த வேலையானாலும் அவருக்கு லக்ஷியமில்லை. சளைக்காத மனது. உழைக்கத்தான் பூமியில் பிறந்திருக்கிறோமென்ற ரிஷபலக்ன கொள்கையைக் கையாண்டவர். உல்லாஸமாய்—பார்த்தால் அப்படித் தோன்றுது—தன் சநாதனக் குடுமியை காற்றில் ஆற்றிக்கொண்டு டிராமில் ஏற லஸ் பக்கம் போய்க்கொண் டிருந்தார். மேல் மாடவீதியிற் அரசமரத்தடியில் லஸ்ஸிலிருந்து வரும் நான் அவரைச் சந்தித்தேன்.

"என்ன ஐயா வழக்கம்போலக் குஷியாகக் காணுமே இன்று காலே?—என்ன சமாசாரம், ஏற்றம் உண்டா? அல்லது நமது நாட்டு முன்னேற்றம் போலத்தானு?"

"ஸ்ரீனிவாஸய்யங்காரைப் பார்த்தேன்"

"அவர் எதிர்க்கட்சி பேசினுரோ, பீஸில்லாமலே? உம் இடுப்பையும் ஒடித்து விட்டாற்போல இருக்கிறது."

"ஆமாம், என்னையும் ஒடித்து விடுவார் போலிருக்கிறது."

"ஆமாம் உம்மை யார்தான் ஒடிக்க முடியாது? மனதில் ஒரு முடிவுக்கு வந்துவிட்டு ஏன்இந்தப் பிரமுகர்களையெல்லாம் போய்க் கலக்கிறீர்—எக்கேடு கெட்டுப் போனாலும் போம், எனக்கென்ன?" பிறகு கொஞ்சம் சிரித்துக் கொண்டு "பேசாமல் போய்க் காரியத்தை ஆரம்பியும். நீர் சங்கல்பம் பண்ணியாய்விட்டது. ஏன் பிறகு கோழைத் தனம். நமது அடிமை நாட்டில் தீர்மான புத்தி கிடையாது."

ஸ்ரீமான் அய்யங்காருக்குச் சரியான எதிர்வக்கீல் வாதம் வேற்று முறையில் அவர் செய்தார். பழம் தின்று கொட்டை போட்டவர் அல்லவா, இந்த நண்பர். என் குழப்பமும் தெளிவை அடைந்தது.

* * * *

சென்ற ஆறு வருஷங்களாகத் தன்னுல் இயன்றமட்டும் 'பாரத மணி' கஷ்ட நிஷ்டூரங்களைப் பார்க்காமல் பணி செய்துகொண்டு வருகிறது. எண்ணிய திட்டம்போல் பல விதங்களில் பாரத மணியை நடத்த முடியவில்லை. ஆனால் இனிமேல் அவைகளை ஒருவாறு நிறைவேற்றிச் சேவைசெய்யலாமென்று நம்புகிறேன். இந்தத் தைர்யத்திற்கு முக்கிய காரணம், சரஸ்வதி பூஜாமலர் நண்பர்களால் நன்றாய் வரவேற்கப்பட்டிருக்கிறதுதான். இந்தப் பூஜாமலரை வெற்றிகரமாகச் செய்துவைத்த என் நண்பர்கள் எல்லோருக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கிறேன். தலைவர்களும், பத்திரிகைகளும், ரஸிகர்களும் இந்த மலரை நன்கு பாராட்டி என்னை உத்ஸாகப்படுத்தி எழுதியிருக்கின்றனர். முக்கியமாக அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * *

நமது நாட்டில் தலைசிறந்தவர்கள் எல்லோரும் கடைந்த மோரில் மிதக்கும் வெண்ணெய் போல், ஆங்கிலத்திலேயே மூழ்கி மிதந்து இன்றும் நிற்கிறுர்கள். அவர்களைத் தாய்ப் பாஷையில் ஈடுபடும்படிச் செய்வதுதான் 'பாரத மணி'யின் முக்கிய நோக்கம். மேன்மேலும் இதில்

# இல்லறம்

[வே. நாராயணன்]

குருகுல வாஸஞ்செய்து வித்யாப்யாஸம் முடிந்ததும், குரு சிஷ்யனைப் பார்த்து கடைசி முறையாக உபதேசஞ் செய்வதை ஓர் உபநிஷத் விளக்குகின்றது. 'உண்மையே பேசு; அறநெறிச் செல்; ஆசார்யனுக்குரிய பொருளைத் தக்ஷிணையாகக் கொடுத்துவிட்டு, சந்ததி யறுதபடி காத்துக்கொள்' என்று குரு உபதேசிப்பதையே, 'இல்லறமல்லது நல்லறமன்று' என்னும் மூதுரை உபதேசிக்கின்றது. பிராணிகள் எவ்வாறு தாயை ஆசிரயித்து ஜீவிக்கின்றனவோ அவ்வாறே ஸந்யாஸிகளும் கிருஹஸ்தனை ஆசிரயித்திருக்கின்றனர் என்றும், தேவர்களும் மனிதர்களும் பிதுருக்களும் கிருஹஸ்தனை அண்டிப் பிழைப்பதால், கிருஹஸ்தாசிரமமே மிகச் சிறந்தது என்றும், நான்கு ஆசிரமங்களுக்கும் காரணமாய் அவற்றைப் பாதுகாப்பது என்று அறிந்து கிருஹஸ்தாசிரமத்தை நன்கு போற்றுதல் வேண்டும் என்றும், வடமொழி நூல்கள் கூறுகின்றன. திருக்குறளும் பல பாடல்களால் இவ்வுண்மையை வற்புறுத்துகின்றது. 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்றும், 'இல் வாழ்வான் என்பான் மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை' என்றும் அவனே 'துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் நற்றுணை' என்றும், அவனால் மட்டுமே தன்னைப் போற்றிக் கொள்வதோடு நில்லாமல், 'தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல்' ஆகிய நால்வகையினரையும் போற்றுதல்கூடும் என்றும் திருவள்ளுவர் இல்லறத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். 'தாய் தந்தை ஆசார்யன் ஆகிய முக்குரவரையும் தெய்வமாகக்கொண்டு போற்றுதல் ஏனைய ஆசிரமங்களில் உள்ளவர்களாலும் முடியும் என்றாலும், அதிதியைத் தெய்வமாக் கொண்டொழுகுதல் இல்வாழ்வான் ஒருவனுக்கே சாத்தியமாம்; இவ்வுண்மையை வற்புறுத்துவதற்கே திருவள்ளுவர்,

இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

என்று எடுத்துக் காட்டுகிறார்.

தாய் தந்தையரைப் பேணுவதற்கும் சுற்றத்தாருக்கு உதவுவதற்கும் அனாதைகளையும் அதிதிகளையும் உலகத்தையெல்லாம் தாமாகவே பாவித்து, நான், எனது

---

பாரத மணி வெற்றி யடைய வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். சக்தியும், ஆதரவும் குறைந்த இந்த ஆறு வருஷகாலத்திலுங்கூட, 'பாரத மணி', ஆங்கிலத்தில் பிரஸித்தியும் தேட்டையும் அடைந்த சுமார் 15 நண்பர்களை முதல் முதலில் தமிழில் எழுதும்படியாகச் செய்து, அவர்கள் கட்டுரைகள் 'பாரத மணி'யில் வெளிவந்திருக்கின்றன. இப்படியே மேன்மேலும் தொண்டு செய்து தாய்ப்பாஷை ஏரில் உயர்தர மாடுகளையே கட்டித் திருந்த ஆழ உழுது இலக்கியப் பயிர் செய்யவேண்டுமென்பது தான் 'பாரத மணி'யின் லட்சியம்.

பல சாதகக் குறைவால் காலாகாலத்தில் 'பாரத மணி'யை வெளியிட முடியவில்லை. சொந்தத்தில் ஏரும் மாடுமில்லாமல் சாகுபடிக்கு ஒப்புக்கொண்ட ஒரு குடியானவன் போல் நான் இப்பொழுது கையால் கொத்தி நட்டுக் கொண்டு இருக்கிறேன். இருந்தாலும் இனிமேலாவது காலாகாலத்தில், அதாவது அந்தந்த தமிழ் மாதம் முதல் வாரத்தில் 'பாரத மணி' வெளிவரும்படியாய் முயலுகிறேன். இதை நிறைவேற்றத் தமிழ் நாட்டின் பூர்ண ஆதரவையும் எதிர்பார்க்கிறேன்.

* * * *

31-10-44.

மணி

என்னும் குறுகிய நினைப்புகளை விட்டுத் துறந்து உலக க்ஷேமத்தையே கருதி வாழுந் துறவிகளுக்கும் அனுகூலமாக வாழ விரும்புவோன் இல்லற வாழ்க்கையைக் கைக்கொள்ளுதல் அவசியம்; இதனைப் படித்துத் தேர்ந்த இளைஞர்கள் அறிந்து கொள்வதில்லை. ஒவ்வொருவனும் ஒரு வாழ்க்கைத் துணைவியைத் தேர்ந்துகொண்டு, அவளோடு இல்லறத்தை நடத்தினல் மட்டுமே, நாடு செழித்து மக்கள் அனைவரும் இனிது வாழ்வார்கள். மேலும், "தேவர்களுக்கு அவியுணவு அளிப்பதற்கும் யஜமானனுக்கு யாக பத்தினியின் துணைவேண்டும். ஆதலால், தேவர்களும் தேவர்களின் தலைவனுன இந்திரனும் தெய்வபக்தியுள்ளவன். நல்ல ஸ்திரீயை மணந்து கொள்வதையே விரும்புகிருர்கள்" என்று கூறி, தன்னலங்கருதாது பிற நலம் பேணும் பிராம்மணர்களைப் பெண்ணின் பெற்ருேரிடஞ் சென்று மகட்பேச அனுப்பவேண்டும் என்று விவாகச் சடங்கிலுள்ள மந்திரம் ஒன்று அமைந்துள்ளது. மணப்பெண்ணை மணமகன் கண்டதும் அவளை நோக்கிச் சொல்லும் மந்திரத்திலும், "கணவனுடைய நன்மையே கோருபவளாயும் அவனுக்கு யாதொரு துன்பமும் கொடுக்காதவளாயும் அகமும் புறமும் அழகு வாய்ந்தவளாயும் நன் மக்களாகிய அணிகலன்களோடு விளங்கக் கூடியவளாயும் கணவனுக்குத் துணையாகி தேவ பூஜை, உற்ருரையும் அதிதிகளையும் உபசரித்தல், பசு குதிரை யானை நாய் முதலியவற்றையும் போஷித்தல் ஆகிய இல்லறங்களை நடத்துபவளாயும் இருப்பாயாக" என்று இல்லறத் துறைகள் விளக்கப்படுகின்றன. கம்பராமாயணத்தில், பிராட்டி அசோக வனத்திலே அகதியாய்த் தவிக்கும்போதும் தான் இல்லாததால் இராமன் வருந்துவதையே நினைத்துப் பெரிதும் துன்புறுகிருள் என்று கூறப்பட்டுள்ளது. அப்பாடலின் முற்பகுதி வருமாறு:

அருந்துமெல்ல டகாரிட அருந்தும் என்றழுங்கும்
விருந்துகண்ட போதென் னுறுமோ என்றுவிம்
[மும்.

தீ வலம் வரும்போது மணமகன் தன் மனைவியை வீட்டிற்கு அழைக்கும் மந்திரமும், "நீ என் வீட்டிற்குறிய கிருக பத்தினியாகி எல்லாரையும் உன் வசப்படுத்திக்கொண்டு நல்லற வழிகளிலே நடக்குமாறு என்னையும் அறிவுறுத்துவாயாக" என்ற பொருளையுடையது. பாணிக்கிரகணம், ஸப்தபதி ஆகிய முக்கியச் சடங்குகளிலும் இல்லற வுண்மைகள் விளக்கப்பெற்றுள்ளன. "நன்மக்களைப் பெற்று என்னோடு விருத்தாப்பியமடைவதற்காகவே உன் கையைப் பற்றுகிறேன்; தெய்வந் தான் உன்னை என் இல்லாளாக உதவிற்று; இல்வாழ்க்கையை நடத்திய சான்ருேரும் தேவர்களுள் முன்னேனுன அக்கினிதேவனும் உன்னை எனக்கு உதவினுர்கள்" என்பது பாணிக்கிரகண மந்திரம். இருவருமாக அறிவிற்கு அதிதேவதையான ஸரஸ்வதி தேவியைத் துதிக்கிருர்கள். "அறிவுத் தெய்வமே! நீயே தனதானியங்களை அளிப்பவள். ஆதலால் நாங்கள் இருவரும் இல்லறத்தை நன்கு நடத்தும்படி அருளவேண்டும்; அதனுற் பயன் பெறுகின்ற இவ்வுலகோர் காண உன் புகழைப் பாடுகின்ருேம்" என்று அறிவுத் தெய்வத்தைப் போற்றுவதால் உலக நன்மையைக் கருதியே இல்வாழ்வான். பொருட் செல்வத்தையும் மக்கட் செல்வத்தையும் விரும்பிப் பெறவேண்டும் என்ற உண்மை வற்புறுத்தப்படுகின்றது. பொருட் செல்வம், திறமை, நோன்பு நோற்கும் ஆற்றல், இன்பம்,பசு முதலிய ஸௌபாக்கியங்கள், எக்காலத்திலும் மாருத ஆரோக்யம் முதலிய நலன்கள், தெய்வ வழிபாட்டிற்குரிய சௌகர்யங்கள் ஆகிய இவை ஏழும் ஏழு தடவை அடியெடுத்து வைக்கும்போது முறையே வேண்டப்படுகின்றன. முடிவாக மணமகன் மனைவியை நோக்கி "நாம் இருவரும் நண்பர்களாய் இடைபிரியாதவர்களாய் மேம்பட்டு விளங்கி, களிப்புற்ற மனமுடையவர்களாய் எல்லாச் சுகங்களையும் பெற்று இல் வாழ்க்கையை நடத்துவோமாக. இருவரும் சேர்ந்து ஆலோசித்து ஒன்றுபட்ட மனத்தவராகிச் செயற்

கரிய காரியங்களைச் செய்வோமாக" என்கிறான்.

மனிதனாகப் பிறந்தவனுக்கு மூன்று கடமைகள் உண்டு என்பது நம் முன்னோர் கொள்கை. இது வடமொழி நூல்களிற் போலவே, தமிழ் நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. தேவர்களை யாகம் முதலிய அறச்செயல்களால் வழிபட்டு நாம் முக்கடனுள் ஒன்றைத் தீர்த்துக் கொள்கிறோம்; அவர்களால் நமக்குக் கிடைக்கும் நன்மைகள் மிகப் பல; நமக்கு நல்லறிவு புகட்டும் முனிவர்களுக்குரிய கடனைத் தீர்த்துக் கொள்வதற்கு, நாம் கற்றறிந்த உண்மைகளைக் குரு சிஷ்ய பரம்பரையாக நிலைநாட்டுவதைத் தவிர வேறு வழி இல்லை. மூன்றாவதான கடன் பிதுருக்களுக்குச் செலுத்த வேண்டும். நாம் நல்லவர்களாக வாழ்ந்தால் மட்டும் போதாது; உலகத்திலே நன்மக்களின் எண்ணிக்கை குறைவு படாதவாறு நாமும் நன்மக்களைப் பெற்று நல்லறம் நிலைநிற்குமாறு உதவவேண்டும். நல்ல குழந்தைகளைப் பெறவேண்டும் என்ற எண்ணமே விவாகஞ் செய்து கொள்வதின் கருத்தாக இருக்கவேண்டும். மனத்தில் எழும் வேட்கைகளையெல்லாம் ஒருவாறு அடக்கி ஒருமுகப் படுத்தினால் அவ்வேட்கையைத் தணித்துக் கொள்வதிலுள்ள இன்பமும் சிறக்கும், நற்பயனும் நிச்சயமாக விளையும்; இதுவே இல்லற ரகசியம்; மற்றைத் தருமங்களைச் செய்வதற்கு விரதங் கொள்வதைப்போல கிருகஸ்த தருமங்களைச் செய்வதையும் விரதமாகக் கைக்கொள்ள வேண்டும். அப்படிக் கொண்டால், 'இல்லறமல்லது நல்லற மன்று' என்னும் மூதுரையின் உண்மை நன்கு புலப்படும். தன்னைத்தானே உவக்கும் தனியாளாக இருப்பதை விடுத்து, தொடக்கத்தில் வாழ்க்கைத் துணையையும் பிறகு மக்கள், உற்றார்உறவினர், அண்டிய மனிதர்கள், பிராணிகள், அதிதி, துறவி முதலியவர்களையும் இன்புறச் செய்வதையே தனக்கு இன்பமாகக் கொண்டு வாழ்ந்து, இறுதியிலே எல்லா வுயிர்களையும் அபயமளித்துக் காக்குந் துறவி நிலையுறுவதற்கும் வழிகோலுவதாலன்றோ, 'இல்லற மல்லது நல்லறமன்று' என்று இல்லறம் சிறப்பிக்கப் பெற்றது.


---

## நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

### 1943 ஆு வரவு செலவு கணக்கு ரிபோர்ட்

194?, டிசம்பர் 31-ந் தேதி முடியவுள்ள நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் வருடாந்தர வரவு செலவுக் கணக்கு ரிபோர்ட் சில அரிய பெரிய விஷயங்களை நமக்கு தெரிவிக்கிறது.

சென்ற வருஷம் எடுத்துக்கொள்ளப் பட்ட தொழிலில் ரூ. 2,83,35,791 வரை வருமானம் கிடைத்துள்ளது. இது இதற்கு முந்திய வருஷத்தைவிட இரு மடங்காகும். இக்காலத்தில் மொத்த பிரீமியத்தினால் ரூ. 67 லட்சம் வருமானம் கிடைத்துள்ளது. இத்தொகை முந்திய வருஷத்தைவிட ரூ. 10 லட்சம் அதிகமாகும். மேலும், வட்டி, டிவிடன்ட், வாடகை இவைகளால் ரூ. 17,68,501 வருமானம். ஆனால் அக்காலத்தில் கம்பெனிக்காகச் செலவிடப்பட்ட தொகையோ மிக மிகக் குறைவாகும். அதாவது லாபத்தில் 27·5 சதவிகிதம் தான் செலவிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்தே கம்பெனி நிர்வாகஸ்தர்களின் திறமையும், சிக்கனமும் தெளிவாகத் தெரியும். எல்லோரும் இன்புற்றிருக்கவே சேவை செய்துவரும் இக்கம்பெனி மேன்மேலும் அபிவிருத்தியடைவதாக.




# விசாரதன்

[ல. ரா. விசுவநாத சர்மா, கீரனூர்]

சாயாபுரம் என்பது ஒரு ஜெமீன். அந்த ஜெமீன்தார் ரொம்பவும் நல்லவர். அவருக்கு வெகு காலம் வரையில் குழந்தையே பிறக்கவில்லை. தெய்வத்தை வேண்டினார். ஏழை எளியவர்களுக்குப் பல தான தருமங்கள் செய்தார். ஜனங்கள் அவரை மனமார வாழ்த்தினார்கள். தெய்வமும் அருள் புரிந்தது. அதனால் ஜெமீன்தாருக்கு ஒரு பிள்ளைக் குழந்தை பிறந்தது. அதை மிகவும் செல்லமாக வளர்த்தார்கள். குழந்தையின் பெயர் விசாரதன்.

விசாதரனின் எட்டாவது வயதிலேயே பெற்றோர்கள் காலமாய் விட்டார்கள். விசாதரனுக்கு ஜெமீன் வழக்கப்படி பட்டம் சூட்டினார்கள். எல்லோரும் அவனிடம் அபிமானத்துடனும் எஜமான் என்பதற்காக பயபக்தியுடனும் நடந்துகொண்டார்கள். ஆனால் விசாரதனோ அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளவில்லை. அவன் குணமே அலாதியாக இருந்தது. முரட்டு சுபாவம். 'தான்' என்கிற அகம்பாவம். பெரியோரிடம் கொஞ்சங்கூட மரியாதை கிடையாது. ஏழை எளியோரிடம் பச்சாதபம் கிடையாது. அவர்களைக் கண்டால் ஏளனம் செய்வது, நிந்திப்பது, அடித்து இம்சிப்பது வழக்கமாக இருந்தது.

தெய்வ பக்தியே இல்லாத விசாரதன் நாளுக்கு நாள் துஷ்ட குணத்தில் வல்லவனானான். ஜெமீன் மந்திரி முதலிய பெரியோர் எவ்வளவு தூரம் அவனை நல்வழிப் படுத்த முயன்றும் பயனில்லை. உபாத்தியாயர்களையெல்லாம் அடித்துத் திட்டி உபத்திரவம் செய்ததால் ஒருவரும் படிப்புச் சொல்லித்தர முன்வரவில்லை. விசாரதனும் படிக்கத் தயாராயில்லை. வயது பதினைந்தாகியும் எழுத்து வாசனையற்ற ஒரு மிருகமாக அவன் விளங்கினான் பாவம்; ஜெமீன் குடிபடைகளுக்கு வரவர இம்சைதான் அதிகரித்தது. அவர்கள் செய்வகையறியாது திகைத்தனர். சிலர் ஊரை விட்டே ஓடினர். மற்றவர்கள் கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு "தெய்வந்தான் விசாரதனுக்கு நல்ல புத்தி கற்பிக்க வேண்டுமென்று தினம் தெய்வத்தைப் பிரார்த்தித்த வண்ணமிருந்தனர்.

ஒருநாள் காட்டு மார்க்கத்தில் குதிரையின் மேல் போய்க்கொண்டிருந்தான் விசாரதன். வழியில் ஒரு உடும்பு ஓடிற்று. குதிரை வருவதைப் பார்த்ததும் சற்று நின்றது. விசாரதன் அதைச் சமீபித்ததும் "ஓ! இது ஒரு விநோதமான பிராணி. கிளி, மயில், புறா முதலிய பட்சிகளைப் போலும், மான்குட்டி, நாய், முயல் முதலியவைகளைப்போலவும் இதையும் வைத்துக்கொண்டு விளையாடலாம்!" என்று மனதில் நினைத்துக்கொண்டான். ஆனால் இறங்கிப் போய் அதைப் பிடிக்கவில்லை. தான் ஒரு இளைய ஜெமீன்தார் என்கிற மமதையோடு "ஏய்! நம் அரண்மனைக்குப் போ!" என்று கட்டளையிட்டான். உடும்பு எங்கோ பார்த்துக்கொண்டு தலையை ஆட்டிய வண்ணம் ஓடிற்று. "சரி, இது அரண்மனைக்குப் போய்

விடும்" என்கிற எண்ணத்துடன் விசாரதன் தன் வழியே சென்றான்.

காட்டைச் சுற்றிவிட்டு அரண்மனையை யடைந்த விசாரதன் அங்கே உடும்பைத் தேடினான். காணவில்லை. எல்லோரையும் விசாரித்தான். ஒருவரும் உடும்பு வந்ததாகச் சொல்லவில்லை. கோபம் பொங்கிற்று அவனுக்கு. கல்லாலும் கழியாலும் எதிர்ப்படுவோரையெல்லாம் அடித்துத் துவம்சம் செய்துவிட்டு, "சரி, இன்று இரவு எத்தனை நாழிகையானாலும் உடும்பைப் பிடித்துக் கொண்டுதான் வீடு திரும்புவது" என்கிற வைராக்யத்துடன் குதிரை யேறிப் புறப்பட்டான்.

அப்பொழுது அஸ்தமன ஸமயம். விசாரதன் குதிரையிலமர்ந்தபடி இங்குமங்குமாக அலைந்துகொண்டிருக்கையில் ஒரு புதரிலிருந்து புறப்பட்டு ஓடி ஒரு சிறு வளைக்குள் புகும் உடும்பைக் கண்டான். ஒரு புறம் அதன்மீது கோபமும், மற்றொரு புறம் தனக்கேற்பட்ட வெற்றியில் சந்தோஷமுமாக குதிரையிலிருந்து கீழே குதித்தான் விசாரதன். ஓட்டமாக ஓடி வளைக்குள் கையை விட்டான். வளையோ மிகவும் சின்னது. உடும்புக்கே அதில் இடம் போதவில்லை. விசாரதனின் கையுள் நுழையவே உடும்பு திணறிப்போய் அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. வெகு சந்தோஷத்துடன் அதை யெடுத்துக்கொண்டு குதிரையேறி அரண்மனையை அடைந்தான். விசாரதன் உடும்பைக் கீழே போட முயன்றான். விழவில்லை. பலங்கொண்ட மட்டும் உதறினான். அது அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. விசாரதனின் முயற்சி யெல்லாம் வீணாயிற்று. பிறரைக் கூப்பிட்டுத் தன் கையினின்றும் உடும்பை விடுவிக்கும்படிக் கூறினான். சிலர் பிரயாசித்தார்கள். முடியவில்லை. அப்படித் தோல்வியுற்றவர்களை விசாரதன் காலால் எட்டி உதைத்தான். அதைக் கண்டு மற்றவர்கள் அவன் கண்ணில் படாமல் ஒளிந்தனர்.

இரவு வெகு நேரமாயிற்று. விசாரதன் உடும்போடு மல்யுத்தம் செய்து களைத்தான். பசியும் களைப்பும் அதிகரித்தது. உடும்பு கையை விட்டு நீங்கவே நீங்காதோ என்ற பயமும் ஒருபுறம் ஏற்பட பிறரைக் கெஞ்ச ஆரம்பித்தான். பாவம், அவன் கண்களில் கண்ணீர்கூட வந்துவிட்டது.

ஊரில் எல்லோருக்கும் விசாரதனின் சங்கடமான நிலைமை தெரிந்துவிட்டது. பிரமுகர்கள், பெரியோர்கள் எல்லோரும் அரண்மனையில் வந்து கூடினர். "விசாரதனைத் திருத்தி நல்வழிப்படுத்த இது தான் தக்க சமயம்" என்று தீர்மானித்த அறிஞர்கள் ஒரு முடிவு செய்தனர். அதன்படி விசாரதனைக் கோயிலுக்கு அழைத்துச்சென்று அங்குள்ள சுவாமியைக் காண்பித்து அந்தத் தெய்வத்தினிடம் பக்தியுடனும், பெரியோரிடம் மரியாதையுடனும் இருந்தால்தான் இடர் எதுவும் வராது : தப்பித் தவறி வந்தாலும் தெய்வம் காப்பாற்றும் என்றும், மனிதனுக்குப் படிப்பு அவசியம். படிப்புள்ள மனிதனுக்குப் உடும்பை இப்படிக் கையினால் பிடிக்கக் கூடாதென்று தெரியும் என்றும் உனக்குப் படிப்பு வாசனையே இல்லாததால்தான் புத்தி இப்படிப் போயிற்று என்றும் எடுத்துரைத்தனர். விசாரதன் அதையெல்லாம் உபதேசமாக ஏற்றுக் கொண்டான். தெய்வத்தை வணங்கித் துதித்தான். பெரியோர்களைப் பணிந்தான். இனிமேல் ஒழுங்காக நடந்து கொள்வதாகவும், கல்வி பயில்வதாகவும் ஒப்புக்கொண்டு மனம் கரைந்து கண்ணீர் விட்டான்.

பிறகு ஒரு பெரிய அண்டாவில் ஜலம் நிரப்பி அதில் ஒருவித மருந்தை ஊற்றி விசாரதனின் வலது கையை அதில் அமிழ்த்தவே மருந்து நெடியினால் உடும்பு வாயைப் பிளந்துகொண்டு பிராணனை விட்டது. அதை அப்புறப்படுத்திவிட்டு எல்லோரும் அரண்மனை சென்றனர். அன்றுமுதல் விசாரதன் அடியோடு மாறிவிட்டான். கல்வியைக் கவனத்து

டன் பயின்றான். பெரியோர்களைக் கண்டால் மரியாதையாக நடந்துகொண்டான். தினசரி ஆலயம் சென்று தெய்வத்தை வழிபட்டான். ஏழை எளியவர்க்குப் பல உபகாரம் செய்தான். நாளடைவில் அவன் 'விசாரதன்' என்ற பெயருக்கு ஏற்றவாறு கலைகளில் வல்லவனானான்.

---

## சினிமா விமர்சனம்

### தாஸி அபரஞ்சி

ஆங்கிலப் படமென்றால் 'மெட்ரோ கோல்டுவின் மேயர்' கம்பெனியும், ஹிந்திப் படமென்றால் 'பிரபாத்', 'பிரகாஷ்' முதலிய கம்பெனிகளும் ஞாபகத்துக்கு வரும். அதேபோலத் தமிழ்ப் படமென்றால் 'ஜெமினி' ஸ்டுடியோதான் நம் கண்முன்பாக வந்து நிற்கிறது. ஏனென்றால் இதுவரை ஜெமினி தயாரித்த படம் ஒன்றாவது சோடைபோனதில்லை. 'நந்தனார்' அபாரமாக இருந்தது. அதைவிட அபாரமாக இருந்தது 'மங்கம்மாள் சபதம்'. இவ்விரண்டையும் தூக்கியடிக்கிறது 'தாஸி அபரஞ்சி!'

கதையோ நம் நாட்டுப் பழைய விக்கிரமாதித்தியன் கதை. விக்கிரமாதித்தியனின் கூடுவிட்டுக் கூடுபாயும் கதையை நம் தமிழ் நாட்டில் எல்லோருமே அறிவார்கள்.

இப்படத்தில் நடிப்புக்கு முதல் ஸ்தானம் சுந்தரிபாய்க்குத்தான் கொடுக்க வேண்டும். தாஸியின் வேலைக்காரியாக நடிக்கும் இவர் ஒரு பாட்டின் மூலம் எல்லோருடைய மனதையும் அபகரித்துக்கொண்டு விடுகிறார். புஷ்பவல்லியின் தமிழ் விரஸமாக இல்லாது தமிழ் ஸ்திரீயொருவள் பேசுவதுபோலவே இருக்கிறது. கம்பீரமான நடிப்பு. ஆயிரம் [illegible] ரஞ்சிக்கு ஏற்ற பாத்திரமே புஷ்பவல்லி. எம். கே. ராதா தேவலை. ராணியாக நடிக்கும் என். ஏ. சுந்தரம் சுமார்தான். மற்றும் கொத்தமங்கலம் சீனு, சுப்பு, நாராயணராவ் முதலியவர்கள் இயற்கையாக நடிக்கின்றனர்.

எல்லாவற்றையும்விட மிகவும் சந்தோஷமளிப்பது இப்படத்தில் கர்நாடக சங்கீதத்திற்குப் பிரதான ஸ்தானம் அளித்திருப்பதுதான். பாடப்படும் மூன்று ராகமாலிகைகள் காதில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கின்றன. மற்றொன்று தாஸி கதையாக இருந்தாலும் விரஸமில்லாது படம் மேன்மையான முறையில் பிடிக்கப்பட்டிருப்பதுதான். கடைசியாக கதையளக்காமல் கச்சிதமாக இரண்டரை மணி நேரத்தில் படம் முடிவது. 'டெம்போ' என்று சொல்லும்படியான விறுவிறுப்பு ஆரம்பமுதல் கடைசிவரை குறையாமலிருக்கிறது. ஜெமினி ஸ்டுடியோவின் உயர்ந்த டெக்னிக்கை நாம் இப்படத்தில் காணலாம்.


மொத்தத்தில் பொழுது போக்குக்கு இது ஒரு ஸ்வாரஸ்யமான படம். குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை எல்லோரும் பார்த்து ரஸிக்கலாம்.

---



எந்த உணவுப் பொருள்களை நீ அதிகம் விரும்புகிறாயோ

# அவற்றினால் அதிக பலத்தைத் திரட்ட முயற்சிக்கவும்!








விருப்பத்துடன் நீங்கள் சாப்பிடும் உணவுப்பொருள்களை அதிக ஊக்கந் தரக்கூடியவைகளாகச் செய்யுங்கள். நமக்குப் பிரியப்பட்ட சில உணவுப் பொருள்கள் அதிக நன்மை அளிப்பதில்லை என்று உங்களுக்குத் தெரியுமா? அவைகள் பசியைத் தணிக்கின்றன. ஆனால் சிறிது ஊக்கமட்டும் அளிக்கின்றன—தேவையான அளவு ஊக்கத்தைக் கொடுப்பதில்லை. இது ஒரு திடுக்கிடக்கூடிய போசனைதான். ஆரோக்கியம், சந்தோஷம், திறமை—இவைகளெல்லாம் ஊக்கத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளன. சாப்பாடு நம் தேவைக்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுக்காவிட்டால் ஏற்படும் தீமைகள் பல. எல்லா உணவுப் பொருள்களும் சிறிதளவு ஊக்கத்தை அளிக்கின்றன. ஆனால் தினசரி சாப்பிடும் சில உணவுப்பதார்த்தங்கள் சொல்ப ஊக்கமளிக்கக் கூடியவை. இம்மாதிரியான சாப்பாட்டுக்கு ஊக்கத்தைக் கொடுக்கவேண்டுமானால் அதிக ஊக்கமளிக்கக் கூடியபதார்த்தங்களைச் சேர்க்கவேண்டும். வைடமின் நிறைந்த டால்டாவினால் சமைப்பது அனுகூலத்தைக் கொடுக்கிறது. இயற்கையளிக்கும் ஊக்கத்தைக்கொடுக்கக்கூடிய சத்துப் பொருள்களை டால்டா கொடுக்கிறது. எல்லா உணவுப்பதார்த்தங்களையும் டால்டாவினால் சமையல் செய்வது நலம்.

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக் புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியது) உணவுப்பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. உங்களிடம் ஒரு பிரதி இருக்க வேண்டியது அவசியம். Dept. C109 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்




வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HVN. 34-23-40 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.




Edited & Published by K. S. Venkataramani at No. 34, Alamelu Mangapuram, Mylapore, Madras Printed by T. V. Volaganatha Mudaliar, Sadhu Press, 12, Ganapathy Mudali Street, Royapett.. Madras